

# ஞானச்சுடர்

ஆனி

2011



ௐ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ



# குறள்வழி

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

பொருள் : தினமும் தன்னிடம் வருகின்ற விருந்தினரைப் பேணி ஒழுகும் குடும்ப வாழ்க்கை வறுமையால் வருந்துவது இல்லை. [83]

அகனமர்ந்து செய்யா ளுறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

பொருள் : முகம் மலர்ந்து விருந்தினரை உபசரிப்பவனது வீட்டில் இலக்குமி மனமகிழ்ந்து வாழ்வாள். [84]



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### யோகநெறி


ஒன்றா யிரண்டாகி ஒருமூன்றாய் நான்கைந்தாய்
நின்ற பராபரத்தைத் - தங்கமே
நீயென்று உணர்ந்திடடி 17

கண்டுசர்க் கரைதேனும் கனிரசமும் சேர்த்தொன்றாய்
நின்றசுவை தெவிட்டுமெடி - தங்கமே
நிறைந்தசிவந் தெவிட்டாதெடி 18

மண்டலங்கள் மூன்றினிலும் மருவிநின்ற மெய்ப்பொருளைக்
கண்டவர்கள் சொல்லாரெடி - தங்கமே
காட்சியெல்லாங் கடந்ததெடி 19

ஆறத்து வாக்குகளுக்கும் அப்பாலாய் இப்பாலாய்
மாறாமல் இருக்குதெடி - தங்கமே
மதிரவியை யொன்றாக்கெடி 20

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்



வெளியீடு - 2

சுடர் - 162

2011 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வாழ்வு வளம்பெற... | செல்வி ச. சர்மிளா | 01- 04 |
| பசுவை வணங்கி..... | இ. ஸ்ரீதரன் | 05- 06 |
| இருக்கும் இடம்தேடி.... | செல்வி பா. வேலுப்பிள்ளை | 07- 09 |
| பரிபாடல் தரும் பக்தி... | சிவ சண்முகவடிவேல் | 10- 11 |
| கந்தனே கலியுகத்.... | கே.வி. குணசேகரம் | 12- 14 |
| சிறுவர் கதைகள் | - | 15- 16 |
| வித்தகா! உன்....... | திருமதி பா. சிவனேஸ்வரி | 17- 20 |
| புதுமைக்கும் வழிகாட்டியாக.... | இரா. சாந்தன் | 21- 23 |
| கண்ணே கருத்தே... | முருகவே பரமநாதன் | 24- 27 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 28- 30 |
| ஆனந்தம் என்பது என்ன? | ஜக்கி வாசுதேவ் | 31- 32 |
| தகவற் பக்கம் | - | 33- 35 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 36- 38 |
| விநாயக வழிபாட்டின்... | செல்வி த. அம்பாலிகா | 39- 41 |
| நித்திய அன்னப்பணி | - | 42- 43 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 44- 45 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 46- 47 |
| இருபாலை சேனாதிராய... | திருமதி சி. யோகேஸ்வரி | 48- 50 |
| இந்து மதத்தின்.... | சி. நற்குணலிங்கம் | 51- 52 |
| பழந்தமிழ் இலக்கியத்தில்... | நீர்வைமணி | 53- 54 |
| செய்திச் சிதறல்கள் | - | - 55 |
| வாழ்க அந்தணர்.... | ஆ. மகேசு | 56- 59 |
| சத்தியமே சாயி.... | செ. ரவிசாந் | - 60 |
| சந்நிதியான் | அற்புதன் | 61- 63 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 64- 68 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



# ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

வைகாசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சி. சிவபால சிங்கம் (கிராம சேவக உத்தியோகத்தர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆற்றங்கரையானின் அருளாட்சி நிறைந்திருக்கும் இவ்வாச்சிரமத்தின் பணிகள் யாவும் சிறப்பானதாகவும், தூய்மையானதாகவும், ஏதோ ஒருவகையில் மற்றவர்களும் பயன்பெறவேண்டும் என்ற நோக்கோடு செயலாற்றுவதனாற்றான் ஆச்சிரமமும், ஆச்சிரமத்தின் பணிகளும் மென்மேலும் வளர்ந்துகொண்டு செல்கின்றது என்பதை சபையோருக்கு எடுத்துக்கூறினார்.

அடுத்து தனது உரையில், இங்கு வெளியிடப்படும் "ஞானச்சுடர்" சஞ்சிகையானது அனைத்து சைவ மக்களுக்கும் ஓர் ஒளி விளக்காக பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது என்று கூறியதோடு இனிவரும் காலங்களிலும் இச்சுடர் பிரகாசிக்கவேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

161ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை திரு துரை கணேசமூர்த்தி ஆசிரியர் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில், ஞானச்சுடர் சஞ்சிகையானது ஆற்றங்கரை வேலவனது அருளாட்சி நிறைந்த ஓர் சஞ்சிகையாக மக்கள் மத்தியில் திகழ்கின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில், இந்நூலானது அழகிய அட்டைப் படத்துடனும், நிறைந்த ஆன்மீகக் கருத்துக்களுடனும், தெய்வீக சிந்தனையுடனும் வெளிவருகின்றது என்று கூறினார். தொடர்ந்து அவர் கூறுகையில், இந்நூலை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்து இன்புறும் வகையிலும், பாமர மக்களுக்கும் விளங்கக் கூடிய மொழிநடையிலும், மாதம் தவறாமல் வெளிவரும் ஒரு சஞ்சிகையாக அகில உலகம் முழுவதும் திகழ்கின்றது என்று கூறியதோடு, இனிவருங் காலங்களிலும் ஞானச்சுடர் சஞ்சிகையின் மூலம் அனைவரும் பயன்பெற்று நற்பிரஜைகளாகத் திகழவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

இறைவன் திருவடியை இடைவிடாது சிந்திப்பவர் அடியார். நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் எவர் ஒருவர் சிவசிந்தனையுடன் பற்றற்ற வகையில் தனது கடமைகளை நிறைவேற்றுகிறாரோ அவரை நாம் அடியவர் என்று சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.


எண்ணுபவர் மனம் கோயிலாகக் கொண்டவன் இறைவன். அடியவர் உள்ளத்திலே இறைவன் வீற்றிருந்து அருள்பாலிப்பான். இறைவன் தொண்டர் உள்ளத்து ஒடுக்கம். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே என்பது மூதாட்டி ஔவையின் வாக்கு. இதனையே மாணிக்கவாசகரும் நன்கு உணர்ந்து "அடியார் நடுவில் இருக்கும் அருளைப் புரியாயே" என்று இறைவனை விளித்து பாடுகின்றார்.

அடியார் நடுவுள் இருந்து அவர்களுக்குச் சேவை செய்வதே பெருந்தொண்டு. அவர்களைப் பணிந்து போற்றுதல் இறை வழிபாட்டிற்கு ஒப்பானதாகும். அடியார் கூட்டத்தோடு நாமும் இணைந்துவிட்டால் அச்செயல்மூலம் இலகுவாக இறையருள் பெறுவதற்கு எமது மனம் தகுதிபெற்றுவிடும்.

இவ்வகையான செயற்பாட்டிற்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் அறுபத்துமூவர் குருபூசையைக் குறிப்பிடலாம். அறுபத்து மூன்று நாயன்மாரை நினைவுகூரும் முகமாக மண்டபத்தில் அறுபத்துமூன்று அடியாரை இருத்தி அவர்கள் மனதில் இறை சிந்தனையை ஏற்படுத்துவதன்மூலம் இடம்பெறும் குருபூசைச் சிறப்பை சொல்லமுடியாது. அப்பூசையில் பங்குபற்றும் அடியார்களின் மகத்துவம் பெரிதல்லவா! அப்படியான அடியார்களின் ஒன்று கூடலில் இறைவன் அருள் பாலிப்பான் என்பது திண்ணம். அடியார் பூசையும் சிவபூசை நேசமும் என்றும் எமது வாழ்வினை வளப்படுத்தும். நாமும் அவனருளால் அவன் தாள் வணங்குவோம்.

உ

# புகழ் மயில் வாகனனே!



சூரனை யடர்த்த சுடரிலை நெடுவேல்
சுந்தரா சுப்ரமணியா
சுரற்கு அரசை மீள அளித்த
சுவாமி குமரையா
நாரணன் மருகா குஞ்சரி யோடு
வள்ளியை மணந்தவனே – உனக்கே
மாவிளக் கிட்டே மோதகம் அமிர்தம்
அனைத்தையும் படைத்திடுவோம்
ஆரணம் போற்றும் செல்வச்சந்நிதி
ஆச்சிர மச்சபையார்
அன்னமிடுவோர் அத்தனை பேரும்
அவராய் நீயென்றே
பூரண மாக ஆரத்தி யெடுப்போம்
புண்ணியா எமைக் காப்பாய்
பொருவில் சேவற் கொடியுடை வேலா
புகழ் மயில் வாகனனே!

முதுபெரும்புலவர் கலாபூஷணம்,
ஆசிரியர் வை.க. சிற்றம்பலவனார்.

# ஆனிமாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**அ. பரமநாதன்**
(சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)
**திரு Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**திரு பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)
**திரு ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(இராமலிங்கம்வீதி, உடுவில்))
**திரு த. ஜெகரெத்தினம்**
(விஜிதா ரெக்ஸ், யாழ்ப்பாணம்)
**திரு கந்தையா ஏகாம்பரம்**
(புறூடிலேன், அரியாலை)
**திரு சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)
**திரு சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)
**திரு ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)
**செல்வி S. ஐடா**
(புலோலி தெற்கு, புலோலி)
**திரு அ. கணேசமூர்த்தி**
(உரும்பராய் வடக்கு, உரும்பராய்)
**திரு வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)
**உரிமையாளர்**
(குகன் ஸ்ரோர்ஸ், ஊரெழு மேற்கு)
**திருமதி செ. தவமணி**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)
**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**தலைவர் / செயலாளர்**
(அளவெட்டி ப.நோ.கூ. சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)

**உரிமையாளர்**
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு கு. சோதிராசா**
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)
**திரு த. கருணாகரன்**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**உரிமையாளர்**
(பேபி போட்டோ, கந்தர்மடம்)
**திரு ப. இராசலிங்கம்**
(செட்டியமடம், வட்டுக்கோட்டை)
**திரு மு. வைகுந்தவாசன்**
(இலங்கைவங்கி, அச்சுவேலி)
**திரு S. விக்னேஸ்வரராசா**
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)
**திரு சி. இராமகிருஸ்ணா ஆசிரியர்**
(வடமராட்சி கணிதக் கல்வி மூலவள நிலையம், கரணவாய்)
**திரு இ. சண்முகலிங்கம் J.P**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**திரு மு. இராசேந்திரா**
(தும்பளை, பருத்தித்துறை)
**திரு பொ. வெங்கடேஸ்வரன்**
(நகரசபை, பருத்தித்துறை)
**வே. சிவகுமார்**
(மண்டான், கரவெட்டி)
**திரு வ. பாலசிங்கம்**
(கிராம சேவையாளர், கரணவாய்)
**திரு ம. ஸ்ரீஸ்கந்தராசா**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**உரிமையாளர்**
(வேலழகன் இரும்புக் களஞ்சியம், சுண்ணாகம்)
**திரு இ. சரவணபவன்**
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(அம்பிகாபதி பான்ஸ் கூட், யாழ்ப்பாணம்)
**திரு கோ. யோகலிங்கம்**
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
**திரு சி. நவரெத்தினம்**
(துவாரகை, கரணவாய்)
**திருமதி அ. குணநாயகம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**திரு ப. சிவராசா**
(தூதாவளை, கரணவாய்)
**திரு செ. சிவானந்தம்**
(கிராம சேவையாளர், புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**திருமதி அருள்நங்கை சண்முகநாதன்**
(புதிய உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம்)
**திரு சி. தங்கராசா**
(ஆவரங்கால், புத்தூர்)
**திரு மார்க்கண்டு கருணாநிதி**
(நடராசா புடவைக்கடை, அச்சுவேலி)
**திரு S. குணராசா**
( தாளையடிலேன், திருநெல்வேலி)
**திரு உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)
**திரு பா. அமிர்தலிங்கம்**
(அமிர்தா தொலைத்தொடர்பகம், ஊரெழு கிழக்கு)
**திரு கந்தையா நடராசா**
(இடைக்காடு, அச்சுவேலி)
**திரு அ. அருந்தவசீலன்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**திரு வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ. சங்கம்)
**திருமதி கற்பகமலர் இரத்தினசிங்கம்**
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)
**திரு பொ. பாஸ்கரன் J.P**
(சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை)
**திரு கு. சிவபாலராஜா**
(பொது சுகாதாரப் பரிசோதகர், நல்லூர்)
**திரு இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
**திரு A. விமலதாஸ்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**திரு L.S ஜெகநாதன்**
(நாதஸ்வர வித்துவான், உடுப்பிட்டி)
**திரு க. ஆனந்தராசா**
(வதிரி, கரவெட்டி)
**திரு இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)

**திரு செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)
**திரு க. கந்தவனம்**
(ஜெயமலர் அகம், கப்பூது, கரவெட்டி)
**திரு செல்லத்துரை தங்கராஜா**
(அன்னை இல்லம், உரும்பராய்)
**திரு வே. கணபதிப்பிள்ளை**
(குலானை, கரவெட்டி)
**திரு S. நேசன்**
(கேணியடி, யாழ்ப்பாணம்)
**திருமதி இராசரத்தினம் அருந்ததி**
(போதராமடம், துன்னாலை)
**திரு Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, அல்வாய்)
**திருமதி T. நடராஜா**
(சந்தனத்தரை, உடுப்பிட்டி)
**திருமதி சிதம்பரநாதன் சரஸ்வதி**
(குமுளடி, அல்வாய்)
**திரு சி. ஆனந்தராசா**
(ஆலடி, பொலிகண்டி)
**திரு சி. சிறீகாந்தன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
**திரு ஆ. சோமசுந்தரம்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**திரு நடராசா செவ்வேள்**
(தணிகை, நெல்லியடி)
**திரு க. பூலோகரட்ணம்**
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
**திரு நா. வடிவேஸ்வரன்**
(தும்பளை பருத்தித்துறை)
**திரு சு. கிருபானந்தன்**
(கே.கே.எஸ் றோட், இணுவில்)
**திரு ஆ. சிவராசா**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)
**திரு செ. மகேந்திரவர்ணன்**
(கற்பகப் பிள்ளையார் கோவில்லேன், உரும்பராய்)
**அதிபர்**
(மத்திய கல்லூரி, அச்சுவேலி)
**திரு K.T. சிவராசா**
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)

# வாழ்வு வளம்பெற...

செல்வி ச. சர்மிளா அவர்கள்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதற்கிணங்க ஆன்மாக்கள் லயிக்கும் இடம் ஆலயம் ஆகும். இந்து சமயப் பண்பாடுகளை ஒன்றிணைத்து மக்கள் வாழ்க்கைக்கு ஆதாரசக்தியாக ஆலயங்கள் விளங்குவதைக் காணலாம். மனதை ஒருமுகப்படுத்தும் முகமாக மக்கள் விரதங்களை அனுஷ்டித்து தமது மனக் கஷ்டங்களை இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்காக ஆலயங்களுக்குச் செல்வதைக் காணலாம்.

"அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு" என்று தத்துவ நூல்களும் சமய ஞானிகளும் உரைப்பது வழக்கம். அண்டமென்பது இந்தப் பிரபஞ்சம் பிண்டம் என்பது நமது உடல், அண்டங்கள் யாவற்றிலும் பரந்து விரிந்து வியாபித்திருக்கும் பேரருட் சக்தி நிறைந்த இறைவன். எமது உடலிலும் அவ்வாறே உறைந்திருக்கிறான்.

"நோக்கிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"
"விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்"
"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"

எனவரும் சிவபுராண அடிகள் சிவபெருமானின் பெருமை நுண்மைகளைப் புலப்படுத்துவன. இத்தகைய இறைவனை அண்டத்தில் வியாபித்திருக்கும் ஆண்டவனைப் பிண்டமாகிய நமது உடலிலே கண்டுணர்ந்து அனுபவித்து வழிபட்டு ஆனந்திப்பது ஞானிகள் செயல். இது யோக ஞான மார்க்கங்களின் பாற்பட்டது.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே" என்றும்

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப் பூசனை ஈசனார்க்குப் போற்ற விக்காட்டினோமே" என்று வரும் திருமுறைமலர்கள் இதனை கைவருதல் கடினமென்பதால் சரியை, கிரியை என்னும் முதற்படிகளை அமைத்தனர் சான்றோர். சரியைத் தொண்டுகளையும் கிரியை வழிபாடுகளையும் நிகழ்த்தி இறைவனை அடையும் இறைபத மார்க்கங்களுக்குச் சில சாதனங்களும் அவசியம் ஆகின்றன. இன்னவழியாக இன்ன இடத்துக்குப் போகலாம்" என்ற பாதையைச் சுட்டி நிற்றல் மட்டுமன்றி இன்ன வாகனத்தில்

ஏறி இப்படிப் போகவேண்டும் என்று வழிமுறைகளையும் சொல்லித் தருகின்றது சைவசமயம்.

முன்னொருபோதும் கண்டறியாத பொருள்களைப் படங்கள் வரைந்து அதன்மூலம் விளங்கச் செய்வதுபோலவும் செயல்முறைப் பரிசோதனைகள் மூலம் சில முடிவுகளைக் கண்டறிதல் போலவும் நாம் ஞானக் கண்ணால் கண்டறிய வேண்டிய இறைவனுக்குச் சில உருவப் பிரதிமைகளை நமது ஊனக்கண்களுக்குத் தெரியும்படி அமைத்து அத்திருவுருவங்களை வைத்துச் சில கிரியைகளைச் செய்கிறோம்.

எல்லா இடங்களிலும் எல்லாச் செயல்களையும் செய்வது இயலாத காரியம். அவ்வாறு செய்யின் உரியவாறு சித்திகள் கிடைப்பது அபூர்வம். விஞ்ஞானப்பரிசோதனைகள் ஆய்வு கூடங்களிலேயே நிகழ்த்தப்பட முடியும். இதுபோலவே வழிபாடுகள், கிரியைகளை முறைப்படி நிகழ்த்த ஆலயங்கள் அவசியமாகின்றன.

பசுவின் உடலிலுள்ள பாலை அதன் மடியிலிருந்து மட்டுமே பெறுதல் முடியும். உலகெங்கும் வியாபித்திருக்கும் ஆண்டவனை வழிபட்டு அவனருள் பெற ஆலயமும் இவ்வாறே அவசியமாகிறது. அது மாத்திரமல்ல பசுவின் மடியில் கைவைத்த மாத்திரத்தில் பால் சுரப்பதில்லை. அதன் கன்றைச் சிறிதுநேரம் ஊட்டும்படி விட்டுப் பின்னர் நாம் முயற்சியுடன் கறந்தெடுத்தல் போல உரிய காலங்களில் உரிய முறைப்படி கிரியைகளை ஆற்றி நின்றால் இறைவன் திருவருள் தானே சுரக்கும்.

பாலிலே நிறைந்து தோன்றும் நெய்யைப் பிரித்தெடுப்பதற்கு விறகிலே மறைந்து தோன்றும் தீயினை வெளிப்படுத்தவும் எவ்வளவு முயற்சி எடுக்கவேண்டியுள்ளது. இதேயளவு முயற்சியை இறையருள் நாட்டத்திலும் வைத்தால் நாம் வெற்றி பெறலாம்.

"விறகிற் தீயினன்பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே" என்று இதையே விளக்குகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவுருவங்களினதும் ஆலயங்களினதும் அவசியம் பற்றிச் சிறிது நோக்கினோம். இவை எப்படி எப்படி அமைய வேண்டும் எந்தெந்த அளவுகளில் அமைக்கப்பட வேண்டும் என்று பல நியதிகளை விதிமுறைகளைச் சமய நூல்கள் எடுத்துரைக்கின்றன. ஆலயங்களின் அமைப்பு மட்டுமல்லாமல் ஒவ்வொரு விதமான கிரியைகளும் நடைபெற வேண்டிய மண்டபங்கள் அவற்றின் அமைப்பு முறைகள், அளவுகள் அங்கு இருக்கவேண்டிய பொருட்கள் இவையெல்லாம் ஆகமங்களிலும் அவற்றை முதல் நூல்களாகக் கொண்டெழுந்த சிற்ப சாஸ்திரம் முதலிய நூல்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுவது கவனிக்கத்தக்கது. ஆலயம், அதன் கோபுரம், தேர் என்பவை மனித சரீரத்தையும் இப்பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயமும் அமைகிறது. மூலஸ்தானம் அல்லது கருவறை சிரசினைக் குறிக்கும். அர்த்த மண்டபம் கழுத்தினையும்,

மகா மண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும் அடுத்த மண்டபங்கள் கால்களையும் ராசகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

அந்த மனிதன் அப்படியே இருந்தபடியே முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தால் முள்ளந்தண்டு அமையும் வகையைக் கொடித்தம்பம் காட்டுகிறது. இக் கொடித்தம்பத்தின் அடியில் இருக்கும் சிறிய விநாயகர் எமது மூலாதாரத்தில் அருப சொரூபியாயிருக்கும் விநாயகரைக் குறிக்கிறது. மூலாதார கணபதி என இவர் அழைக்கப்படுகிறார். யோக மார்க்கத்திலே ஆறு ஸ்தானங்கள். அவை மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன.

ஆலயத்தில் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. அடுக்கடுக்காய் அமைந்த தளங்கள் பல வேறுபட்ட உலகங்களையும் உலக வாழ்க்கையிற் பலவித அநுபவங்களையும் குறிப்பன. இறைவனின் பல விதமான திருவிளையாடல்கள் மற்றும் சாதாரணமான உலகியல் நடைமுறைகள் என்பன கோபுரத்தில் அமையும் சிற்பங்களால் குறிக்கப்படுகின்றன.

ஆலய அமைப்பு, சுற்றுமதில்கள், வீதிகள், பரிவார தெய்வங்கள் இவை யாவற்றையும் நோக்கும்போது நமக்கு ஒரு ராசசபை நினைவுக்கு வருவது இயல்பு. வீதி உலாவருதல், குடை, தீவட்டி, உபசாரங்கள் ஆகிய இவையெல்லாம் ராச மரியாதைக்குச் சமனானவையே. முற்காலத்தில் அரசனைக் கடவுளாக மதித்தமையாலும் அரசனே கண்கண்ட தெய்வமாக இருந்தமையாலும் இத்தகைய ராசோபசாரங்கள் அரசனுக்கும் கடவுளுக்கும் சமமாக இருந்தன.

தேங்காயைக் குடுமியுடன் உடைத்து அதன்பின் குடுமியை நீக்கி இரு பாதிகளையும் நிவேதிப்பது வழக்கம். மாசு நீக்கிய வெள்ளையுள்ளத்திற்குத் தேங்காய் குறியீடாக அமைகிறது. அதை மூடியிருக்கும் பலமான ஓட்டினை உடைத்த பின்பே தேங்காயின் வெண்மை புலப்படுகிறது. வலிமையான மலநீக்கத்தை இது குறிக்கிறது.

பூசையின் முக்கிய அம்சம் தீபாராதனையே பல வகையான தீப வகைகளை இறைவனுக்குக் காட்டி ஒளியேற்றிப் பக்தர்கள் இறைவன் திருக்கோலத்தைக் கண்டுகளிக்க வகை செய்வது தீபாராதனை. இசையோடு கூடிய பாடல்கள் மூலம் இறைவனைத் துதித்துப்பாடுதல் அடுத்த அம்சமாகும். நால் வேதங்களும் ஞானிகளால் இயற்றப்பட்ட சுலோகங்களும் தமிழ் வேதமான திருமுறைப் பாடல்களும் மற்றும் துதிப்பாடல்களும் இதில் இடம்பெறும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் முதலிய ஓத வேண்டிய பஞ்ச புராணங்களாகும். இவற்றை முறையாகச் செய்தால் மாதம் மும்மாரி பொழியும் என்பர்.

“வேதமோதிய வேதியர்க் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர் மழை
மாதம் மூன்று மழை யெனப் பெய்யுமே”

வான்முகில் வழாது பெய்ய வேத மோதுதலும் பஞ்சபுராணம் முதலிய திருமுறைப் பாடல்களைப் பாடுவதும் சைவசமய மரபாகும். ஆன்மாக்கள் மனம் ஒருமித்து தமது வாழ்வு சிறப்புற வாழ வழி காட்டும் இடமாகவும் ஆலயங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

மேலே கூறப்பட்ட இறைவனை வழிபடுவதற்கான மார்க்கங்களாக சரியை, கிரியை, யோகம், ஞானம்போல இயமம், நியமம், ஆசனம். இவற்றில் “யோகாசனம்” என்னும் ஆசனத்தை செய்வதால் உடல் சுத்தி, உளசுத்தி உருவாவதைக் காணலாம். மனநோய் இல்லாது இல்வாழ்வில் நோயற்ற வாழ்வு வாழலாம் என்பர். இதனை.

“நல்லுடல் பெற்றால் இன்ப வாழ்வைப் பெறலாம்
இன்ப வாழ்வைப் பெறுவதே மனிதப் பிறவியின் பயன்
இறைகளோடிசைந்த இன்பம் இன்பத்தோடிசைந்த வாழ்வு”

-சுந்தரர்

இன்பமே சூழ்க... எல்லோரும் வாழ்க!
அன்பே இறைவன்.

# கேளாயோ முருகா!




நாகரிகம் ஒருபுறம், நளினம் ஒருபுறம்
நல்லது கெட்டது மறுபுறம்
வேகரதம் ஒரு புறம், வேறு மதம் ஒருபுறம்
வேலைத் தளம் மறுபுறம்,
ஏகநிலை ஒருபுறம், எல்லாமே மறுபுறம்,
ஏழையின் நிலையோ நிரந்தரம்
மோகநிலை மிஞ்சி, மோதும் நிலை விஞ்சிடும்
மேதினியில் கேளாயோ முருகா!
எல்லாமே ஆசை, எதிலுமே ஆசை
எதற்குமே ஒரு வரம்புண்டு,
கல்லாத ஒரு சமூகம் காசினியில் வளருது
கடவுளையே நம்பாமல் களவு செய்யுது,
பொல்லாத நடையுடை பாவனை இங்கு
போதும் என்றாய்ச்சுது முருகா,
உல்லாசமாய் வாழ விரும்புதே உலகம்
உழைப்போ இல்லை உனக்கே விண்ணப்பம்

கே. எஸ் சிவஞானராஜா

கண்மூடித்தனம் வேகமான வீழ்ச்சியில் வந்து முடியும்.

உ



# பசுவை வணங்கி வாழ்த்தி நிற்போம்

*இராசையா ஸ்ரீதரன் அவர்கள்*

பசு ஒரு சாதுவான பிராணி. எம்பெருமானுடைய அபிஷேகத் திரவியங்களைக் கொடுக்கின்ற காரணத்தால் பசுவானது கோமாதா என்று வணக்கத்துக்குரியதாகக் கருதப்படுகின்றது. மேலும், ஒரு நல்ல காரியத்துக்குப் புறப்படும் வேளை பசு எதிர்ப் பட்டால் அந்தக் காரியம் வெகு சிறப்பாக அமைந்து விடுவதாகவும் சொல்லப்படுகின்றது. ஆகவே, பசுவை வணங்கவேண்டுமே தவிர வதைக்கக்கூடாது.

இத்தகைய பெருமை வாய்ந்த பசுவை நாம் கொன்று தின்னலாமா? இது எந்த விதத்தில் நியாயம்? 'கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்', என்று வள்ளுவப் பெருந்தகை அருளியுள்ளார். அப்படியிருக்க நாம் இந்த மாபாதகச் செயலைச் செய்யலாமா? பசு கத்தும்பொழுது எப்படிக் கேட்கிறது; "அம்மா" என்றல்லவா அழைக்கின்றது. ஆகவே, "அம்மா" என்று அன்போடு அழைக்கும் பசுவை நாம் வதைக்கக்கூடாது. இது பொல்லாத கொடுஞ்செயல்.

பசுவதை கொடியது. பசுவின் உடம்பு முழுவதும் தேவர்கள் உறைந்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. பசுவின் பால் ஒரு பூரண உணவாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு குழந்தை எவ்வாறு பத்துமாதம் சுமந்து பெறப்படுகின்றதோ அவ்வாறே பசுவும் கன்று ஈனுகின்றது. பசுவை வாயில்லா ஜீவன் என்று சொல்லிக்கொண்டு வாய்க்கு ருசியாகச் சமைத்து உண்ணுதல் கூடவே கூடாது.



சமயகுரவரில் ஒருவராகிய அப்பர் பெருமான் தமது நமச்சிவாயத் திருப்பதிகத்தில், "பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை, ஆவினுக்கருங்கலம் அரனஞ் சாடுதல்" என்று குறிப்பிட்டதிலிருந்து இந்தப் பசுவின் பெருமை எளிதிற் புலப்படுகின்றது.

**எதிர்காலத்தை நினைத்துப் பயப்படாதவனே நிகழ்காலத்தை அனுபவிப்பான்.**

இதையே ஞானசம்பந்தப் பெருமானும் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று அருமை யாகச் சொல்லியிருக்கின்றார்.

இப்படி நாயன்மாரால் புகழ்ந்து பேசப்படுகின்ற பசுவை நாங்கள் கொன்று தின்பது மகாபாவம். சைவ சமயத்தை அனுட் டிக்கும் ஒருவர் இந்த மாபாதகச் செயலைச் செய்யமாட்டார். நாங்கள் வாங்கி உண் பதனால்த்தான் இந்தக் கொலை நடக்கிறது. கொள்வனவு செய்வார் இல்லாமற் போய் விட்டால் இந்த விற்பனையும் தானாகவே நின்றுவிடும். சைவம் சைவம் என்று வெளியில் சொல்லிக்கொண்டு மறைவில் இந்த மாபாத கச் செயலைச் செய்வது எந்த விதத்தில் நியாயம்?

முற்காலத்தில் ஓர் அரசன் இன் னொரு நாட்டைப் போர்செய்து கைப்பற்ற விரும்புவானேயாயின் அவன் முதலில் செய்வது அந்நாட்டிலுள்ள பசு நிரைகளைக் கவர்வதுதான். ஏனெனில் பசுதான் ஒருநாட்டின் செல்வம் என்று கருதப்படுகிறது. ஆகவே, அந்தப் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து சென்று விட்டால் அந்த நாட்டின் செல்வத்தையே கவர்ந்துவிட்டதாக அர்த்தம். "மாடு" என்றால் செல்வம் என்று பொருள் கொள்ளப்படு கின்றது. செல்வமற்ற நாடு சிறப்பிழந்த நாடாகும். இதன் காரணமாகவே பசு நிரை களைக் கவர்வது யுத்தத்தின் ஆரம்ப நிகழ் வாக நடந்து வருவது முற்கால வழக்கம்.

ஆகவே, உண்மையான, நேர்மை யான, நியாயமான, சரியான வாழ்க்கை நடத்துகின்ற ஒரு குடும்பஸ்தன் இந்த அரு வருக்கத்தக்க செயலைச் செய்யமாட்டான். மனிதப் பிறவியின் மகத்துவத்தைச் சிறிது எண்ணிப் பாருங்கள். தமது அபிப்பிராயத் தைப் பகிர்ந்துகொள்ள வார்த்தைகளை உபயோகிக்கும் ஒரே ஜீவாத்மா இந்த மனிதன்தான். "அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது" என்பது ஔவையார் கூற்று. எனவே, புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் புண்ணியாத்மாக்களாகிய நாம் பசுவைக் கொன்று புசிக்கக்கூடாது. வயிற்றுப் பசியைத் தீர்க்க பசுதானா கிடைத்தது? மனித இனமே கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் உங்களுக்கே விளங்கும் இது கொடிய செயல் என்று.

பசு வீட்டில் இருந்தால் லட்சுமீகரம் நிறைந்திருக்கும். ஒரு பசுவுள்ள வீட்டிலே மூதேவி வரவே மாட்டாள். சகல விதத்திலும் சிறந்த வாழ்க்கையை இந்தப் பசுவே கொடுக்கும். மனித வாழ்க்கையில் கொலை என்பது கூடாது. எப்போதும் எந்நேரமும் சிவ சிந்தனையோடு நல்லனவற்றை எண்ணி நல்லனவற்றைச் செய்து நாமும் நல்லவர் களாக வாழ்ந்துகாட்டவேண்டும்.

நமது முன்னோர் "இப்படித்தான் வாழவேண்டும்" என்று வாழ்ந்து காட்டிப் போயிருக்கின்றார்கள். எனவே நாம் பசுவைக் கொல்லும் பாதகச் செயலை இன்றோடு விட்டுவிட பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுங் கள். உங்கள் வாழ்க்கை வண்டி நல்ல பாதையிலே ஓடும். கொலை செய்து பசுவின் இறைச்சியைப் பசிக்குணவாகப் புசித்தீர் களோ? கரடு முரடான பாதையே கிடைக்கும். சிந்தித்துச் செயற்படுங்கள். செய்வீர்களா?

குறை என்பது மனதில்தான் இருக்கிறது.

உ

# இருக்கும் இடம் தேடி...

*செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்*

தானம், தருமம், பிச்சை இம்மூன்றும் நம் வாழ்வில் செய்யவேண்டிய அறங்கள். நம்மிடம் உள்ளவற்றை பலன் கருதாது செய்வது தானம். கண் தானம், இரத்த தானம், கோதானம், வித்தியாதானம், கன்னிகாதானம் ஆலயங்களில் வரும் அடியார்கட்கு வழங்குவது (மாகேஸ்வரபூசை) அன்னதானம். "தருமம்" வறியோர்க்கு ஒன்று ஈவது. ஊர் நடுவே கிணறு, குளம் தோண்டுதல், பாடசாலை, ஆதுலர்சாலை அமைத்தல். "பிச்சை" ஏழையாகி தன் பசிக்காக வீடுதோறும் இரந்துண்பதாகும்.

பிச்சை இரண்டு வகைப்படும். ஒன்று வாசல்தேடி வருவோர்க்கு பிச்சையிடுவது. மற்றொன்று தேடிச்சென்று இடுவது. வாசல் தேடி வருவோர்க்கு பிச்சையிடுவது நம்கால வழக்கம். ஞானிகள், யோகிகள், சித்தர்களைத் தேடிச்சென்று அவர்களை அமுது செய்வித்தல் அக்கால வழக்கம். இது மிகவும் சிறந்தது. தானம், தருமம், பிச்சை இம்மூன்றையும் பலன் கருதாமல் செய்யவேண்டும். இம்மூன்றிற்கும் மனதில் இரக்கவேண்டும். "அன்பு ஈன் குழவி அருள்"

"அம்மா பிச்சை போடுங்கோ கண் தெரியாத ஏழை". "மகள்! நேற்றைய பழைய சோறு கறியிருக்கு எடுத்துப்போடு. புண்ணியமாகட்டும்" சிலர் வாங்கி வாழ்த்திவிட்டுப் போவர். சிலர் வேண்டாம் தாயே. படியிறங்கிப் போய்விடுவார்கள். இன்று யார் யார் என்ன நோக்கோடு பிச்சை கேட்டு வருகிறார்கள் என்பதை அறிய வேண்டும். "பாத்திரம் அறிந்து பிச்சை கொடு" முன்னோர் சொன்னது.

நமக்குத் தேவையில்லாதவற்றை வாங்கக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள் என்று தேடிப்போவது இன்றைய நிலை. ஞானிகட்கு உணவு பற்றிய எண்ணம் இல்லை. கிடைத்தால் உண்பர். இல்லையேல் "சிவ சிவ'' என்றிருப்பர். நாம் தேடிப்போய் அழைத்து உணவு படைக்க வேண்டும். ஏழைகட்கு மனம் உவந்து தருமம் செய்ய வேண்டும். அது நாம் அடுத்த பிறவிக்கு தேடுகின்ற தேட்டம். பிறவியைக் கடக்க உதவும் தெப்பம்.

ஒருநாள் பட்டினத்தடிகள் பசிப்பிணி போக்க ஒரு வீட்டுவாயிலில் போய் நிற்கிறார். வீட்டுக்காரன் "இங்கே பிச்சையில்லை, போய் அடுத்தடுத்த வீடுகளில் போய்க்கேளென" துரத்தினான். "சிவசிவ" நான் கேட்டுவந்த பிச்சை இதுவா?' சிவனை நொந்தவண்ணம்,

துக்கப்படுவது எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவிடாது.

"ஓடுண்டு கந்தையுண்டு
உள்ளே எழுத்து ஐந்து ஓதவுண்டு
தோடுண்ட கண்டன் அடியார்க்கு தமக்கு
வேறு துணையுண்டே" வந்த வழியே போகின்றார்.

இதுவே உண்மை ஞானிகளின் நிலை. வழிநடந்த களை, பசிப்பிணி, தாகம், வழியிலே ஒரு கோவில். மரநிழலில் இருந்தவர் தியானத்தில் மூழ்கிவிட்டார். பட்டினத்தாரின் நிலைகண்டு இரங்கினார் இறைவன்.

நிறைஞானம் அடையப்பெற்ற பரமசாது வேடம்பூண்டு கிழிந்த ஆடை, கோவணம், கையில் திருவோடு பிச்சாண்டிபோல் பட்டினத்தடிகள் முன்வந்து நிற்கிறார். ஆன்மாக்களின் புண்ணிய பாவங்களை, ஆணவம், உடற்பிணி, உளப்பிணிகளைத் தான் வாங்கிக்கொண்டு அவர்கட்கு அருள் செய்வதற்காகவல்லவா பிச்சை எடுப்பவர் இறைவன்.

பட்டினத்தடிகள் தியானம் கலைந்தார். முன்னால் ஒரு பரதேசி. பரதேசி கேட்கிறார், "நானும் பார்க்கிறேன், பட்டினத்தாரே! நீர் நெடுநேரமாக பசியோடிருக்கிறீர் போல் தெரிகிறது. ஏன் ஊருக்குள் சென்று பிச்சை வாங்கலாமே?" பட்டினத்தார் சிரிக்கிறார். சாமி! நான் இருக்கும் இடம்தேடி எனது பசியை உணர்ந்து யாரேனும் ஏதாவது கொண்டு வந்து தந்தால் உண்பேன். அல்லாமல் "வா" என்று அழைத்தாலும், "என் உடம்பு இளைத்தாலும்" போகமாட்டேன்.

"இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்து தந்தால் உண்பேன்- பெருக்க
அழைத்தாலும் போகேன் என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி" எனச் சொல்கிறார்.

"உன்பசிக்கு நீயல்லவா போகவேண்டும். என்பசிக்கு இருக்குமிடம் தேடிக்கொண்டு வா" என்று சொல்கிறீரே. இது உனது அறியாமையல்லவா?" சாமி; ஒரு உயிர் பசித்திருக்கிறதேயென இரங்கி அமுது படைப்பதோ பிச்சைபோடுவதோ இல்லை. கொடுத்தால் எமக்குப் புண்ணியம் கிடைக்கட்டும் என்று தமது நலன்கருதியே கொடுக்கின்றனர். அவர்கள் இரக்கம் கொண்டு பிச்சையிடுவதில்லை. அதனால் அதை நான் ஏற்பதில்லை. அந்தச் சிவனடியார் பசியோடு இருக்கிறார் என்றெண்ணி உருக்கமுடன் தரும் உணவையே உண்பேன்.

"வீடுநமக்கு திருவாலங்காடு; விமலர் தந்த
ஓடு நமக்குண்டு; அதுவற்றாத பாத்திரம் ஓங்கு செல்வம்
நாடு நமக்குண்டு கேட்டதெல்லாம்தர; நல்நெஞ்சே"
ஏன் நான் அஞ்சவேண்டும்.

வந்த அடியாருக்கு பரம திருப்தி. இதோ நான் எடுத்துவந்த பிச்சை. "வாரும் பட்டினத்தாரே நாம் இருவரும் பகிர்ந்துகொள்வோம்". இருவரும் உண்கிறார்கள். பசி தீர்கிறது. சாதுவாக வந்தவர் பசி தாகம் உடல் களைப்பை பிச்சையாக ஏற்றுக்கொண்டு மறைந்துவிட்டார். வந்தவர் இறைவனே என்றெண்ணி உளம் பூரித்தார்.

மதிக்காத இடத்தில் புத்திமதி கூறக்கூடாது.

ஞானிகட்கு பிச்சையிடுவதாயினும்
ஏழையாகி இரப்பவர்க்கு தருமம் செய்வதாயினும்
அடியவர்கட்கு அன்னதானம் வழங்குவதாயினும்

புண்ணியம் என்ற நினைவைவிட்டு, மனதில் இரக்கம், பரிவு கொண்டு செய்யவேண்டும். புண்ணியம் தானே வந்து சேரும்.

ஒருநாள் ஆதிசங்கரர் ஒருவர் வீட்டு வாசலில் போய்நிற்கிறார். அது ஒரு வறிய வீடு. வீட்டுக்காரியிடம் எதுவும் இல்லை. ஒரேயொரு நெல்லிக்கனிதான் கைக்குக்கிடைத்தது. மனநிறைவோடு சாமி இதுவே என்னால் தரமுடிந்தது. ஏற்பீர்கள். சங்கரர் தேவியை நினைத்து "கனகதாரஸ்தோத்திரம்" பாடினார். வீட்டில் பொன்னும் மணியும் நிறைந்தன.

யாழ்ப்பாணத்தில் பஞ்சம் நிலவியபோது வீடுதோறும் பிடியரசி வாங்கி கஞ்சித்தொட்டித் தருமம் செய்த நாவலர் பெருமான் புண்ணியத்தை விரும்பிச் செய்யவில்லை. மக்களின் பசியைக் கண்டு இரங்கியவர்.

செல்வச்சந்நிதி கோவில் முருகனிடம் உடற்பிணி, உளப்பிணி தீர்ப்பதற்காக பலர் தினந்தோறும் வந்து போகிறார்கள். அங்கே ஒரு ஆச்சிரமம். எல்லோரும் வந்து ஆறுதல் பெறலாம். முருகன் வடிவில் மோகன் சுவாமிகள் இயங்குகிறார்கள். அடியார்களுக்கு அன்னதானம், நோயாளிகட்கு வைத்தியம், முதியோர்க்கு ஆறுதல், மாணவர்க்கு கற்றல் உபகரணங்கள், வசதியற்றவர்கட்கு வாழ்வாதாரம் இப்படிப் பல தருமங்கள், ஆலயவாசலில் பிச்சையென்று இரப்போர்க்குப் பிச்சையும் கிடைக்கிறது. ஒரேயிடத்தில் தானம், தருமம், பிச்சை இம்மூன்றும் நிகழ்கின்றன. இவை புண்ணியம் கிடைக்கும் என்றெண்ணிச் செய்யவில்லை. எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான். யாவும் அவனையே சென்றடையும்.

படமாடக் கோயில் பகவர்க் கொன்றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடக் கோயில் பகவர்க் கங்காமே.

## ஆடி மற்றும் ஆவணிமாத குருபூசை தினங்கள்

**(05.08.2011) ஆடி 20 வெள்ளிக்கிழமை**



**ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 26ஆவது குருபூசை தினம்**

**ஆடி**

**06.08.2011 ஆடி21 சனிக்கிழமை**
**சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை**

**ஆவணி**

**06.09.2011 ஆவணி20 செவ்வாய்க்கிழமை**
**குங்குலியக்கலயர் குருபூசை**

**நல்ல நம்பிக்கை நல்வழிகாட்டும்; சந்தேகம் சங்கடம் தரும்.**

உ

# பரிபாடல் தரும் பக்திப் பிரார்த்தனை

*சிவ சண்முகவடிவேல் அவர்கள்*

கடைச் சங்க காலத்தில் கிடைத்த சங்கத் தமிழ்நூல்களில் பரிபாடலும் ஒன்று. அதில் திருமால் செவ்வேள் வையை மீது பாடப்பெற்ற பாடல்கள் உள. மொத்தம் இரு பத்திரண்டு பாடல்களைக் கொண்டது பரி பாடல் எனும் பனுவல்.

ஆசிரியன் நல்லத்துவனார், இளம் பெறாவழுதியார், கடுவன் இளவெயினனார் கரும்பிள்ளைப் பூதனார் கீரந்தையார் குன்றம் பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச் சுதனார், நல்லழிசியார், நல்லெழினியார், நல் வழுதியார் மையோடக் கோவனார் என்னும் பதின்மூன்று நல்லிசைப் புலவர்கள் பாடல் களை இயற்றியுள்ளார்கள்.

பல துறைகளில் பல முறைகளில் பாடல்கள் யாக்கப்பட்டிருப்பினும் யாம் பரி பாடல் பகரும் பழுத்த பக்திப் பிரார்த் தனையைப் பலரும் அறியும் பான்மையால் பகருவோம். அதன் நோக்கம் பண்டைய நாளில் பயிலப்பட்ட பக்தி நாகரீகத்தைப் பலருக்கும் எடுத்துக்காட்டுவதும், அவ்வழி நின்று நாமும் பக்தியின் பெருமையை அறிவதும் நம்மறிவை அவ்வழியில் செலுத்து வதற்கு வழி வகுப்பதுமேயாகும்.

குன்றம் எறிந்த குமரவேள் மீது நல் லிசைப் புலவர் பக்திசெய்யும் பாண்மை படிப் போர் நெஞ்சை நெருப்பிலிட்ட வெண்ணெய் போல உள்ளத்தை ஒருக்கி உருக்க வல்லது.

பக்தியில் பழுத்த அன்பினால் அடிய வர்கள் ஆண்டானிடத்தில் வேண்டும் பிரார்த் தனை மொழி எப்படிப்பட்ட கன்நெஞ்சையும் கனிய வைக்கும் கருணைமிக்கது.

குறைவிலா நிறைவான கோதிலா அமுதமான குணக் குன்றினிடத்தில் செலுத் தும் அன்பின் ஆழம் தான் என்னே!

"தேர் உருள் போன்ற பூக்கள் மலிந்த கொத்தினையுடைய கடப்பமலர் மாலையினை யுடைய பெருமானே!

"நினது திருவடி நீழலை எய்த விரும்பிய அடியேங்கள் நின்பால் வேண்டுவன நுகரப்படும் பொருளும் அவற்றை தரவல்ல பொன்னும் அவற்றால் நுகரும் இன்பமும் அல்ல. எமக்கு வீடு பயக்கும் நினது திரு வருளும் அவ்வருளினை உண்டாக்க நின் னிடத்தே யாங்கள் செலுத்தக் கடவ அன்பும் அவ்விரண்டாலும் வரும் அறமும் ஆகிய இம்மூன்றுமேயாம். இவற்றை எங்கட்கு ஈந் தருளுதலை இரக்கின்றோம்.

முருகப்பெருமானை முன்னிலைப் படுத்தி மொழியும் இம்முறையீடு முருகனை முழுது ஒருங்கு உணர்ந்தவர்களால்

அல்லாமல் ஏனையோர்களால் மொழிய முயலலாமோ எனில் அது முடியாது என்னும் பதில் முக்காலமும் உண்மை என்பது முறை பிறழா மெய்ம்மை எனக்கொள்க. அக்கருவூலத்தைத் தாங்கிநிற்கும் பரிபாடல்வரிகள் பின்வருமாறு.

"............. யாஅம் இரப்பதை
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே

(பரிபாடல் 5ம் பாடல் வரி - 76-81)

"அன்பே என் அன்பேஎன் றன்பால் அழுதரற்றி
அன்பே அன்பாக அறிவழியும்- அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்

என்னும் திருக்களிற்றுப்படியார் 55ஆம் பாடலோடு ஒப்பிட்டு ஒருமிடத்துச் சிந்தனைக்கு விருந்தான செய்திய தாம்.

மேலும், வெற்றிவேற் பெருமானுடைய திருவடி அடைவோரையும் அடையாதாரையும் பிரித்து உணர்த்தும் பண்பு இது.

"நினது திருவருளினை விரும்பி ஏற்றுக்கொண்டு நினது நெறியாகிய தருமவழியைத் தலைக்கொண்டு ஒழுகுவாரும் அல்லது நினது திருவருள் வெள்ளத்து நிலைநிற்கும் குணமுடையோராய்ப் பெரிய தவத்தினை உடையோரும் வணங்கத் தகுந்தோராகிய சீவன் முத்தரும் அல்லது பிறவுயிரைக் கொல்லும் தீய நெஞ்சத்து கோபியரும் தருமநெறிச் சாராத புகழ் இல்லாத பூரியரும் கூடா ஒழுக்கத்தால் அழிந்த தவவிரதத்தோரும்,

இப்பிறப்பு அனுபவமே அல்லது மறுபிறப்பும் அறம் மறம் வீடு கடவுள் என்பன பொய்ப்பொருள் என்னும் பொறியிலிகளும் நினது திருவடி நீழலை நாடார். அத்தன்மை அல்லாதார் திருவடி நீழலில் நிற்பவராவார்.

"நின்குணம் எதிர்க்கொண்டோர் அறங்கொண்டோர் அல்லதை
மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும்
சேரா வறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத் தயரி யோரும்
மறுபிறப் பில்லெனும் மடவோருஞ் சேரார்
நின்னிழல் அன்னோ ரல்ல தின்னோர்
சேர்வா ராதலின்......."

(பரிபாடல் 5 வரி- 71-78)

(வளரும்...

உ

(தொடர்ச்சி...

# கந்தனே கலியுகத் தெய்வம்



கே.வி. குணசேகரம் அவர்கள்

"செங்களம் படக்கொன்று அவுணர் தேய்த்த,
செங்கோல் அம்பின், செங்கோட்டு யானை,
கழல் தொடி சேய் குன்றம்
குருதிப் பூவின் குலை காய்ந்தட்டே"

இளைஞன் ஒருவன் ஒரு செங் காந்தள்ப் பூவொன்றைக் கொண்டுவந்து அவன் விரும்பும் பெண்ணின் ஊர்க்காரனிடம் கொடுக் கிறான். அதற்கு அந்த ஊர் இளைஞன் சொல்கிறான்; நீ எமது பகுதியில் உள்ள பெண்ணுக்குச் செங்காந்தள்ப் பூவைக் கொடுக் கச் சொல்கிறாய். நாம் யார் தெரியுமா? முரு கனின் இனத்தவர்கள். அவன் தான் எமது தெய்வம். அவன் வாழும் மலை இது. அவன் உலக மக்களைக் கொடுமைப்படுத்திய சூரனையும் அவனோடு சேர்ந்த அசுரர்களை யும் கொன்று குவித்தவன். போர்க்களம் முழுவதும் இரத்தஆறு ஓடியது. அவன் விட்ட அம்புகள் யாவும் இரத்தம் தோய்ந்தவை. யானைமீது அவன் சவாரி செய்பவன். சீர வடுக்களையுடையவன். அப்படிப்பட்ட வீர னான முருகன் வாழும் எமது குன்றில் நிறையச் செங்காந்தள்ப் பூக்கள் உண்டு. அத னால் நாம் அவற்றைப் பறித்துச் சூடக் கொடுப்போம். நீ கொண்டுவந்த பூவைக் கொண்டு செல்" என்று எச்சரிக்கிறான்.

குறுந்தொகையில் உள்ள பல பாடல்கள் குறிஞ்சி நிலத்தின் செழுமை யையும் அங்கு வாழ்ந்த மக்களின் செல்வச் செழிப்பையும் கூறுகின்றன. முருகனின் அருளால் குறிஞ்சிநில மக்கள் செல்வந்தர் களாக வாழ்ந்தனர். அதனால் முருகனின் பெருமையை உணர்ந்த ஐந்து நில மக்களும் முருகனையே தமது தெய்வமாகக் கொண்ட னர். அதன்பின் உலகில் வாழும் அனைவரும் முருகனின் பெருமையை உணர்ந்து முரு கனே கலியுகத் தெய்வம் என்று போற்றி வணங்குகின்றனர்.

சிந்துவெளியில் நடைபெற்ற அகழ் வாராய்ச்சியின்போது பல சிவலிங்கங்கள் மீட் கப்பட்டன. அதனால் அங்கு சிவவழிபாடு நடந்திருக்கிறது. அதன்பின் சிந்துவெளியில் குடியேறிய ஆரியர் உருவாக்கிய வேதங் களில் சிவன் சிறுதெய்வமாக உருவகிக் கப்பட்டான். அதன்பின்பு சங்ககால மக்கள் மீண்டும் தம் மூதாதையரான சிந்துவெளி மக்கள் வணங்கிய தெய்வங்களை வணங்கத்

நம்பிக்கை உள்ள இடத்தில் அச்சத்திற்கு எள்ளளவும் இடம் கிடையாது.

தொடங்கினர். சைவ சமயத்தின் மூலநூலான சிவஞானபோதம் சைவத்தின் பெருமைகளையும் அதன் தன்மைகளையும் விரிவாகக் கூறுகிறது.

சைவ ஆகமங்களில் உள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களுள் ஞான பாதத்தின்கண் சொல்லப்பட்ட கருத்துக்களைச் சிவஞான போதம் விரிவாகக் கூறுகிறது. இச்சிவஞானபோதம் சிவபெருமானின் திருக்கரத்தில் உள்ளது. இந்த நூலைச் சிவபெருமான் நந்தி தேவருக்கு உபதேசிக்க, நந்திதேவர் அதைத் தனது மாணவரான சனத்குமார முனிவருக்கு அறிவுறுத்த, சனத்குமார முனிவர் தனது மாணவரான மெய்கண்ட தேவருக்கு உபதேசிக்க மெய்கண்ட தேவர் தனது மாணவர்களும் சைவப் பெருமக்களும் பயனுற வேண்டி அதை நூலாக எழுதினார் என்பது வரலாறு.

சிவஞான போதத்தின் கடவுள் வாழ்த்தில், "சுயம்பு மூர்த்தியாகிய விநாயகக் கடவுளுடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் மெய்யன்பர்கள் தமது சிரசின் கண்ணே சூடுவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"கல்லார் நிழன் மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணை மலர்
நல்லார் புனைவரே"

என்பது சிவஞான போதத்தின் கடவுள் வாழ்த்து. இதிலிருந்து விநாயகர் வணக்கம் அந்நாளில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன் சைவ முழுமுதற் கடவுளான சிவனைத் தொழுமுன் விநாயகரைத் தொழவேண்டும் என்றும் கூறப்படுகிறது. இதுபற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள நான் எழுதிய விநாயகர் புராணம், இன்பத்தை அள்ளித்தரும் இந்துமதம் என்ற நூல்கள் பத்தையும் வாசிக்கவும்.

பகவத்கீதையின் காலம் முன்பு குறிப்பிடப்பட்டது. பகவத்கீதையைப் படிக்கு முன் விநாயகரைத் தொழவேண்டும். "ஸ்ரீ கீதா மாஹாத்மிய"த்தில் முதலாவதாக, "ஸ்ரீ கணேசாய நம" என்று கூறிப் பின்பே "ஸ்ரீராதா ரமணாயநம" என்று சொல்லப்படுகிறது. எனவே பகவத்கீதை தோன்றிய காலத்தில் விநாயக வணக்கம் இருந்துள்ளது.

பகவத்கீதையில் விபூதியோகம் என்றொரு அத்தியாயம் உண்டு. அதில் மஹாவிஷ்ணு தான் எடுத்துள்ள உருவங்களைப் பற்றிக் கூறுகின்றார். விபூதி யோகத்தில் உள்ள இருபத்திநான்காவது சுலோகத்தில் மஹாவிஷ்ணு, "ஸேனானீன மஹம் ஸ்கந்தக" என்று கூறுகிறார். இதன் அர்த்தம் சேனாதிபதிகளில் நான் முருகக்கடவுள் என்பதாகும். அப்படிப் பார்த்தால் வேதவியாசரே வேதங்களைத் தொகுத்தவர். வேதத்தின் இறுதிப்பாகம் உபநிடதங்கள். கீதை ஓர் உபநிடதம். அவ்வாறு பார்க்கும்போது வேதத்தில் குறிப்பிடப்படாத முருகக் கடவுள் உபநிடதமான பகவத்கீதையில் குறிப்பிடப்படுகிறார். அதை வைத்துக்கொண்டு வேதகாலத்திலும் முருகவழிபாடு இருந்திருக்கின்றது என்று துணிந்து கூறலாம். இருக்கு வேதத்தில் ஏழாவது மண்டலத்தில் மஹாவிஷ்ணுவைப் பற்றிய பாடல்கள் உள்ளன. அப்பாடல்களில் மஹாவிஷ்ணு எடுத்த விஸ்வரூபத் தோற்றத்தைப் பற்றியும், அதன் இயல்புகள் பற்றியும் கூறப்படுகிறது. அதில் குறிப்

பிட்டவற்றையே பகவத்கீதையும் குறிப் பிடுகிறது. இதன்மூலம் மஹாவிஷ்ணுவின் வடிவில் முருகன் ஆரம்பத்தில் தொழப் பட்டான் என்ற உண்மை புலனாகிறது. தமிழ் நூல்கள் பல முருகனைத் தமிழின் தந்தை என்றும், தமிழ்த்தெய்வமென்றும் கூறுகின்றன. இவற்றை நக்கீரரது பாடல்களும் ஔவை யாரது பாடல்களும் உறுதி செய்கின்றன. வேதங்களும், பழந்தமிழ் நூல்களும், உப நிடதங்களும் இந்தியா முழுவதும் முருக வழிபாடு இருந்ததை ஏதோ ஒரு வழியில் ஒப்புக்கொள்கின்றன. இனி முருகனது வர லாற்றைப் பார்ப்போம்.

(தொடரும்...



# தனிமை உங்களை நெருங்காதிருக்க...


உங்கள் வேலைக்கு ஒரு திட்டம் போட்டுக் கொள்ளுங்கள். திட்டப்படி 'ஒவ்வொரு வேலையையும் செய்து முடிப்பதில் அலட்சியமாக இருக்காதீர்கள். திட்டமிடப்படாத வேலை வீண் விரயமாக முடியும். திட்டப்படி ஒவ்வொரு வேலையும் செய்யாவிட்டால் குழப்பம்தான் மிஞ்சும்; உருப்படியாகக் காரியங்கள் கைகூடாது. இந்த இரண்டையும் முழு ஈடுபாட்டுடன் கருத்தாகக் கவனித்தால், இடையில் எவ்வளவு சங்கடங்கள் குறுக்கிட்டாலும் முடிவில் வெற்றி கிடைக்கும். அதுவும் பளிச்சென்று மெருகுடன் மின்னும்.

இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் வசதிகளும் செல்வமும் குறைவாக இருப்பவர்கள் மட்டுமே எப்போதும் வறுமையில் வாடித் தவிப்பதில்லை. தேவைகள் அதிகமாக இருப்பவர்களும்தான் இப்படி நிச்சயமாகத் தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு முழு சாம்ராஜ்யமே சொந்தமாக இருந்தாலுங்கூடப் போதாது.

"தான்" என்ற அகம்பாவத்தை மையமாக வைத்துக்கொண்டு, உங்களை ஆணவத்துடன் வளர்த்துக் கொண்டுவிட்டால், நீங்கள் சுயநலம் படைத்த ஒருவராக ஓங்கிவிடுவீர்கள். மற்ற எல்லோரும் உங்களிடமிருந்து கத்தரித்துக்கொண்டு போய்விடுவார்கள். ஆண்டுகள் செல்லச்செல்ல நீங்கள் தனிமையில் ஒதுக்கிவிடப்படுவீர்கள். வாழ்க்கையில் அந்தத் தனிமை தரும் "வெறுமை" உங்களைச் சூழ்ந்து கொள்ளும். உங்களுடைய சுயநலத்தில், உங்களைச்சுற்றி ஒரு பெரிய சுவரை எழுப்பி உங்களை மறைத்துக்கொண்டு விட்டீர்கள்; உங்களை மற்றவர்களுடன் இணைக்கும் பாலங்களை அல்லவோ நீங்கள் கட்டியிருக்கவேண்டும்? பிறரிடம் இனிமையாகப் பழகி நட்புக்கொள்ளுதல், தாராளமாக வழங்கும் பண்பு, பிறருடைய இன்ப துன்பங்களுக்காக அன்பர்களிடம் பரிவுகொண்டு அக்கறை கொள்ளுதல், இவற்றைப் பழக்கத்தில் வளர்த்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு தனிமை உங்களை எக்காலத்திலும், எந்த இடத்திலும் நெருங்கவே நெருங்காது.

**உலகத்திற்குச் சூரியன் போன்றது உடலுக்கு இதயம்.**

உ




# பசு பொழிந்த பால் எங்கே?

காவிரியாறு பாய்கின்ற சோழ நாட்டின் ஒரு பகுதியான மண்ணியாற்றின் தென்கரையில் **சேய்ஞ்ஞலூர்** என்று ஓர் ஊர் உளது. அந்த ஊர் சோலைகள், தோப்புக்கள், வயல்கள், செழிப்பான பசுக்கள், கால்நடைகள் போன்ற எல்லா செல்வங்களும் நிறைந்து வளம்பெற்று விளங்கியது. **எச்சதத்தன்** என்ற ஒரு வேதியன் அவ்வூரிலே வாழ்ந்து வந்தான். அவனுக்கு **பவித்திரை** என்ற சிறப்பான குணங்களையுடைய அழகிய மனைவி இருந்தாள்.

இருவரும் முற்பிறவியில் செய்த புண்ணியத்தால் ஒரு மகனைப் பெற்று **விசாரசருமன்** என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். விசாரசருமன் குழந்தையிலேயே வேதங்கள், குருகுலக்கல்வி போன்றவற்றை படிக்காமலேயே கேள்விஞானம் மூலம் கற்றுத் தேர்ச்சி அடைந்திருந்தான். அவன் ஏழுவயதுக்குள்ளாக பெற்றுள்ள அறிவைக் கண்டு அவனது ஆசிரியரே வியப்பு அடைந்தார். ஒருநாள் தனது கல்விச் சாலைக்கு செல்ல வீதிவழியே சென்றான். அப்பொழுது பசுக்களை ஓர் இடையர் குலத்தைச் சேர்ந்தவன் மேய்த்துக்கொண்டு சென்றான்.

அப்படி மாடு மேய்த்தவனை பசுக்கூட்டத்தில் சென்ற ஓர் பசு தனது கொம்பால் கீறிவிட, அந்த மாடு மேய்ப்பவன் சினம் கொண்டு தன் கையில் இருந்த கோலால் அந்தப் பசுமாட்டை கண்டபடி அடித்தான்.

அதைக்கண்டு துயரமடைந்த விசாரசருமன் விரைவாகச் சென்று அந்த இடையர் குலத்தை சேர்ந்தவனின் கையில் இருந்த கோலைப் பிடுங்கினான். "வேள்விகள், ஓமங்கள் போன்ற செயல்புரிய பஞ்சகவ்வியம் என்ற பொருளைத் தருவது இப்பசுக்கள்தான். பால், தயிர், வெண்ணெய், நெய், திருநீற்று சாணம், தூய்மையான கோமியம் போன்றவற்றை இந்தப் பசுக்களே தருகின்றன.

"முனிவர்களும், தேவர்களும், போற்றுதற்குரியது பசு. எனவே இப்பசுக்களை நாம் துயரடையச் செய்யக்கூடாது. பிற உயிர்கள் துன்பப்படல் நமக்குத் தீமை விளைவிக்கும். "எனவே, இன்றுமுதல் நீ இப்பசுக்களை மேய்க்க வேண்டாம். அந்தத் தொழிலை நானே மகிழ்ச்சியோடு செய்கிறேன்" என்றான் விசாரசருமன். அன்றுமுதல் விசாரசருமனே பசுக்களை மேய்த்து வந்தான்.

புற்கள் அதிகம் நிறைந்த இடத்திற்குப் பசுக்களை அழைத்துச் சென்றும், தனது கைகளால் புற்களை எடுத்துக்கொடுத்தும் தடவிக்கொடுத்தும் பசுக்களை பாசத்தோடு கவனித்துவந்தான். பசுக்கள் மகிழ்ச்சியின் பெருக்கத்தால் தன் மடியில் அதிக அளவு பாலை சுரந்து கன்றுகள் இல்லாமலேயே தானாகவே பொழியத் துவங்கியது. அமுதம் போன்ற பசுவின்பால் தானாக சுரந்து பொழிவது கண்டு "என்ன செய்யலாம்" என்று விசாரசருமன் யோசித்தான்.

உடனே ஓர் யோசனை உருவாகி, அங்கோர் அத்திமரத்திற்கு அடியில் மண்ணால் சிவலிங்கம் அமைத்து கோயில் எழுப்பி பசுவின்பால் லிங்கத்தின்மீது பொழியச் செய்தான். வெறும் மணலில் பசுக்கள் பாலை வீணாகப் பொழிவதை ஓர் அந்தணன் கண்டான். பசுக்களை மேய்ப்பதாகக் கூறி விசாரசருமன் பசுக்களின் பாலைத் திருடி தனது மனம்போன போக்கில் பயன்படுத்துகிறான் என்று மற்றப் பசுக்களின் உரிமையாளர்களிடம் சென்று கூறினான். அனைவரும் ஒன்றுகூடி வந்து விசாரசருமன் பற்றிய அச்செயலை அவனது தந்தையான எச்சதத்தனிடம் குறைகூறினர்.

தாங்கள் சொல்வது எனக்கு இப்பொழுதுதான் தெரியும். இனி இவ்வாறு நடைபெற்றால் அது என் குற்றமே என்று வந்தவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான் எச்சதத்தன். தன் மகனால் தானடைந்த பெருமைகள் நீங்கி தற்பொழுது அவமானம் அடைந்ததாய் நினைத்தான் எச்சதத்தன். மறுநாள் தன் மகனின் செயலை அறிந்துகொள்ள அவனுக்குத் தெரியாமல் அவனைக் கண்காணிக்கப் பின்தொடர்ந்தான் எச்சதத்தன். விசாரசருமன் வழக்கம்போல மாடுகளை மேய்த்துச்சென்று தான் சிவலிங்கம் அமைத்த அத்திமரத்திற்குச் சென்றான்.

பசுக்கள் மேய்ச்சல் முடிந்து அசைபோட நிழலுக்காக விசாரசருமன் இருக்கும் அத்திமரத்திற்கு வந்தன. வழக்கம்போல் மணல் லிங்கத்தின்மீது பாலைப் பொழிந்தன. இதைக்கண்டு ஊரார் உரைத்தவை எல்லாம் உண்மை என்றறிந்து மறைவிலிருந்து எச்சதத்தன் வெளிப்பட்டு விசாரசருமனை நோக்கி விரைந்தான். அடுத்தவர் வீட்டுப் பசுக்களைத் தவறாகப் பயன்படுத்தி அவைகளின் பாலை மணலில் கொட்டி வீணாக்குகிறாயே என்று விசாரசருமனை அடித்தார். மணல் லிங்கத்தை காலால் உதைத்துக் கலைத்தார்.

சிவலிங்கத்தைக் காலால் உதைப்பதைக் கண்ட விசாரசருமன் அங்கே கீழே இருந்த மழுவாளை எடுத்து "சிவனையா காலால் உதைக்கிறாய்?" என்று எச்சதத்தன் காலை வெட்டினான். உடனே சிவபெருமான் மணல் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு "எம்பொருட்டு அன்புகொண்டு தந்தையின் கால்களையே வெட்டியதால், இன்றுமுதல் உனக்கு நானே தந்தையாக விளங்குவேன்" என்றார். எனக்குள்ள அனைத்தும் உனக்கும் கிடைக்கும். இன்றுமுதல் **சண்டீசர்** எனப் பெயர்பெற்று என் கோயிலில் என்னோடு விளங்குவாயாக" எனக்கூறி மறைந்தார்.

இறைவனின் அருள் பெற்றதால் விசாரசருமன் சிவரூபமாய்த் திகழ்ந்தார். விசாரசருமனால் தண்டிக்கப்பெற்றதால் எச்சதத்தனும் சிவலோகம் சென்றடைந்தார்.

**திருமணமும் தூக்குக் கயிறும் விதிப்படி நடக்கின்றன.**

உ

(தொடர்ச்சி...

# ஓம் வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

ஏறக்குறைய முந்நூறு ஆண்டு களுக்கு முன்பு நடந்த செய்தி. வடமலை யப்பபிள்ளை குல தெய்வமாகிய திருச்செந் தூர் முருகனிலே ஆராத காதல் கொண்டவர். கடற்கொள்ளைக்காரர் செல்வக் குமரனின் திருவுருவம் கட்டிப் பொன்னாலானது என்று கருதி, நள்ளிரவில் அதனைக் கவர்ந்து கப் பலில் ஏற்றிக் கடலில் விரைந்து செல்கிறார் கள். கப்பல் சிறிது தூரம் சென்றதும் கடுங் காற்று வீசத் தொடங்கியது. கடல் கொந்தளித் தது, மரக்கலம் தள்ளாடியது. கள்வர்கள் பயந்து வேறு வழியின்றி அறுமுகன் திருவுரு வத்தை அலைகடலிலே தள்ளிவிடுகிறார்கள். அடுத்தநாட்காலை; அலைவாய்க் கோயிலில் ஆறுமுகனைக் காணாது அடியவர்கள் ஆறாத்துயர் அடைந்து வடமலை ஐயனிடம் ஓடோடிச் சென்று அறிவிக்கிறார்கள். அவர் கவலை மேலிடக் கண்ணீர் வடிக்கிறார். செந் தூர் வேலன் அவர் கனவிலே தோன்றித் தம் இருப்பிடத்தைச் சொல்லிவிடுகிறார். கன வில் கண்டபடி கடலில் ஓரிடத்தில் எலுமிச்சம் பழம் ஒன்று மிதந்து கொண்டிருந்தது. அந்த இடத்தில் கருடன் வட்டமிட்டுக் கொண்டிருந் தது. கருங்கடலில் கிடந்த மூர்த்தியைக் கரை யேற்றுகிறார்கள். கந்தப் பெருமானின் கரு ணையே கருணையென அடியார்கள் மகிழ் கிறார்கள்.

வீரபாண்டிய கட்டப்பொம்மனுக்கு திருச்செந்தூர் முருகனிடம் அளவிறந்த பக்தி. அவன் திருச்செந்தூரிலே புதிதாக மண்டபம் ஒன்றினை அமைக்கிறான். மாசித் திருவிழா வின் ஏழாம் திருநாளாக பிள்ளையான் மண்ட பத்துக்கே சுவாமி எழுந்தருளிவருவது நெடுங் காலமாக அங்கே நடந்துவருகிறது. வழக்கத் துக்கு மாறாக கட்டப்பொம்மன் தான் கட்டிய மண்டபத்துக்கே பெருமானைக் கொண்டுவர வேண்டும் என்று முடிவுகட்டிவிடுகிறான். அடியார்கள் ஆறாத்துயர் மேலிட, அஞ்சி வாயடங்கி நெஞ்சம் குழற நிற்கிறார்கள். கட்டப்பொம்மனைத் தடுத்தால் பெருங்கலகம் வருமென்றஞ்சி பேசாது இருந்து விடுகிறார் கள். திருவிழா தொடங்குகிறது. அறுமுகப் பெருமான் ஆலயத்திலிருந்து எழுந்தருளு கிறார். சுழல் காற்று வேகமாக வீசுகிறது. கோயிலைச் சூழ்ந்த மண்மேட்டைக் கடந்து ஆறுமுகன் வாகனம் வரும்போது, சுழல் காற்று மண்ணையும், மணலையும் இறைத்து எல்லோர் கண்களையும் மறைக்கிறது. மழை யும் பொழிகிறது. செவ்வேளைத் தாங்கிவந்த அடியார்கள் செய்வதறியாது திகைக்கின் றார்கள். கால் சென்ற வழியே சென்று மூர்த் தியை ஓரிடத்தில் இறக்குகின்றார்கள். காற்றும் மழையும் நின்றுவிடுகிறது. கட்டப்பொம்மன் ஓடோடியும் வருகிறான்.

மண்மாரி எழுப்பிய முருகன் பிள்ளையன் மண்டபத்திலே வீற்றிருப்பதைக் காண்கிறான். நெஞ்சம் நெக்குருகப் பதைபதைக்கிறான். "அந்தோ, அன்று கடலாடிகள் கட்டிப் பொன்னுக்காகக் கவர்ந்து சென்ற மூர்த்தியை கடலினின்றும் கொணர்ந்த வடமலை ஐயன் பெருங்குலத்து மெய்யடியார்களுக்குப் பிழை செய்தேன்; நான்பாவி; பாவி! பிள்ளையன் மண்டபத்திலே சேரவேண்டிய பெருமானை, பிறிதொரு மண்டபத்துக்கு எடுத்துச் செல்லக் கருதியது பெரும்பிழை" என்று கதறுகிறான். பிள்ளையனைப் பிழை பொறுக்குமாறு வேண்டுகிறான். பொம்மன், பிள்ளையன், பெருமான் அடியார்கள் எல்லோரும் திருவருள் நலம் பெறுகிறார்கள்.

வென்றிமலைக் கவிராயர் திருச்செந்தூர் முருகன் கோயிலிலே பரிசாரகராகக் கடமை செய்கிறார். ஒருநாள் அவர் பணியிலே ஒரு சிறு தவறு ஏற்படுகிறது. கோயில் நிர்வாகிகள் அச்சிறு தவறுக்கு கசையடி கொடுக்கிறார்கள். "மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்று அவமானம் பொறுக்கமாட்டாமல் கவிராயர் கடலிலே குதித்து விடுகிறார். கவிராயரைக் கந்தவேள் கரை சேர்க்கிறார். முருகப் பெருமான் பாடும் படி பணிக்கிறார். "திருச்செந்தூர் ஸ்தல புராணம்" எழுகின்றது. இப்படி எத்தனை அற்புதங்களை அந்தச் சுந்தரச் சுடர் வடிவேலன் காட்டியிருக்கிறான்.

வயிற்றுவலியால் துடித்த தேவராஜ சுவாமிகள் கந்தர் சஷ்டி கவசம்பாடி முருகன் அருள் பெற்றார். படிக்காசுப் புலவர் திருச்செந்தூர் செவ்வேளிடம் தன் வறுமைத் துயரைச் சொல்லிப் பாடுகிறார். இன்றும் கோடானு கோடி பக்தர்கள் தம் குறைகளையெல்லாம் கொட்டி அழுது, தாயாகித் தந்தையாகி நம்மையெல்லாம் தாங்கும் தயாபரனின் திருவருள் மழையில் நனைந்து பரவசமாகும் பேறு பெற்றவர்கள் உள்ளனர்.

வினை தீர்க்கும் வெற்றி வடிவேலன் எத்தனை திருவிளையாடல்களை இயற்றியருளுவான்! திருச்செங்கோட்டில் குணசீலர் என்ற புலவர் ஒரு முருக பக்தர். அவர் காலத்திலே பிரதிவாதி பயங்கரன் என்ற கல்விச் செருக்குடைய புலவன் இருந்தான். புலமை குறைந்த புலவர்களுடன் சொற்போர் செய்து "நான் உனக்கு அடிமை" என்று முறி எழுதி வாங்கிக்கொள்வான். மற்றைய ஊரிலுள்ள புலவர்களுக்கும் ஓலை அனுப்புவான். ஓலை கிடைத்ததும் "பிரதிவாதி பயங்கரனுக்கு நான் அடிமை" என்று எழுதிக் கொடுத்துவிடுவார்கள். ஒருநாள் குணசீலரைப்பற்றி அறிந்து ஓலை அனுப்பினான். அவர் பாவம்! என்ன செய்வார்? திருச்செங்கோட்டு முருகனை விட அவருக்கு வேறு துணையில்லாதவராயிற்றே. குறை இரந்தார் முருகனிடம், "முருகா! யான் கற்ற கல்வி உன்னைப் பாடத்தானே பயன்படுகிறது. எனக்கு இருக்கும் புலமை நீ அறியாததா? வீண் வம்புச் சண்டைக்கு இழுக்கிறானே பிரதிவாதி பயங்கரன். நான் யாதும் அறியேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என மனமுருகி வேண்டினார். வந்த ஓலையை முருகப் பெருமானின் திருவடியிலே வைத்து விட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார். குணசீலரை வாதிட்டு வெல்ல வேண்டும் என்று திருச்செங்கோட்டுக்கு பிரதிவாதி பயங்கரன் வந்தான். மலையின் பக்கத்திலே ஒரு சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தான். மலையைப் பார்த்ததும் "இது என்ன மலை" என அருகில் வந்தவர்களைக் கேட்டான். "திருச்செங்கோடு சர்ப்பகிரி என்று இதனை அழைப்பார்கள்"

சாந்தியில்தான் அழகு காட்சி செய்கிறது.

என்றனர். இது சர்ப்பமானால் இந்தப் பாம்பு ஏன் ஆடாமல் படுத்துக்கிடக்கிறது என்ற கேள்வியைப் பாட்டாகப் பாடினான்.

"சமர முகத் திருச் செங்கோடு சர்ப்ப சயில மெனின்
அமரில் படம் விரித்து ஆடாதது என்னே?" என இரண்டு அடிகளைப் பாடிவிட்டு விழித்தான். பாட்டு நிறைவேறுவதாக இல்லை. பாட்டு அப்பால் ஓடவில்லை. திணறிக் கொண்டிருந்தான். "அந்தச் சமயம் அஃது ஆய்ந்திலையோ" என்ற ஒரு குரல் கேட்டது. குரல் இன்னமுஞ் சின்னவனாக இருக்கிற இளைஞனின் குரலாக இருந்தது. மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன்தான் பாடுகிறான்.

"…. அஃது ஆய்ந்திலையோ
நமரன் குறவள்ளிபங்கன் எழகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமருகன் மயில்வாகனம் கொத்து மென்றே"

புலவன் தொடங்கிய பாட்டைச் சிறுவன் முடித்துக்கொடுத்தான். எழுகரை நாடு என்பது திருச்செங்கோடு உள்ள சிறிய நாட்டுக்குப்பெயர். எழுகரை நாட்டிலுள்ள குமரப் பெருமானுடைய வாகனமாகிய மயில், படம் எடுத்து ஆடினால் கொத்திவிடும் என்று பயந்து பாம்பு ஆடாமல் கிடக்கிறது. இது உனக்குத் தெரியவில்லையா" என்ற விடை பாட்டாக வந்தது. புலவன் திகைத்துவிட்டான். "யார் இந்தச் சிறுவன் என்று கேளுங்கள்" என்று தன் அருகிருந்த மாணவர்களை ஏவினான். அதற்கு அந்தச் சிறுவன், அடக்கத்திற்கும், அமைதிக்கும் இருப்பிடமான குணசீலர் என்ற புலவர் இந்த ஊரில் இருக்கிறார். முருகன்மேல் அவருக்கு முறுகிய பக்தி. அவன் புகழைக் கடல்மடை திறந்தாற்போல் பாடுவார். அந்தப் பெரும்புலவரிடம் பாடம் கேட்கச் சென்றேன். அவரும் கவிபாடும் திறமையைச் சொல்லித் தந்தார். ஆனால் எனக்கோ முடியவில்லை. அதனால் நீ என்னிடம் படித்தது போதும். என்னுடைய மாணாக்கனாக இருக்க உனக்குத் தகுதி இல்லை என்று துரத்திவிட்டார். வேறு வழியில்லாமல் மாடுமேய்க்கிறேன் என்றான்.

பயங்கரனின் தலை சுழன்றது. துரத்தப்பட்ட மாணவன் தான் பாடி முடிக்க முடியாத பாட்டைப் பாடினான் என்றால், குணசீலரின் பெருமை எத்தகையது என எண்ணி இந்த அவமானமே போதும் போதும் என, "தம்பீ", என்னுடைய வணக்கத்தைக் குணசீலருக்குத் தெரிவி" என்று மாத்திரம் சொல்லிவிட்டு வந்த வழியே திரும்பிப்போய்விட்டான். மாடு மேய்த்த சிறுவன் முருகனின் திருவிளையாடல் என்னே!

இதேபோன்று மாடுமேய்க்கும் சிறுவனாக வந்து தமிழ்க் கிழவிக்கு ஞானம் புகட்டியவன் ஞானபண்டிதன். விநாயகரிடம் பக்திமேலிட்டு "அகவல்" பாடி அதன் பலனாகக் கைலாயமலையை அடைந்து பரமேஸ்வரனையும், பரமேட்டியையும் கண் குளிரத் தரிசித்தவர் ஒளவையார். அவரிடம் முருகன் சுட்டபழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா? என நாடகம் நடத்தி பன்னிரு கைப் பரமன் மாட்சியுடைய ஒளவையாருக்கு காட்சி கொடுத்தான். தேவரும், மூவரும் காணாத தேவதேவனைத் தன் கண்குளிரக் கண்டார் தமிழ்ஞானத்தாய். முருகா, குமரா, மூவர்முதல்வா, செந்தமிழ்க் கடவுளே என்னையும் ஒரு பொருளாகக் கருதி எழில் காட்சி தந்த எந்தையே! உன்னிடம் நான் தோற்றது எனக்குப் பெருமையே! இத் தோல்வியால் நான் மட்டுமன்று, இந்தப்

**முட்டாள்களின் முடிவே அவநம்பிக்கை.**

பூமண்டலமே நல்லதோர் பாடம் பெற்றுள்ளது. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உல களவு" என்ற உண்மையை உணர்த்திய உமைபாலனே! உன்னை நான் மனம், மொழி, மெய்யால் வணங்குகின்றேன் எனக் கண்ணீர் மல்கி கைகூப்பி நின்றார். ஒளவையாருக்கும், ஞானக் களஞ்சியமான முருகனுக்கும் உரை யாடல் நடக்கிறது. இனியது எது, கொடியது எது, அரியது எது, பெரியது எது என வினவ அதற்கு உலக மக்களுக்கு பல நல்ல அரிய கருத்துக்களை விடையாகக்கூறி வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியும் காட்டி யுள்ளார். ஒளவையாரிடம் லீலா விநோதன் ஓர் நாடகம் நடத்தி, மாய இருளில் மதி மயங்கி அஞ்ஞான உறக்கத்தில் உழன்று கொண்டிருக்கும் நமக்கெல்லாம் நல்லதோர் உண்மையை உணர்த்தியுள்ளான் செந்தமிழ் வித்தகன்.

திருச்சீரலைவாய் அண்ணலே சிவ ஞானப்பழமே
மறை யோரும் வானவரும் தொழுதேத்தும் பரம் பொருளே
கறையானைக் கிளையோனே கந்தவேள் முருகா
பிறவாமை எனும் பெரும் வரம் தருவாய்

பிறவிக் கடலில் வீழ்ந்தோரைக் கரை சேர்க்கும் ஓடக்காரனே
புவனேஸ்வரி மைந்தா குமாரஸ்வாமியே
சிக்கெனப் பற்றினேன் கந்தா உன் திருவடியை
கைதூக்கி விடுவாய் கருணைக் கடலே.

(தொடரும்...




முட்டாள்த்தனத்தைவிட வேறு பாவம் கிடையாது.

உ

(தொடர்ச்சி...

# புதுமைக்கும் வழிகாட்டியாக நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்

**இரா சாந்தன் அவர்கள்**

"அறு மீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல் சுடர் நெடுங்கோடி போலப்
பல் பூங் கோங்கம் அணிந்த காடே"

இச்செய்யுளிலே சிவந்த கோங்க மலர்கள் பூத்துத்திகழும் பொலிவு கார்த்திகை விழாநாளில் ஏற்றப் பெற்ற விளக்கு வரிசைகள் ஒத்திருந்தமை கூறப்பெற்றிருக்கின்றது. இவ் வண்ணம் சான்றோர் செய்யுள்களில் கார்த் திகை விளக்கீடு உவமானமாகக் கையாளப் பட்டிருந்தமையால் பண்டைக் காலத்தில் அது மக்கள் மனதில் நன்கு பதிந்திருந்தது என்பது தெளிவு.

"அகநானூறு" என்னும் சங்க இலக் கியத்தில் "விளக்கீடு" தொடர்பான சுவை யான செய்தி ஒன்று சொல்லப்பெற்றுள்ளது. தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிற இடம் சென்றுவிட்டார். அவர் எப்போது வீடு திரும்புவார் என்பது தெரியவில்லை. இத னைத் தலைவியும், தோழியும் பலநாள் ஆலோசித்து இருக்கும்போது, தலைவியின் மனதில் ஒரு துணிவு உண்டாயிற்று. நற் கனவுகண்டுள்ளாள். நற்சகுனமும் காட்சிக்குத் தென்பட்டன. இவற்றின் காரணமாகத் தலை வன் வந்து சேரக்கூடிய நாளை ஒருவாறு ஊகித்து குறித்துச் சொல்லக்கூடியதாக இருந்தது. இதனைத் தோழிக்குச் சொல்லு கிறாள்.

தோழியே, கேட்பாயாக! சகல கரு மங்களும் வெற்றிபெற ஆற்றப்பெற்றுவரும் எமது ஊரின் கண்ணே உழவுத் தொழிலும் வயல் வேலைகளும் நிறைவுற்றுள்ள இப் பருவத்திலே, மழைவீழ்ச்சியும் ஓய்ந்துவிட, வானத்தில் இருந்து இருளும் நீங்கிவிட, சந்திரமண்டலத்திலே உள்ள குறுமுயல் வடி வம் தெளிவாகத் தோற்றம் அளிப்ப, அறுமீன் என்னும் பெயர் வாய்க்கப்பெற்ற கார்த்திகை நட்சத்திரமும் சந்திரனை வந்து சேரும். இருள் அகன்ற நள்ளிரவில், எமது ஊர் மக்கள் எல்லாரும் கூடி, வீதிகள் தோறும் விளக்குகளை நிரை நிரையாக வைத்து, மாலைகள் தூக்கி, விளக்கிட்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். ஊரின் சக மக்களோடு தானும் ஒன்று சேர்ந்து இவ் விழாவைக் கொண்டாடுவதற்காக இந்நன் நாளிலே எமது தலைவர் இங்கு வந்து சேர் வார் இதற்குரிய பாடற் பகுதியைப் பார்ப் போம்.

உதவ முடியாவிட்டால் குற்றமில்லை; குற்றம் செய்யாமல் இரு.

"..........................................................................
உலகு தொழில் உலந்து, நாஞ்சில் துஞ்சி
மழைகால் நீங்கிய மாக விசும்பில்,
குறுமுயல் மறுநிறங்கிளர, மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்,
மறுகு வியுக் குறுத்து, மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம
.........................................................................."

அகநானூறு- 141பாலை (ஒரு பகுதி)- நக்கீரர்.

நாஞ்சில் துஞ்சி- கலப்பைகள் மடிந்து, உலகுதொழில் உலந்து- உலகின்கண் உழுதொழில் முடிந்துவிட; மழைகால் நீங்கியமாக விசும்பில்- மழை பெய்தல் ஒழிந்தவானின் கண்ணே, குறுமுயல் மறுநிறம் கிளர- குற்றமுயலாகிய மறுவின் நிறம் விளங்க, மறுவிளக்கு உறுத்து- தெருக்களெங்கும் விளக்குகளை நிரல்பட ஏற்றி, விழவுடன் அயரவருக- விழாவினை நம்முடன் சேர்ந்து கொண்டாடத் தலைவர் வருவார்.

விளக்கீட்டு விழாவின்போது நிரல்பட ஏற்றப்பெறும் விளக்குகளின் வரிசைகள் பண்டை இலக்கியங்களில் பல இடங்களில் உவமையாகக் கையாளப் பெற்றிருந்தலைக் காண்கிறோம்.

இதுவும் 'அகநானூறு' என்னும் இலக்கியத்தில் காணப்படுவதாகி ஒன்று தலைவன் வேற்று நாட்டிற்குப் பொருள் வயிற்பிரிந்து சந்தர்ப்பத்தில் தலைமகள் தோழிக்குக் கூறியது.

"வானில் ஊர்ந்து செல்லும், ஒளிவிளங்கும் ஞாயிற்று மண்டிலம் தீயெனச் சிதைந்து எரிந்த வெப்பம் விளங்கும் காட்டகத்தே, சிலையில்லாதனவாய், அரும்பில்லாத இலவம் பூக்கள், ஆர்வமிக்குடைய மகளீர் கூட்டம், மகிழ்ந்து கூடி எடுத்த, அழகிய கார்த்திகை விளக்கின் நெடிய ஒழுங்குபோலத் தோன்ற, குளங்கள் நீரற்றுத் துகள்பட்டிருக்கும் வளம் தப்பிய காட்டில்"

இதோ இதற்குரிய பாடற் பகுதி:

"வானம் ஊர்ந்தவயல்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பு அவிர் அம்காட்டு
இலையில் மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த
அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயம் துகள் ஆகிய பயம் தபு கானம்
......................................................"

-அகநானூறு 11(பாலை)- ஔவையார்

உருப்பு அவிர் அம் காட்டு- வெப்பம் விளங்கும் காட்டகத்தே; கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த- ஆர்வம் மிகக் கொண்ட மகளீர் கூட்டம் மகிழ்ந்து கூடி எடுத்த;

அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி- அழகிய கார்த்திகை விளக்கின் நெடிய ஒழுங்கு போலத் தோன்ற; கப்பம் துகள் ஆகிய பயம் தபுகானம்- குளங்கள் நீரற்றுத்துகள் பட்டிருக்கும் வனம் தப்பிய காட்டில்;

அக நானூறு 185ஆம் பாடலிலேயும் இந்த உவமை தரப்பெற்றுள்ளது.

"வான் உலந்து அருவி ஆன்ற உயர்சிமை மருங்கின்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலை இல மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறக்கல் மலை இறந்தோரே"

-185 (ஒருபகுதி)

இங்கு விளக்கீட்டுவிழா "பெருவிழா" என்றே குறிக்கப்பெறுகின்றது. இவ்வாறு விளக்கீட்டுவிழா பண்டுதொட்டு இன்றும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பெற்று வருகின்றது.

-திருச்சிற்றம்பலம்-

(முற்றும்)

# சந்நிதியானை நினைந்திடுவாய் நெஞ்சே!

வெற்றியே வழங்குகின்ற வேலுடைய வீரமகன்
திருவடியைத் தினந்தோறும் பற்றியே புகழ்பாடு
என்னெஞ்சே அவன்கோவில்
சுற்றியே வலம்வந்து சுந்தரனின் ஆறெழுத்து
மந்திரத்தை உச்சரித்து உச்சரித்து உருகிடுவாய்
உன்துயரம் எல்லாமே
அற்றதாம் நிலைவருமே! அழகனவன் அருளதனால்
அன்றமரர் அல்லலதை அறுத்திட்ட ஆறுமுகன்
அபயமென வருவானே!
நற்றமிழில் நாவெல்லாம் இனித்திடவே செல்வச்
சந்நிதியில் உறைகின்ற செல்வனினை நினைந்து
நினைந்து வணங்கிடுவாய்!

-ப. மகேந்திரதாசன்-

கெட்ட புத்தகம் திருடனைவிட மோசம்.

# கண்ணே கருத்தே எண்ணே எழுத்தே

*முருகவே பரமநாதன் அவர்கள்*

பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே
பாவித்து இறைஞ்ச; ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன்; அல்லாமல் இரு கைதான் குவிக்க எனின்
நாணும் என்உள நிற்றி நீ
நான்கும்பிடும் போது அரைக்கும் பிடு ஆதலால்
நான் பூஜை செயல் முறையோ?
விண்ணேவிண் ஆதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே!
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தே வித்தின் முளையே
கண்ணே கருத்தே என் எண்ணே எழுத்தே
கதிக்கு ஆன மோனவடிவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே!

-கருணாகரக்கடவுள்-6

**இ.ள்.**

உனக்கு ஆனபூசை பண்ணேன். உனக்குப் பிரியமான பூசையைச் செய்யேன். ஒரு வடிவிலே பாவித்து இறைஞ்ச- ஓர் உருவிலே உன்னைப் பாவனை செய்துவணங்க, ஆங்கே- அதற்காகவே, பார்க்கின்ற மலரூடு- பார்க்கின்ற மலர்கள் எல்லாவற்றுள்ளும், நீயே இருத்தி- நீயே நீக்கமற நிறைந்திருக்கின்றாய், (ஆதலால்) அப்பனிமலர் எடுக்கவும் நண்ணேன்- அக்குளிர்ச்சியான மலர்களைப் பறிக்கவும் மனம் ஒருப்படேன், அல்லாமல்- அன்றியும், இரு கை குவிக்க எனின்- இரு கைகளையும் கூப்பி வணங்க என்றால், நீ என் உளம் நிற்றி- நீ என் மனத்தில் இருக்கிறாய், (ஆதலால்) நாணும்- என் மனம் வெட்கப்படும், (அப்படி மன ஒருமைப்பாடின்றி) நான் கும்பிடும்போது- நான் வணங்கும்போது, அரைக் கும்பிடு ஆதலால்- அது அரை நமஸ்காரம் ஆன படியால், நான் பூசை செய்யல் முறையோ- நான் பூசை

செய்தல் கிரமமாகுமோ; விண்ணே- ஆகாயமே; விண் ஆதி பூதமே- விண்முதலான பஞ்சபூதங்களே; நாதமே- நாத தத்துவமே, வேதமே- மறையே, வேதாந்தமே- மறை முடிபே, மேதக்க கேள்வியே- மேன்மை பொருந்திய கேள்வியே, கேள்வி ஆம் பூமிக்குள் வித்தே- கேள்வியாகிய நிலத்துள் முளைக்கின்ற விதையே, வித்தின் முளையே- வித்தின் முளையே, கருத்தே- மனமே, என் கண்ணே- என் தருக்கமே, எழுத்தே- இலக்கணமே, கதிக்காண மோன வடிவே, மோட்சத்துக்கு ஏதுவான மௌனரூபமே, கருணாகரக் கடவுளே- கருணைக்குப் பிறப்பிடமான நடராஜனே. உரை: பூவை கலியாண சுந்தரமுதலியார் எழுத்து என்பதற்கு இலக்கண மென்றும் பொருள் கண்டுள்ளார். எண் என்பதற்கு கணக்கு- தருக்கம்- இலக்கணம் என்றும் பொருள். இதை அவ்வையார் எடுத்தாண்டுள்ளார்.

எண் எழுத்து இகழேல்- ஆத்திசூடி

கணித நூலையும் இலக்கண நூலையும் படியாமல் (கற்காமல்) இகழ்ந்து தள்ளாதே.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்

கணிதமும் இலக்கணமும் மனிதருக்குக் கண்கள் போன்றவை. எல்லா உறுப்புக்களும் இன்றியமையாதனதான். எனினும் கண்ணின்றேல் இருட்டு வாழ்க்கைதான். இன்று கட்புலன் இல்லாதவர்கள் கற்றுத்தேறி உயர் பதவிகளையும் வகிக்கிறார்கள். இஃதே போலக் கல்வித்துறையும் வளர்ந்துள்ளது. பாடங்களும் பல கணிதம் விஞ்ஞானம் மட்டுமன்றி இலக்கிய இலக்கணமுமே தீவிர வளர்ச்சி கண்டுள்ளன. அறிவியல், அழகியல், நுண்கலை, கவின்கலையெனப் பிரிக்கப்பட்டுள்ளன. மனவியலே தனித்துவமானது. பெண் ஆணென்ற பேதமின்றி எல்லாரும் கல்விச் செல்வம் பெறுகிறார்கள். கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்று விழி எண்ணில் விழி ஏழாகும். அருள்ஞானம் பெற்றோர்க்கு அருந்தும் விழியென்று பாடியுள்ளனர். வள்ளுவனார் எண்ணையும் எழுத்தையும் கண்ணாக்கினார்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

-குறள் 392

எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்- அறியாதார் எண் என்று சொல்வனவும், மற்றை, எழுத்தென்று சொல்வனவும் ஆகிய கலைகள் இரண்டினையும், வாழும் உயிர்க்குக் கண் என்ப- அறிந்தார் சிறப்புடைய உயிர்கட்குக் கண்ணென்று சொல்வார். எண் என்பது கணிதம். அது கருவியும் செய்கையும் என இருவகைப்படும். அறியாதார் அறிந்தார் என்பன வருவிக்கப்பட்டன. பரி

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

-குறள் 393

கண் உடையர் என்பவர் கற்றோர்

கண் உடையர் என்று உயர்த்துச் சொல்லப்படுபவர் கற்றவரே, மற்றை கல்லாதவர் முகத்தின் கண் இரண்டு புண் உடையவர், கண்ணிலர்.

இறைவனையே "கண்ணே கண்ணிற் கருமணியே மணி யாடு பாவாயென வாக்குக்கு அதிபதியான நாவேந்தர் போற்றிப் புகழ்ந்தார்.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ் சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே என்னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையாவண்ணம்
ஆவடுதன் துறை யுறையும் அமர ரேறே

6:47.1

கண்கருமணி கட்பாவை பார்வையோடு தொடர்புடையன. இவற்றுட் பாவைதான் உருவைப் படம்பிடித்துக் காட்டுவது. அஃதின்றேற் பார்வையே இல்லை. அந்த கண் பிறவிக் குருடன். விழிகண் குருடன்- இடையில் ஏற்பட்ட குருடன்

வள்ளுவனார் கண்ணோட்டமென்றோர் அதிகாரம் வகுத்துள்ளார். கண்ணோட்டம் என்பது பழகினவரிடத்து மாற்றங்கள் ஏற்பட்டாலும் மறுத்தற்கு இயலாமல் மீண்டும் பழகுவது.

பண்ணென்னாம் பாடற்கிசை யின்றேற் கண்ணென்னாங்
கண்ணோட்டம் இல்லாத கண்

-குறள் 573

பாரதியார் சுதந்திரப் பெருமைபற்றிப் பாடும் போது கண்ணை வைத்தோர் கவிதை வளர்த்துள்ளார்.

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பனை இழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியா ரோ?

-தேசிய கீதம் 26.6

கண்ணிழந்தார் பார்வையை இழப்பார். சித்திரத்தை அனுபவிக்கக் கட்புலன் வேண்டும். இந்த அறியாமையை உணர்த்த ஒலிக்குறிப்பினாலே அதை கைகொட்டிச் சிரியாரோ" எனப் பாடினார். போலியானவர்களின் போக்கை வெளிப்படுத்த (நடிப்புச் சுதேசிகள்)

கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையற்ற
பெண்களின் கூட்டமடி கிளியே
பேசிப் பய னென்னடி எனப்பாடினார்.

நடிப்புச்சுதேசிகள்

கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையற்றோர் பற்றிய ஏழனம் இது. இக்கட்டுரையிலே கண்ணின் மகத்துவம் கண்ணியம் பேசப்பட்டது. இருகண்களும்தான் எண்ணும் எழுத்தும் பழைய காலத்துப் பெண்கள் கல்வியைப் போற்றாமையால் கண்ணை இழந்தனர். எனவே பெண் கல்வியின் காத்திரம் இப்பாடல் வழி- சமுதாயத்துக்கு உணர்த்தப்பட்டது. சிந்திப்போம். சிறப்போம் சீர் செய்வோம்.

முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத் தாய் தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல் என்றாற் சொல்லுமா றெங்ஙனே

-திருமந்திரம்

ஒரு குருவானவரின் சிவானுபவத்தை மாணவன் கேட்பது- தாய் அனுபவித்த இன்பத்தை மகள் கேட்பதைப் போன்றதாகும்.

# நல்ல வாழ்வு பெற்றிடவே நாளும் வருவீர் இவ்விடமே

செல்வம் எல்லாம் தருவானாம்
செல்வச் சந்நிதி உறைவானாம்
தொல்லை என்று வந்தவர்க்கு
சுகங்கள் அள்ளி அருள்வானாம்
சொல்லச் சொல்ல இனித்திடுமே
சுந்தரன் குமரன் பெயர்தானே
நல்ல வாழ்வு பெற்றிடவே
நாளும் வருவீர் இவ்விடமே

அன்ன தானக் கந்தனவன்
ஆற்றங் கரையில் உறைகின்றான்
என்ன வேண்டும் கேளுங்கள்
எல்லாம் அவனே தந்திடுவான்
மண்ணை உண்ட மாமனவன்
மருகன் ஆன குமரனிவன்
உண்மை இதனை நம்புங்கள்
உள்ளத்தில் அவனை இருத்துங்கள்

- கவிஞர் வ. யோகானந்தசிவம் -

ஒருவனிடம் அச்சம் கொண்டால் அவனிடம் அன்புகொள்ள முடியாது.

உ

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



*-வாரியார் சுவாமிகள் உரையுடன்-*

4. வளைபட்டகைம் மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைப்பட்டெழு, சூருரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவேலவனே.

## பதவுரை

கிளைபட்டு எழு- சுற்றத்தினர் சூழப் போருக்கு எழுந்த, சூர் உரமும்- சூரபன்மனுடைய மார்பையும், கிரியும் கிரவுஞ்ச மலையையும், தொளைபட்டு உருவ- தொளைத்து ஊடுருவிப்போகும்படி, தொடு வேலவனே- தொடுத்த வேலாயுதத்தையுடையவரே, வளைபட்ட கை- வளையலை யணிந்த கைகளையுடைய, மாதொடு- மனைவியுடன், மக்கள் எனும்- மக்களும் (பிற செல்வம்) உறவினர் என்று கூறப்படுகின்ற, தளைபட்டு அழிய- கட்டுப்பாட்டில் அடியேன் கட்டுண்டு அழிந்து போதல், தகுமோ? தகுமோ?- தக்கது ஆகுமோ? தக்கது ஆகுமோ? (இது தகாது)

## பொழிப்புரை

சுற்றத்தவர் சூழப் போருக்கு எழுந்து வந்த சூரபன்மனுடைய மார்பையும், கிரவுஞ்ச மலையையும் தொளைத்து ஊடுருவிப்போகுமாறு ஏவியருளிய வேலாயுதப் பெருமானே! வளையல் அணிந்த மனைவி மக்கள் சுற்றம் பொருள் என்கின்ற கட்டில் அடியேன் கட்டுண்டு அழிவது நீதியோ? நீதியோ? இது நீதியாகாது.

## விரிவுரை

*வளைபட்ட கைம்மாதொடு மக்கள் எனும்*
*தளைபட்டழியத் தகுமோ? தகுமோ?*

பெண்கள் கையில் வளையல் சூழ்ந்திருப்பதுபோல் ஆன்மாக்களை ஆசாபாசம் சூழ்ந்திருக்கிறது.

மாது- அழகு. இது பண்பாகு பெயராகப் பெண்ணைக் குறிக்கின்றது.

மனைவி, மக்கள் என்றதனால் இனம்பற்றி ஏனைய சுற்றத்தார், பொன், பொருள், நிலம்புலம் என்பவைகளையும் சேர்க்க. இவைகள்மீது ஆசை வைத்து அந்த ஆசையாகிய தளையால் ஆன்மா கட்டுண்டு அறிவு குன்றி அவலமுறுகின்றது.

தகுமோ என்ற சொல்லில் உள்ள ஓ என்ற இடைச் சொல் எதிர்மறைப் பொருளில் வந்தது.

முருகனுடைய திருவடிப்பேற்றை விரும்புகின்ற ஒருவர் மனைவி மக்கள் என்ற உயிர்ப்பற்றும்- பொன் பொருள் என்ற புறப்பற்றும் அறவே நீக்கி நிற்கவேண்டும்

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு"

என்கிறார் தெய்வப்புலவர்.

தளைபட்டழிதல் தகாது என்பதை வற்புறுத்தும் பொருட்டுத் தகுமோ தகுமோ என்று இருமுறை கூறுகின்றார்.

அடுக்கு- அச்சத்தையும் அவலத்தையும் குறிக்கும்.

"................. மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே

-திருஞானசம்பந்தர்

இது தகுமோ இது முறையோ இது தருமந்தானோ"

-திருவருட்பா

பெண்டிர்மக்கள் சுற்றமென்னும் பேதைப் பெருகடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் வேதனை நோய் நலியக்
கண்டுகண்டே உன்றன் நாமம் காதலிக் கின்றதுள்ளம்
வண்டு கிண்டிப் பாடுஞ்சோலை வலிவல மேயவனே

-திருஞானசம்பந்தர்

மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக்கிடம் ஆகாதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா கோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே.

-திருநாவுக்கரசர்

"தளைபட்டழியத் தகுமோ? என்று அருணகிரிப்பெருமான் கூறியது உலக மக்கள் நிலையைத் தம்மீது வைத்துக் கூறினார் என உணர்க!

"மனை மக்கள் சுற்ற மெனுமாயா
வலையைக் கடக்க அறியாதே
வினையிற் செருக்கி அடிநாயேன்
விழலுக் கிறைத்து விடலாமோ"

-திருப்புகழ்

***கிளைபட்டெழுசூர் உரமும்:-***

கிளை- சுற்றம். சுற்றத்தவர் சூழச் சூரபன்மன் போருக்கு எழுந்து வந்தான் பல கிளைகளோடு மாமரமாய் சூரபன்மன் நின்றான் என்றும் பொருள்படும்.

"துன்னுபல் கவடு போக்கிச் சூதமாய் அவுணன் நின்றான்"

-கந்தபுராணம்

திரையெறி மலைகளிற் கவடு பல போக்கி நின்ற மா"

-கல்லாடம்

சூரபன்மன்- ஆணவ மலம். வேல் ஞானம்; ஞானம் ஒன்றுதான் ஆணவத்தை யழிக்கும்.

"கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேல் கந்தனே"

-கந்தரலங்காரம் (32)

***கிரியும்:-***

தாரகனுடைய மாயைக்கு உதவ கிரவுஞ்ச மலையாய் அரக்கன் நின்றான்.

அன்றி, சூரபன்மனுக்கு ஏழு மலைகள் துணை செய்து நின்றன. அவற்றை முருகவேள் வேலால் அழித்தருளினார்.

"தணியாச் சாகரமேழும் கிரியேழும்
சருகாக் காய் கதிர் வேலும்"

-(தவர்வாட்) திருப்புகழ்

"ஏழுமலை பொடித்த கதிரிலை நெடுவேல்"

-கல்லாடம்

***தொடுவேலவனே:-***

சூரனையும் மலையையும் உருவுமாறு தொட்ட வேலாயுதரே!

தொட்ட என்று இறந்த காலத்தாற் கூறற்பாலதாகிய இச்சொல் தொடு என்று நிகழ்காலத்தில் வந்தது என்ன எனின், ஆன்மாக்களின் மன வலியை எப்போதுமே கெடுக்கும் இயல்பு பற்றியென உணர்க.

"சூரனாகிய ஆணவத்தையும், கிரவுஞ்சமாகிய மாயையும் வேல்கொண்டு அழித்த தேவரீர் அடியேனுடைய மாயா பாசத்தை அழிக்கக்கூடாதா?" என்று அடிகளார் முருகனிடம் முறையிடுகின்றார்.

## கருத்துரை

வேலாயுதக் கடவுளே! பாச பந்தத்தில் அடியேன் கட்டுண்ணாமல் காத்தருள்.

(தொடரும்...

## கண்ணுக்குத் தெரியாதவை

**கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகத்திற்குச் சேவை செய்வதோடு, கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கும் சேவை செய். ஏனென்றால், உன் மனைவியைக் காப்பாற்றுவது மிக மிக அவசியம். ஏன்? அவள் உன் வாழ்க்கைத் துணைவி, இம்மைக்கும், மறுமைக்கும் அவள் உனக்குத் துணையாக நிற்கிறாள். மனைவி உனக்குச் செய்யும் பணிவிடைகள் கண்ணுக்குத் தெரிந்தவை. ஆனால், தவம் இருந்து கருவுற்று உன்னைப் பெற்றுப் பாலூட்டி மருந்து கொடுத்து தான் பத்தியமிருந்து செய்த தாயின் உதவிகள் உனது கண்ணுக்குக் காணாதவை.**

**ஆகவே கடவுள், தாய் போன்றவர். உலகம் மனைவி போன்றது.**

**அறியாமையே கஷ்டங்கள் அனைத்திற்கும் காரணம்.**

உ

(தொடர்ச்சி...

# ஆனந்தம் என்பது என்ன?

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்

## நீங்கள் ஒரு ஆனந்தத் தொழிற்சாலை!

கடந்த இருபத்துநான்கு மணிநேரத்தில் நீங்கள் எவ்வளவு மணிநேரம்; அல்லது எத்தனை நிமிடங்கள் ஆனந்தமாக இருந்தீர்கள்? இதைச் சற்று ஆழமாக யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு இரவிலும் நித்திரைக்குச் செல்லுமுன் ஐந்து நிமிடங்களையாவது இதற்காக ஒதுக்குங்கள். 'இன்று எவ்வளவு நேரம் நான் ஆனந்தமாக உணர்ந்தேன்... நேற்றைவிட இன்று என் ஆனந்தம் குறைந்துவிட்டதா? அல்லது அதிகமாகி இருக்கிறதா?' என்று அசை போட்டுப் பாருங்கள்.

இது அவசியம் நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டிய விடயம்!. வாழ்க்கையில் நீங்கள் பல விடயங்களைச் செய்ய நேர்ந்தாலும் அந்தச் செயல்களின் ஒரே நோக்கம் 'ஆனந்தமாக இருக்க வேண்டும்' என்பதுதான். இல்லையா? ஆக, நீங்கள் ஒரு ஆனந்தத் தொழிற்சாலை! ஆனந்தம் என்ற அற்புதமான விடயத்தை உருவாக்குவதே உங்கள் வேலையாக எப்போதும் இருக்கிறது.




ஐந்து வயதுக் குழந்தையாக இருந்தபோது எவ்வளவு ஆனந்தமாக இருந்தீர்கள்.... அன்று நீங்கள் பெரிதாக எதையுமே செய்துவிடவில்லை; ஆனாலும் ஆனந்தமாக இருந்தீர்கள். வளர்ந்தபிறகு இன்று எத்தனையோ செயல்களைச் சாதித்தும் உங்களால் ஆனந்தமாக இருக்க முடியவில்லை.

குழந்தைப் பருவத்தில் உங்களால் சுதந்திரமாக இருக்க முடியவில்லை. பெரியவர்கள் கைகாட்டும் திசையில் உங்கள் வாழ்க்கை நகர்ந்தது. அப்போதெல்லாம், "வேகமாக வளர வேண்டும், இந்தக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழவேண்டும்" என்று நினைத்தீர்கள். நினைத்ததுபோலவே இப்போதும் வளர்ந்து விட்டீர்கள். சுதந்திர வாழ்க்கைக்கான தேவைகளாக நீங்கள் நினைத்த வேலை அல்லது தொழில்,

வீடு, வாகனம், வங்கிக் கணக்கு, குடும்பம் என எல்லாவற்றையும் உருவாக்கிவிட்டீர்கள். இவை அனைத்தும் வரவர, உங்கள் ஆனந்தமும் பல்மடங்கு பெருகியிருக்க வேண்டும் தானே! ஆனால் இன்று ஆனந்தத்தைத் தொலைத்துவிட்டு, இவற்றில் சிக்கிக்கொண்டு தவிக்கிறீர்கள்.

நாம் ஒரு தொழிற்சாலை நடத்துகின்றோம் என்று வைத்துக்கொள்வோம். அதற்குத் தேவையான மூலப்பொருட்களை எல்லாம் வாங்கிச் சேர்த்து, ஆட்களை நியமித்து, நிர்வகித்து, நாள்முழுவதும் நமது கடுமையான உழைப்பை அங்கு கொடுக்கிறோம். எல்லாம் செய்தும் இறுதியில் நாம் எதிர்பார்த்த பொருள் உற்பத்தியாகவில்லை என்றால், அந்தத் தொழிற்சாலையை என்ன செய்வது? ஒன்று அதை இழுத்து மூடிவிடவேண்டும்; அல்லது அதை சரிபார்த்தே ஆகவேண்டும். அவ்வளவுதான்..... இல்லையா?

## வாழ்க்கையின் ஆதாரம்!




"கடைசியில் எல்லோரும் சந்தோசமாக வாழ்ந்தார்கள்" என கதையில் முடிவைச் சொல்கிறமாதிரி, ஆனந்தமாக இருப்பது என்பது முடிவு அல்ல; அதுதான் உங்கள் வாழ்வின் முதற்படி! ஆனந்தம் என்ற அடித்தளம் உறுதியாக இருந்தால்த் தான் அதன்மீது உங்கள் வாழ்வு என்ற மாளிகை மலர முடியும். வாழ்வின் அடித்தளமான ஆனந்தம் உங்களிடம்தான் உருவாக வேண்டும். இந்த உண்மையை உணராமல் அதைத்தேடி எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

அடித்தளமே இல்லாத ஒரு வீட்டில் குடி இருப்பது எவ்வளவு ஆபத்தான விடயம் தெரியுமா? வீட்டின் கூரையைக் கையில் தாங்கிக்கொண்டே உங்களால் எவ்வளவு நேரம் இருக்கமுடியும்? சற்றுநேரம் நீங்கள் தளர்ந்தால், உங்கள் தலைக்கு மேலேதான் எல்லாம் வந்து விழும்..... இல்லையா?

நிலையான அஸ்திவாரம் அமைந்தால், அதன்மீது எவ்வளவு பெரிய மாளிகையையும் நீங்கள் கட்டிக்கொள்ளலாம்.

வாழ்க்கையும் இப்படித்தான்! நீங்கள் ஆனந்தமாக இருந்தால் உங்கள் விருப்பப்படி ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் இப்போது உங்களிடம் ஆனந்தம் என்னும் அஸ்திவாரமே இல்லாததால், வாழ்க்கையே பெரும் பாரமாகிவிட்டது. தினசரி செய்யும் வழக்கமான செயல்கள்கூட உங்களுக்குப் பெரும் சலிப்பையும் வேதனையையும் தரும் விடயங்களாக மாறிவிட்டன.

உ




# துவாரகை

குஜராத் மாநிலத்தின் மிக்க பழமை வாய்ந்த கோயில்களில் ஒன்று துவாரகை. துவாரகையை இங்குள்ள மக்கள் ஒரு கோயி லாகப் பார்க்காமல் கிருஷ்ணர் அரசாண்ட தர்பாராகவே இன்றும் கருதுகிறார்கள். அதற்கு ஏற்றபடியே துவாரகை நகர மக் களது வாழ்க்கை முறைமையும் பண்டிகை களும் கொண்டாட்டமும் அமைந்துள்ளது.

குஜராத் தலைநகரான அலகபாத் திலிருந்து ஏறக்குறைய 300 கி.மீ தூரத்தில் துவாரகை உள்ளது. முன்னர் இதே இடத் தில் இருந்த துவாரகையினை ஆறுமுறை கடல்கோள் அள்ளிச் சென்றதாகவும், அதன் பின்னர் கண்ணனே இந்தத் துவாரகையை பழைய அமைப்புடனேயே சிருஷ்டித்து அருளியதாகவும் தொலைக்காட்சிக்குப் பேட்டி பளித்த வயது முதிர்ந்த பலரும் தெரிவித் தனர். அதன்படி பார்த்தால் இது ஏழாவது துவாரகை. இதன் பரப்பளவு 4 சதுர கி.மீ. குஜராத் நகரத்தில் அண்மைக்கால புதிய கட்டிடங்கள் உருவாகிவிட்ட போதிலும், பழைமை மாறாமல் இருக்கின்ற கட்டிடங் களும் இடிபாடுகளும் நிறையவே உள்ளன.

குஜராத் மாநிலத்தின் கடற்கரை மொத்தம் 1600 கி.மீ நீளமானது. இந்த நீண்ட கடற்கரையில் பல துறைமுகங்கள் உள்ளன. இந்தத் துறைமுகங்களுக்கு இடையே "லோத்தல்" என்பது சிறப்பானதொன்றாகும். குஜராத் மாநிலத்தின் பெரு நதியான கோமதி நதியும், அரபிக் கடலும் சங்கமிக்கும் இந்தத் துறைமுகத்தை அண்டியே இந்தத் துவாரகை காணப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து பல அடிகள் உயர்ந்த கற்பாங்கான பூமி இது. மூன்று பக்கமும் கடலால் வளைத்தபடி (ஒரு சிறிய பகுதி மட்டுமே தரைத் தொடர்புடன்) ஒரு குட்டித் தீவு போலக் காணப்படுகிறது துவாரகை நகரம்.

கண்ணன் தங்கியிருந்த இடத்தினைக் கோயிலாக மாற்றாமல், குஜராத் மாநிலத்துக் கென்றே உரித்தான அமைப்புக் கொண்ட வீடாகவே இன்றும் வைத்துள்ளார்கள். ருக் மணியை கண்ணன் கைப்பிடித்த இடம் சற்று தூரத்தில் உள்ளது. அதுவும்கூட ஒரு வீடு போன்ற அமைப்புக்கொண்டதே தவிர கோயில் போன்றதாக இல்லை.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத் திலோ, ஏனைய சிவன் கோயில்களிலோ விக்கிரகங்களுக்கிடையே நடைபெறும் மண நிகழ்வுத் திருவிழா போலல்லாமல், சாதாரண மக்கள் வாழ்வில் நடைபெறும் மணவிழா போல அனைத்துச் சடங்குகளும் இங்கே நடைபெறுகின்றன. மாப்பிள்ளை அழைப்பு,

**உடலுக்கு உழைப்பு போன்று உள்ளத்துக்குத் துன்பங்கள் பலத்தைத் தரும்.**

பலநூறுபேர் கூடி ஒரு ஊரிலிருந்து மறு ஊருக்குச் சீர்வரிசை கொண்டுபோதல், அவர் களுக்கான வரவேற்பும் உபசாரமும், திரு மணத்தின் பின்னரான உபசரிப்பு என அனைத்தும் இங்கு உண்டு.

கண்ணன் தினமும் வந்து வணங்கும் சிவன் கோயிலான "நித்தீஸ்வரர்" கோயில் துவாரகைக்கு அருகே உள்ளது. இந்தக் கோயிலின் உள்ளே "சாவித்ரி கிணறு" என அழைக்கப்படுகின்ற கிணறு ஒன்றுண்டு. வழமையான ஒரு கிணற்றளவு ஆழமுள்ள தாக இருந்தபோதும், அடிப்பரப்பிலுள்ள ஒரு சிறுகல்கூட துலாம்பரமாகத் தெரியும்படி பளிங்குபோன்ற சுத்தமானதாக தண்ணீர் உள்ளது. எந்த ஜீவராசியும் தண்ணீரில் இல்லை. இந்த நன்னீரைக் கொண்டே ஒரு நாளைக்கு இருமுறை கிருஷ்ணர் நித்தீஸ் வரருக்கு அபிஷேகஞ்செய்து வந்தார் எனக் கூறப்படுகிறது. கிணற்றில் இன்னுமொரு விஷேடமுண்டு. கிருஷ்ணர் வசித்ததாகக் கருதப்படும் வீட்டில் தற்போதுள்ள கண்ணன் விக்கிரகம் இந்தக் கிணற்றிலிருந்துதான் எடுக்கப்பட்டதாம். அது சாதாரண கருங்கற் சிலை போன்றில்லாமல், 3அடி உயரம் கொண்ட பளிங்குச் சிலை போன்றதாக உள்ளது.

துர்வாச முனிவரின் போதனைகளை முழுமனதுடன் கேட்காமல் மனதை அலை பாயவிட்ட கண்ணனும் ருக்மணியும் துர்வாச ரின் சாபத்துக்கு ஆளாயினர் அதன்படி ஊரின் எல்லையையொட்டியுள்ள வீட்டில் ருக்மணியை கிருஷ்ணர் ஒருநாளில் இருமுறை மட்டுமே சந்தித்து வந்தாராம். ருக்மணி தனித்திருப் பதால் துவாரகையின் வடகோடியில் உள்ள இவ்வாலயத்திற்கு புதிதாகத் திருமணம் செய்துகொண்ட தம்பதியர் செல்வதில்லை.

துவாரகையில் எப்பொழுதும் எல்லா இடங்களிலும் கண்ணனுக்குரிய கொடி மட்டுமே பறக்கும். மாநில அரசு, மத்திய அரசு என அனைத்தும் இருந்தாலும் அதன் கொடிகள் எதுவும் இங்கு பறப்பதில்லை. துவாரகையின் நடுவே உள்ள கண்ணன் கோயிலில் (வீட்டில்) குஜராத் மாநிலத்துக்கே உரித்தான வடிவில் 5 அடுக்குகள் கொண்ட இடமாகக் கண்ணன் கோயில் (வீடு) காணப் படுகிறது. முன் மண்டபம் 60 தூண்கள் கொண்டது. மண்டபத்தின் மேல் 157அடி உயரத்தில் கண்ணன் கொடி எப்போதுமே பறந்தபடியே இருக்கும். ஒருநாளைக்கு மூன்றுமுறை கொடியை மாற்றுவார்கள். இந்திய ரூபாயில் ரூபா 5000/= செலுத்தி முன் பதிவு செய்யும் நபர்களுக்கு கொடி கொண்டு வர நாளும் நேரமும் ஒதுக்கப்படும். 2013ஆம் ஆண்டுவரை கொடி ஏற்றுவதற்கான முன் பதிவுகள் முடிந்துள்ளன. கொடி கொண்டுவர அனுமதி கிடைத்தாலும், மேலேறிக் கொடியை உயர்த்துவது பரம்பரை யாக ஒரு குறித்த குடும்பத்தினருக்கே வழங்கப்பட்டுள்ளது. 17 அடி நீளம் கொண்ட கண்ணன் கொடி எல்லா நாட்களிலும் ஒரே நிறம் கொண்டதல்ல. திங்கள்- வெள்ளை; செவ்வாய்- மஞ்சள்; புதன்- பச்சை; வியாழன்- நீலம்; வெள்ளி- சிவப்பு; சனி- ஊதா; ஞாயிறு- றோசா நிறம். கறுப்பு நிறம் கிடையாது. எல்லா நிறக் கொடியிலும் நடுவே பெரிய 'வட்டம்' ஒன்று பளிச்செனத் தெரியும்.

துவாரகை கண்ணன் கோயிலில் நடை பெறும் விழாக்களில் "கோகிலாட்டமி" விழாவே மிகச் சிறப்பானது. பல லெட்சம்பேர் கூடி சிறப்பாகக் கொண்டாடும் இவ்விழா வினை காஞ்சியிலுள்ள சங்கர மடத்தின் தலைமைப் பீடமே செய்து வருகிறது. பல் வேறு இடங்களிலும் காஞ்சித் திருமடங்கள் இயங்கி வந்தாலும் கிழக்கே- காசியிலும், மேற்கே- துவாரகையிலுமே இவர்களது

மடமும் நடைமுறைகளும் பிரபலமாக உள்ளன.

கண்ணன் முடிசூடிய இடம், வசித்த இடம், அரசாண்ட மாளிகை, ருக்மணி வாழ்ந்த இடம், திருமணம் நடைபெற்ற இடம் எனத் துவாரகை நகரம் முழுவதும் கண்ணனோடு தொடர்பான இடங்களாகவே உள்ளன. கடல்கொண்ட இடங்களில் நடைபெற்று வரும் அகழ்வுகளும், ஆராய்ச்சிகளும் இங்கும் நடைபெறுகின்றன. நாளடைவில் இன்னும் பல ஆச்சரியங்கள் தொடரலாம்.

**(09.03.2011 சன் தொலைக்காட்சியில் இரவு 10.30க்கு ஒளிபரப்பு செய்யப்பட்ட "துவாரகை" பற்றிய விபரணச் சித்திரத்தின் சுருக்கம் இது)**

## நம்பி வாழுவீர் கட்டளைக் கலிப்பா

-பூ. தியாகராஜா-

**நீல மஞ்ஞையில் நேர்தரு கந்தவேள்**
**நேரில் நம்மிடம் வாராத போதிலும்**
**மூல மூர்த்திதன் மைந்தனா மானதால்**
**முற்றும் நம்நிலை யாவு மறிந்தவன்**
**ஏல வேபல லீலைகள் செய்தவன்**
**என்று மெம்வினை தீர்ப்பத வன்கடன்**
**ஞால மீதினிற் சந்நிதி மேவினன்**
**நம்பி வாழுவிர் நற்கதி நண்ணுமே.**

**அன்ன தானநல் லாச்சிர மத்திலே**
**அன்பர் பண்பாட்டுப் பேரவை தன்னிலே**
**பன்ன ரும்பல பக்தர்கள் மத்தியில்**
**பாயு மாறுதன் பாற்படு பாங்கரில்**
**இன்ன தன்மைய னென்றறி யாதவெம்**
**ஏந்தல் வீற்றிருந் தாளுவ னெம்மையே**
**தன்ன தாணையிற் றாங்குமி வன்னெனச்**
**சாற்றுந் தெய்வதம் சந்நிதி வேலனே.**

**கண்ணி லேதுளி யானது வீழுமே**
**கணக்கி லாத்துதிப் பாடலொ லிக்குமே**
**திண்ணி தாம்புயம் பூரித்துப் போகுமே**
**தேகம் புல்லரிப் பாகவி ருக்குமே**
**எண்ணி எண்ணிய வன்பதம் பற்றிட**
**இதய மானது ஏக்கத்தி லாழுமே**
**வண்ண மாமயில் வாகனர் சந்நிதி**
**வாழ்த்தி நின்றிடு மன்பர்கள் தன்மையே.**

**நிலையான உறுதிதான் மற்ற பண்புகளுக்கெல்லாம் துணையாகும்.**

உ

(தொடர்ச்சி...



# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சங்கநாற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம் - காரைநகர்

வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்புந்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்

**பதவுரை:**

வாத ஊரினில் வந்து இனிது அருளி- திருவாதவூரில் தானே எழுந்தருளி வந்து இனிதாக அருள்செய்து; பாத சிலம்பு ஒலி காட்டிய பண்பும்- திருவடியிற் றரித்த சிலம்பின் ஓசையை அடியேனுக்குக் கேட்பித்த தன்மை யும்.

திருவாதவூரடிகள் குறிப்பிட்ட நாளிலே குதிரை வரும் என்று எதிர்நோக்கியிருந்த பாண்டியன் "விளம்பிய காலஞ் சென்ற தின்னமும் வந்ததில்லை யினப்பரி" என்று சீறி அடிகளை வெகுண்டுரைக்க, அவர் அதற்கு ஆற்றாது இறைவனைக் குறை யிரந்து வேண்ட இறைவனும் நரிகளெல்லா வற்றையும் பரிகளாக்கித் தானும் ஒரு புரவி மீது ஏறி வருகின்றவன், திருவாதவூரின் கண் தம் வரவினை எதிர்நோக்கியிருந்த அடி களுக்கு அவ்வூரின்கண் தன் திருவடிச் சிலம்போசையைக் காட்டியமையின் "வாதவூ ரதனில் வந்தினி தருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" என்றார்.

திரு ஆர் பெருந்துறை செல்வன் ஆகி- அழகு நிறைந்த திருப்பெருந்துறையில் அருட்செல்வனாகத் தோன்றி என்னை ஆட் கொண்டபின், கரு ஆர் சோதியில் கலந்த கள்ளமும்- எப்பொருட்கும் மூலமாய் அமைந்த ஒளியில் மறைந்த தன்மையும்.

திரு- அழகு; செல்வமுமாம். "செல் வத் திருப்பெருந்துறையில்" (அருட்1) என வருதலும் காண்க. இறைவன் ஞானாசாரி யனாகத் திருப்பெருந்துறையில் தோன்றி யமையின் செல்வனாகி என்பதற்கு ஞானா சாரியனாகத் தோன்றி எனினுமமையும் இறை வனைச் செல்வன் என்றல், "சிந்தையாலு

மறிவருஞ் செல்வனே" (சத47) "சீருடைச் செங்கமலத்தில் திகழுரு வாகிய செல்வன்" (குயில்9) என வருவனவற்றிலும் காண்க. கருவார் சோதி- விந்துதத்துவத்தின் ஒளி. அதுவே எல்லாத் தத்துவங்களுக்கும் தாத்து விகங்களுக்கும் மூலமாதல் பற்றிக் "கருவார் சோதி" என்றார். இப்பகுதியால் எல்லாம் வல்ல இறைவன் திருப்பெருந்துறையில் ஞானாசாரியனாக எழுந்தருளியிருந்து வாத வூரடிகளை ஆண்டு கொண்டருளி மெய்ப் பொருளை உபதேசித்துப் பின்னர் ஒளிவடி வில் மறைந்தமையைக் கூறினார்.

"அங்க ணிவ்வா றறைந்திடு காலையப்
பொங்கு ஞானப் புதல்வர்க டம்மொடு
மங்கை நாயகன் மாணிக்க வாசக
விங்கு நில்லென் றியம்பி மறைந்தனன்" (ஞானோபதேச54)

என நம்பி திருவிளையாடற் புராணத்து வருதலுங் காண்க.

பூவலம் அதனில் பொலிந்து இனிது அருளி- திருப்பூவலம் என்னும் திருப்பதியில் விளங்கி இனிதாக அருள் செய்து, பாவம் நாசம் ஆக்கிய பரிசும்- அடியவர்களின் தீவினையை அழித்த தன்மையும்.

சயம் பெற- தன் அடியவனான பாண்டியன் வெற்றியடையும் பொருட்டு, தண் நீர் பந்தர் வைத்து- அவன் படைகளின் விடாய் தீர்த்தற் பொருட்டுக் குளிர்ந்த நீரினை உதவும் பந்தல் ஒன்று இட்டு, நல் நீர் சேவகன் ஆகிய நன்மையும்- நல்ல நீரினை வழங்கும் வேலையாளாக உருவம் புனைந்த நன்றியும்.

முன்னொரு காலத்திலே சிவபெரு மானிடத்துப் பேரன்புடைய பாண்டியனொரு வன் மதுரைமாநகரிற் செங்கோலோச்சி வரு நாளில், அக்காலத்திலிருந்த சோழமன்னன் ஒருவன் தான் பயந்த கன்னிகையைக் கொடுத்துப் பாண்டியனோடு உறவுகொள் வோம் என்றெண்ணித் தக்கார் பலரை அவன் பால் விடுப்ப அவரும் அதற்கு இயைந்தான். இதனை அறிந்த அப்பாண்டியன் தம்பி சோழன்மகளைத் தான் கொள்ளக் கருதிப் படையோடு செல்ல, அதனைக் கண்ட அச் சோழன் அவனுடன் எதிர்நிற்கமாட்டானாகி அச்சங்கூர்ந்து தன் மகளை அவனுக்குக் கொடுத்தான். அதன் பின்னர் அச்சோழன் தனக்குப் பெரும் பகைவனாகிய வடநாட் டரசன்மேல் மருமகனாகிய பாண்டியனோடு சென்று அவனை வென்று மீண்டான். வெற்றி யினால் இறுமாப்படைந்த சோழன் மருகன், தருமநெறி கோடாத தன் தமையனை அம ரிடைவென்று மதுரையைக் கொள்ள எண் ணிச் சோழனோடுங் கூடிப் பெரும் படையி னோடும் மதுரையை அணுகக்கண்ட பாண்டி யன் யாம் எதிர்நிற்கமாட்டோம்; என் செய் வோம் என்று சொக்கநாதருக்கு விண்ணப்பஞ் செய்தான். அப்போது, "நீ அஞ்சாது படை யொடு எதிர் சென்று போர் செய்குதி; வென்றி தருகுவம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றி யது. பாண்டியனும் மகிழ்ந்து தன் தானை யொடு எதிர் சென்று சொக்கனை உள்ளத்து நினைத்து அவ்விருவரோடும் போர் புரிந்தான். இரு திறத்தினரும் பொருகின்ற காலை இறைவன் திருவருளால் வெப்பம் பொருந்திய கோடை முற்றுதலால் பகைவர் படை வாயு லர்ந்து உதகமின்றி இளைத்துப் போர்க் களத்தில் வீழ்ந்தது. இறைவன் பாண்டி யனுக்குச் சயமுண்டாகச் சேவகனுருப் புனைந்து அவன் படைநடுவுள் தண்ணீர்ப் பந்தர் வைத்தான். பாண்டியனும் அவன்

**அபாயத்தை எதிர்க்கத் துணிந்து அச்சத்தை வெல்பவனே வீரன்.**

படைஞரும் அப்பந்தரிற் சென்று குளிர்ந்த நறிய நீரைப் பருகி அயர்வு நீங்கிக் கிளர்ந்து அமர்செய்து பகைவர் படையைத் தொலைத்துச் சொக்கன் கருணையைத் தொழுது வாழ்த்திப் பகைவனாய் வந்த தம்பியையும் அவன் மாமனான சோழனையும் சிறைப் பிடித்து மீள்கையில் தண்ணீர் பரிந்தளித்த சேவகனொடு அப்பந்தரையும் காணாராயினர். வெற்றிபெற்ற பாண்டியன் அதிசயித்து இறைவன் திருவருளை நினைந்து துதித்தான் என்று இவ்வரலாற்றை நம்பி திருவிளையாடற் புராணம் கூறும்.

பந்தல்- பந்தர் என்றாயது "கருந்துடி தூங்கும் துணைக்காற் பந்தர்" (பெரும்பாண் 124) என்புழிப்போல, நன்னீர்- பரிமளஞ் சேர்ந்த குளிர்ந்த நல்லநீர். "பரிமளஞ்சேர், சீதள வமுதை நல்கத் தெளிந்தது குடித்த சேனை" (நம்பி. திருவிளை. தண்ணீர்ப் 16) என வருதலுங் காண்க. நன்மையும் என்றார் தருமநேர் விளங்க வைத்தமையின். "பொருவருஞ் சய முண்டாகத் திருவுருக் கரந்து மற்றோர் சேவகனுருப்புனைந்து, தருமநேர் விளங்க வைத்தான் றண்ணீர் பந்தர்" (நம்பி திருவிளை. தண்ணீர்ப் 15) என வருதலுங் காண்க.

வெண்காடு அதனில் விருந்தினன் ஆகி- திருவெண் காட்டிலே புதிது வந்தோனாகி, குருந்தின்கீழ் அன்று இருந்த கொள்கையும்- குருந்தமர நீழலின்கண் அந்நாளில் வீற்றிருந்த கோட்பாடும்.

விருந்தினனாகி என்றதனால் பழையோனாகிய இறைவன் புதியோனாகத் திருவுருக்கொண்டு போந்தமையும், "வெண்காடதனில் குருந்தின் கீழன்றிருந்த கொள்கையும்" என்றதனால், திரு வெண்காட்டிலே குருந்தமர நீழற்கண் அந்நாளில் அங்ஙனம் புதியோனாக வீற்றிருந்து அன்பர்களுக்குப் போதித்தருளி மறைந்தமையும் பெறப்படும்.

(தொடரும்....

## சந்நிதிக் கந்தன் கூற்றுக்கோர் கலிமாலை- 20

-இராசையா குகதாசன்-

**பல்லவி**

**சேயென்னைக் காத்திடையா! செல்வவடிவேலா!- நோயால்**
**சாய்வுற்று விழும்போது சந்நிதியானே வந்துன்**

**அநுபல்லவி**


**காய்வுற்றுக் காலனுயிர் கவர்ந்திட வரும்போது**
**பாய்வெள்ளி வேலோடு பாவியென் முன்வந்தே**

**சரணம்**

**பாயுற்று நீர் பெருக பரனுன் புகழ்தன்னை**
**வாய்விட்டுப் பாட அருணை கிரிதனுக் கருளியவா!**
**ஆய்வுக்கு அரியவுந்தன் அருட்திருப் புகழ்தந்தேன்**
**தோயுற்றுன் அருள்மழையில் துலங்கிட மனமிரங்கி**
**பாய்கட்டிக் கடலோடும் பரம்பரைக் கதிர்காமர்**
**வாய்கட்டிப் பூசைசெய வாஞ்சையோ டருளியவா**
**தாய்சக்தி வேல்வடிவில் தன்னருள் தருபவனே!**
**நோய்விட்டுப் போகநாளும் நீறுந்தந் தாள்பவனே!**

**(சேயென்னை)**

**நாம் இணைந்து வாழாவிட்டால் அடுத்து நாம் அழிவது உறுதி.**



# விநாயக வழிபாட்டின் தத்துவ விளக்கங்கள்

*செல்வி அம்பாலிகா தம்பாப்பிள்ளை அவர்கள்*

உலகிலே வாழ்ந்து வரும் மக்கள் ஆதிகாலம் தொட்டு இன்றுவரை தத்தம் கட்புலனுக்கும் அறிவிற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளை சிந்தித்து வணங்கி அருள்பெற்று வந்துள்ளனர். இந்தியாவிலே புராதனகாலம் தொட்டு தொடர்ந்து வளர்ந்து நிலவிவரும் சமயம் இந்துசமயமே. இச்சமய வழிபாட்டிலே தத்துவமுறைகளில் பல தெய்வ வழிபாடு நிலவி வந்தாலும் அடிப்படையில் அவை அனைத்தும் ஒரு தெய்வ வணக்கத்தையே உள்ளடக்கியவையாகும். இக்கருத்தினையே இருக்குவேதம் "ஏகம் ஷத் விப்ர பகுதா வதந்தி" எனக்கூறும். அதாவது உண்மைப்பொருள் ஒன்றே. அதனையே ஞானிகள் பலவாறாக கூறுவர் என்பதாகும். இதனையே சிவஞான சித்தியார்,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்"

எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் கீழ் இந்துமத வழிபாடு அருவம், உருவம், அருவுருவம் என மூன்றாகும். சாதாரண மக்கள் உருவவழிபாட்டின் ஊடாகவே பரம்பொருளை எளிதில் விளங்கிக் கொள்கின்றனர். இவ்வாறான திருவுருவங்களிற்கு குறியீடான கருத்துக்களும் தத்துவார்த்தமான விளக்கங்களும் உள்ளன.

எக்காரியத்தை எவர் செய்யினும் அதற்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நீக்கும் வண்ணம் முதலில் விநாயகர் வணங்கப்படுகிறார். அதனால்தான் இந்துசமயக் கிரியைகளின் தொடக்கத்தில்

"சுக்லாம் பரதரம் விஸ்ணும் சசிவர்ணம்
சதுர்புஜம் பிரசன்ன வதனம் த்யாஜேத்
வர்வ விக்னோப சாந்தயே"

அதாவது "இடையூறுகள் அனைத்தும் நீக்கும் வண்ணம் வெண்ணிற ஆடை தரித்தவரும் எங்கும் நிறைந்திருப்பவரும் சந்திரன் போன்ற வெண்ணிறம் உடையவரும் நான்கு திருக்கரங்களை உடையவரும் மகிழ்ச்சி பொங்கும் இனிய திருமுகத்தை உடையவருமான விநாயகப் பெருமானை தியானித்தனர்" எனும் ஸ்லோகம் இடம்பெறுதல் நன்கு கவனிக்கத்தக்கது.

வேதங்களின் சாரமாகவும் முடிவாகவும் உள்ள ஓங்காரத்தின் அதாவது பிரணவத்தின் வடிவமாகவே விநாயகப் பெருமான் விளங்குகிறார். இதனை ஔவையார்

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்றார். பிரணவத்தின் தனிச்சிறப்பை கடோபநிடதம் கூறுகின்றபோது,

"எல்லா வேதங்களும் எப்பதத்தினை அடையத் தகுந்ததாக பரம தாற்பரியத்துடன் உபதேசிக்கின்றனவோ - தவங்கள் யாவும் எதனை உபதேசிக்கத்தக்கது எனக் கூறுகின்றனவோ, எதை விரும்பி பிரமச்சரியத்தை பின்பற்றுகின்றார்களோ அதனை சுருக்கமாக கூறுவேன் அதுவே ஓங்காரமாகும்" என யமன் நசிகேதனுக்கு உபதேசிப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்துசமயக் கிரியைகளிலும் எந்த நூல்களைப் படிக்கும்போதும் தொடக்கத்திலும், முடிவிலும் 'ஓம்' என்று கூறப்படும். ஓங்காரத்தில் உள்ள அகரம், உகரம், மகரம் (அ, உ, ம) என்பன முறையே சிவம், சக்தி, நாதம் என்பனவற்றைக் குறிக்கும். ஆனால் ஓங்காரமோ அனைத்து ஒலிகட்கும் மூலமாகும்.

இதனையே அப்பர் சுவாமிகள்

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" எனக்கூற,

அருணகிரிநாதர்,

"நாதவிந்து கலாதி நமோநம"

என்றும் கூறுகிறார். ஓங்காரத்தில் வரும் அகரம், உகரம், மகரம் ஆகிய மூன்று ஒலிகளும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளையும் குறிக்கும் என்பர். ஆனால் விநாயகப் பெருமான் மும்மூர்த்திகளின் வடிவமாகவே விளங்குகின்றார். மேலும் 'ஓ' என்பதனை 'உ' என்றும் எழுதும் வழக்கமுண்டு. இதனை பிள்ளையார் சுழி என்பர். பிள்ளையார் சுழியில் உள்ள வட்டம் விந்துக்களையும் நீண்டகோடு நாதத்தையும் குறித்து நிற்கும். இதனால் 'சிவசக்தி வடிவமே விநாயகர்' என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கணபதியினுடைய துதிக்கையாகிய ஐந்தாவது கை ஓங்காரத்தையே குறித்து நிற்கின்றது.

வித்தியாரம்பம் செய்யும்போது முதலில் 'ஓம் கணபதியே துணை' என்பதும், திருமண வீட்டிற்கு அடிக்கல் நாட்டுதல், கதவிற்கு நிலை வைத்தல், நாளுக்கு ஏர் பூட்டுதல் முதலிய எக்கருமம் ஆயினும் முதலில் பிள்ளையார் பூசை அவசியமாகும். கணேசரே ஐந்தொழில்களையும் ஆற்றுவதாகக் கூறப்படுகிறது. இவருடைய,

| | | |
|---|---|---|
| எழுத்தாணி பிடித்த கரம் | - | படைத்தலையும் |
| மோதகம் ஏந்திய கரம் | - | காத்தலையும் |
| அங்குசம் ஏந்திய கரம் | - | அழித்தலையும் |
| பாசம் உடைய கரம் | - | மறைத்தலையும் |
| துதிக்கை உடைய கரம் | - | அருளலையும் குறிக்கின்றது. |

விநாயகருடைய பெயராகிய "கணபதி"யில் உள்ள 'க' என்ற எழுத்து- ஞானம்

என்றும், 'ண'- மோட்சம் என்றும், 'பதி'- இருப்பிடம் என்றும் பொருள் கொள்ளப்படும். மேலும் கணேசன் என்ற பெயரில்

க- மனோவாக்குகள்

ண- அவற்றைக் கடந்தநிலை

ஈசன்- இறைவன்

எனப் பொருள் தருகிறது. அதனால் தான் ஞான நெறியிலே நின்று எய்யப்படும் பரம்பொருளை விநாயகர் எனலாம். 'அனைத்து தெய்வங்களின் கட்டமைப்பே கணபதி' என்பது சங்கரரின் கருத்தாகும். கணபதியினுடைய உருவ அமைப்பிலே அனைத்து தெய்வங்களும் மந்திர ஒலிருபங்களாக இணைந்துள்ளனர். அதாவது கணபதியினுடைய

நாவி- பிரம்மரூபம்

முகம்- விஸ்ணுரூபம்

கண்- சிவரூபம்

இடப்பாகம்- சக்திரூபம்

வலப்பாகம்- சூரியரூபம்

என்றும் சங்கரர் குறிப்பிடுகிறார். மேலும் கணபதியின் முகம் யானையினுடைய முகம்; உடல் தேவருடல்; கால்கள் பூதகணங்களுடையது. ஒற்றைக்கொம்பு- ஆண்யானை; ஓடிந்த கொம்பு- பெண்யானை. இதனால் உயர்திணையாகவும், அஃறிணையாகவும் ஓர் அதிசய தோற்றத்துடன் காணப்படுகிறார். இவருடைய திருவுருவ அமைப்பானது "அறிவிலும் பண்பிலும் உயர்வு பெற்றால் விலங்குகளும் உயர்வாகவே மதிக்கப்படும். அவற்றில் தாழ்ந்தால் தேவரும் மனிதரும்கூட இழிந்தவர்களாகவே கருதப்படுவர்" எனும் உயரிய தத்துவத்தை விளக்குகிறது.

மேலும் விநாயகருடைய பானை போன்ற பெரிய வயிறு 'பிரபஞ்சம் முழுவதனையும் தம்முள் அடக்கியவர்' என்பதனைக் குறிப்பிடுகின்றது. அவருக்கு விருப்பமான மோதகம் 'எல்லோரிடமும் இன்பமாக இருப்பவர்' என்பதையும் அவருடைய வாகனமாகிய எலி 'நமக்குள் இருந்து நம்மையே அழிக்கின்ற உலகப்பற்றுக்களையும்' குறித்து நிற்கின்றது.

விநாயகர் பல இடங்களிலே நின்று நடனமாடும் நிலையில் காணப்படுகிறார். இதனை வலம்புரி, இடம்புரி நிலைகளில் காணமுடிகிறது. அதாவது கணபதியின் துதிக்கை வலப்புறம் திரும்பி இருந்தால் அது வலம்புரி விநாயகர்; இடதுபுறம் திரும்பி இருந்தால் அது இடம்புரி விநாயகர் என்றும் அழைக்கப்படும். இத்தகைய துதிக்கை- பிரணவத்தையும், சுளகு போன்ற பெரிய இரண்டு காதுகளும்- நாம் கேள்வி ஞானம் உடையவராயிருத்தல் வேண்டும் என்பதனையும், மூன்று கண்களும்- முச்சுடர்களையும், வாய் மறைந்து இருத்தலானது- நாவடக்கம் உடையவராக இருத்தல் வேண்டும், கையிலுள்ள பாசம், அங்குசம்- ஐந்து மத யானைகளான ஐம்புலன்களையும், வாகனமாகிய எலி- எதனையும் ஆராய்ந்து முடிவெடுத்தலையும், வலியதும் கொடியதுமான ஆணவ மலத்தையும் குறிக்கின்றது.

(தொடரும்....

உ

(தொடர்ச்சி...

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| திரு அன்பழகன் குடும்பம் | | கனடா | 10000. 00 |
| க. ஞானசீலன் | | லண்டன் | 10000. 00 |
| முருகேசு சதாசிவமூர்த்தி | | கனடா | 20000. 00 |
| செல்வி ச. பாக்கியலெட்சுமி | | | 10000. 00 |
| திரு நடராசா குடும்பம் | | சுதுமலை | 1மூடை அரிசி |
| S. ஸ்ரீதரன் குடும்பம் | | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| தர்ஷினி கமலச்சந்திரன் | | காரைநகர் | 2000. 00 |
| வரலஷ்சுமி செல்வராஜன் | பலாலிவீதி | உரும்பராய் | 1500. 00 |
| திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி | நினைவாக யாமாவளவு | தெல்லிப்பளை | 2000. 00 |
| தி. விஸ்வலிங்கம் | சைவ சித்தாந்த மன்றம் | கனடா | 100 டொலர் |
| தெ. ஞானகுமாரன் | முதலியார் வளவு | கோப்பாய் | 2500. 00 |
| P. ஐங்கரன் | | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| கி. ஜெயராசன் | தல்லையப்புலம் | கரவெட்டி | 1000. 00 |
| பிரவீனா ஈசன், கீசானா ஈசன் | | சங்கானை | 4000. 00 |
| Dr. சிவஞானசூரியர் | | கொழும்பு | 10000. 00 |
| மா. நடராசா | கரந்தன்வீதி | நீர்வேலி | 5000. 00 |
| கு. தியாகராஜசர்மா | | நீர்வேலி | 1மூடை அரிசி |
| இ. துரைசிங்கம் | இளை. கி. சேவகர் | ஆவரங்கால் | 1000. 00 |
| R.T. சம்பந்தர் | | மலேசியா | 10000. 00 |
| ஸ்ரீமுருகன் ஜுவல்லறி | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கந்தையா துரைசிங்கம் | | கனடா | 2000. 00 |
| தர்ஷினி | C.A. நிறுவனம் | | 2000. 00 |
| சுந்தரம்பிள்ளை குடும்பம் | | உரும்பராய் | 5000. 00 |
| K. சகுந்தலாதேவி | பாடசாலைவீதி | வியாபாரிமூலை | 1000. 00 |
| திரு சத்தியேந்திரன் | | திருநெல்வேலி | 3புட்டி அரிசி, மரக்கறி |
| தம்பிராசா ஞானேஸ்வரி | | நீர்வேலி தெற்கு | 5000. 00 |
| பா. மலர்விழி | | தொண்டைமானாறு | 1000. 00 |
| குகமணி வேலுசாமி சங்கரன் | | அவுஸ்திரேலியா | 100 டொலர் |
| தேவன் ஸ்ரோர்ஸ் | | ஆவரங்கால் | 3மூடை அரிசி, பருப்பு |

**சோம்பல் இல்லாதிருக்க ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டேயிரு.**

| | | | |
|---|---|---|---|
| A. பத்மநாதன் | | சுவிஸ் | 5000. 00 |
| சு. சோதிநாதன் | மெயின்வீதி | கொழும்பு-7 | 25000. 00 |
| உ. யோகதர்ஷனி குடும்பம் | சாயி இல்லம் | உடுப்பிட்டி | 2000. 00 |
| ச. ஜெயதாசன் | செந்தாவளவு | இருபாலை | 1000. 00 |
| வை. தயாபவன் | இடைக்காடு | அச்சுவேலி | 5000. 00 |
| தியாகலிங்கம் திருக்குமரன் | | மட்டக்களப்பு | 5000. 00 |
| சு. சிவனேசன் | | | 1000. 00 |
| வி. விஜயவர்மன் (வேலு) | காட்டுப்புலம் | தொண்டைமானாறு | 10000. 00 |
| சற்குணராசா கலைச்செல்வி | | நோர்வே | 4000. 00 |
| திரு ஐங்கரன் | | | 500. 00 |
| கு. சசிகுமார் மூலம் இராமநாதன் புஸ்பமணி நினைவு (கனடா) | | | 5000. 00 |
| திரு மார்க்கண்டு P.M. மூலம் வாகீசன் வித்தியா, ஜனுஷன், கனிமொழி | | | 10000. 00 |
| திரு விஷ்ணுகாந்தன் குடும்பம் | | | 5000. 00 |
| தி. சிவனேசம்பிள்ளை | ஆரியன் கலட்டி | இடைக்காடு | 1000. 00 |
| நல்லையா சண்முகசுந்தரம் | | சாவகச்சேரி | 3000. 00 |
| ஞானவேல் தேவகி குடும்பம் | | வல்வெட்டித்துறை | 12000. 00 |
| குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | | பத்தமேனி | 1000. 00 |
| சிவசக்தி | | புத்தூர் | 2000. 00 |
| நி. கிருத்திக் நி. ரிஷானி | புதுக்குளம் | கரவெட்டி | 2000. 00 |
| வனிதா சசிகரன் | | நெல்லியடி | 2000. 00 |
| மா. சுதாகரன் | கரந்த உடையார் வீதி | புலோலி | 2000. 00 |
| முகுந்தன் பொன்னையா | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| அன்பன் | | அளவெட்டி | 1000. 00 |
| அ. சாவித்திரி | | தும்பளை | 5000. 00 |
| கனகம்மா | மீசாலை வடக்கு | புத்தூர் | 1000. 00 |
| ஜெயந்தன் நித்திலா | | மானிப்பாய் | 2200. 00 |
| ஆ. இராசரெத்தினம் | | கொழும்பு | 1000. 00 |
| அடியார் | | பருத்தித்துறை | 500. 00 |
| K.V. துரைசாமி (நினைவு) | | மயிலிட்டி | 1000. 00 |
| சிவநாதன் பாலமுரளி | வைரவப்புளியங்குளம் | வவுனியா | 5000. 00 |
| செ. ஜெயக்குமார் | | சங்கானை | 4000. 00 |
| V. வரதன் | | நெதர்லாண்ட் | 15000. 00 |
| A. சிவதாசன் | சுதுமலைவடக்கு | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| கிருபாகரன் சோமசுந்தரம் | | சுவிஸ் | 10000. 00 |
| சாந்தி ரவிச்சுந்தர் | | நோர்வே | 10000. 00 |
| அபிராம் அர்ச்சுன் | | கொலண்ட் | 10000. 00 |
| செல்வன் கோ. கிர்திக் | ஆரையம்பதி | மட்டக்களப்பு | 500. 00 |

(தொடரும்...

கடன்தான் கொடுமையான வறுமை.

நாவலர் பக்கம்: உ

# திருவிளையாடல்

-ஆறுமுகநாவலர்-

படலம்-52

## தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்

வம்மிச சூடாமணி பாண்டியன், சோம சுந்தரக் கடவுள் பொருட்டுத் திருநந்தவனம் உண்டாக்கினான். சம்பக வனமும் தனியே அமைத்து, அதிலே மலர்ந்த சம்பக மலர் களைக் கொய்து மாலைகளைத் தொடுத்துத் தரிசித்து, வியந்து, "இவர் சம்பக சுந்தரர்" என்று சொல்லி வணங்கினான். இன்றைக்கும் சோமசுந்தரருக்கு இத்திருநாமம் வழங்கப்பட்டு வருகிறது. இறைவனுக்குச் சம்பக மாலை சாத்துவித்த காரணத்தினால் வம்மிச சூடா மணி பாண்டியனும் "சம்பக பாண்டியன்" எனப் பெயர்பெற்றான். சம்பக பாண்டியன் சம்பக சுந்தரருக்குப் பணிசெய்து கொண்டு வரும் நாளிலே இளவேனிற் காலம் வந்தது.

அந்த இளவேனிற் காலத்திலே, ஒருநாள் சம்பக பாண்டியன் தன் தேவியோடு சம்பக வனத்திலே இருந்தான். அவனுக்கு நேரே ஒரு நறுமணம் தோன்றும்படி தென்றற் காற்று வீசியது. பாண்டியன் அவ்வாசத்தை முகர்ந்தபடி, "இது திவ்விய வாசம். தென்றற் காற்றானது சோலையிலிருந்து கொண்டு வரும் வாசமன்று. காற்றுக்கும் வாசமில்லை. "இது எவ்வாசமோ" என்று நினைந்தபடி தன் தேவியைத் திரும்பிப் பார்த்தான். அது அவ ளுடைய கூந்தலின் வாசமாயிருப்பதைக் கண்டு, "இவ் வாசம் வண்டுக்குத் தெரியாது" என்று நினைந்து மகிழ்ந்து, "இவ் வாசம் கூந்தலுக்கு இயற்கையோ செயற்கையோ?" என ஐயங் கொண்டான். "நான் ஐயுற்ற கருத்தை யாவ ராயினும் அறிந்து பாடல் செய்வாராயின் அவரே இவ்வாயிரம் பொன்னுக்கு உரியவர்" என்று சொல்லி, ஒரு பொற்கிழியை ஏவலாளர் கையிற் கொடுத்தான். அவர்கள் அதைக் கொண்டுபோய்ச் சங்க மண்டபத்தின் முன்னே தூக்கினார்கள். சங்கப்புலவர்களெல்லாரும் தனித்தனியே ஆராய்ந்தும் பாண்டியனுடைய மனக்கருத்தை அறியாது வருந்தினார்கள்.

அப்பொழுது, ஆதிசைவனும், தந்தை தாய இல்லாதவனும், பிரமசாரியும், விவா கத்தில் விருப்புடையவனுமாகிய "தருமி" என் பவன் சோமசுந்தரக் கடவுள் சந்நிதியை அடைந்து வணங்கி, "எம்பெருமானே! அடி யேனுக்குத் தாயுந்தந்தையுமில்லை. விவாகத் தில் விருப்புற்றிருக்கிறேன். அதற்குப் பொருள் சிறிதுமில்லை. அடியேன் வேத ஆகமங் களெல்லாம் ஓதினேனாயினும், இல்வாழ்க்கை யின்றி உமது பூசைக்கு அருகதை ஆகேன். நீர் சர்வஞ்ஞர். பாண்டியனுடைய மனக் கருத்தை அறிந்து ஒரு செய்யுள் செய்து தந்தருளும்" என்று விண்ணப்பித்து நின்றான். சோமசுந்தரக் கடவுள் ஒரு தமிழ்ச் செய் யுளைக் கொடுத்தருளினார். அது இது:

**நல்லதோர் இணக்கத்தால் தீயவனும் நல்லவன் ஆகிறான்.**

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே"

தருமி, வணங்கி,அச் செய்யுளை வாங்கிக் கொண்டு சங்க மண்டபத்தை அடைந்து அங்கிருந்த புலவர்கள் கையிலே கொடுத்தான். அவர்களும் அதனை வாசித்து அதன் சொற் சுவையையும், பொருட்சுவையையும் வியந்து "நன்று! நன்று" எனக்கூறி மகிழ்ந்து பாண்டியன் எதிரே போய் அப்பாட்டைச் சொன்னார்கள். பாண்டியனும், தனது மனக்கருத்து ஒத்திருந்ததனால் முடியசைத்து, மனம்மகிழ்ந்து, "இச்செய்யுள் கொண்டு வந்த பிராமணன் இப் புலவர்களோடு போய் ஆயிரம் பொன்னையும் கிரகிக்கக் கடவன்" என்றான்.

அரசன் ஏவலின்படி தருமி புலவர்களோடு போய் சங்க மண்டபத்தின் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுக்கும்போது, நக்கீரர் அவனை விரைந்தணுகி, "நில்! நில்! இச் செய்யுளிலே குற்றமிருக்கிறது." என்று கூறித் தடுத்தார். தருமி அங்கிருந்து மெல்ல நழுவிச்சென்று சோமசுந்தரக் கடவுள் திருமுன் நின்று, "ஏழையேனுக்கு இப்பிழைப்பாட்டை ஏன் தந்தாய். எவ்வெவர்க்கும் மேலாகிய உமது பாடலைப் புலவர் குற்றம் சொல்வாராயின் உம்மை யார் மதிப்பர்? இவ்விகழ்ச்சி உமக்கே எனக்கில்லை" என்று சொல்லி இரங்கி நின்றான்.

அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் ஒரு புலவர் வடிவங்கொண்டு சங்க மண்டபத்தை அடைந்து அங்கிருந்த புலவர்களை நோக்கி, "நமது செய்யுளுக்குக் குற்றம் சொன்னவன் யார்?" என்றார். நக்கீரர் அஞ்சாது " நானே சொன்னேன்" என்றார்.

**(தொடர்ந்து நடந்த உரையாடல் இது)**

"யாது குற்றம்"?
"சொற்குற்றமன்று,பொருட்குற்றம்"
"பொருட்குற்றமென்னை?"
"கூந்தலுக்கு வாசம் பூவின் சார்பாகிய செயற்கையாலன்றி இயற்கையாயில்லையே"
"பதுமினியுடைய கூந்தலோ?"
"அதுவும் அத்தகையதே"
"தெய்வப் பெண்களின் கூந்தலோ"
"அதுவும் மந்தார நறுமலர் அளைந்து மணத்தலாற் செயற்கையதே" என்றார் நக்கீரர்.
"நீ வழிபடுகின்ற திருக்காளத்தி அப்பருடைய சத்தியாகிய ஞானப் பூங்கோதை அம்மையாருடைய கூந்தலும் அத்தகையதோ?" என்று புலவர் வேடம் கொண்ட இறைவன் கேட்க,
"அதுவும் அத்தகையதே" என்றார் நக்கீரர்.
உடனே புலவர் நெற்றிக்கண்ணை சிறிதே காட்ட,
"இந்திரனைப்போல உமதுடம்பு முழுவதும் கண்ணானாலும் உமது பாடல் குற்றம் குற்றமே" என்றார் நக்கீரர்.

சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றும் தோன்றிய அக்கினி வெப்பத்தைப் பொறுக்கலாற்றாது, பொற்றாமரை வாவியிலே போய் விழுந்து வருந்தினார். அவரை வென்ற புலவர் மறைந்தருளினார்.

**தன்னலமே கருதுவோரின் கூட்டத்தில் சேராதே.**

(தொடர்ச்சி...

# படங்கள் தரும் பதிவுகள்



வாராந்த நிகழ்வின் வரிசையில் இடம்பெற்ற இன்னிசை நிகழ்வின் போது கலாபூஷணம் செல்வி தம்பு சறோஜா அவர்கள் உரை நிகழ்த்துவதைக் காணலாம்.




ஆச்சிரமத்தினால் வெளியிடப்பட்டு வரும் மாதாந்த ஞானச்சுடர் வெளியீட்டின்போது இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் சிறப்புப்பிரதியினை வழங்கும் நிகழ்வு.

தகாத இடத்தில் காட்டும் தாராளம் தீமையாகிவிடும்.



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூகப் பணிகளின் வரிசையில் ஆலயத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கான உடுபுடவைகள் வழங்கப்பட்ட நிகழ்வு.



உ

# இருபாலை சேனாதிராய முதலியாரின் ஆக்கங்கள் தங்களிடமுண்டா?

*திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்*

தமிழ் இலக்கியம் என்று எடுத்துக் கொண்டால் அதனுள் சமய நூல்களும் சேர்ந்துகொள்கின்றன. சகல சமயங்களையும் சார்ந்த அருமையான இலக்கிய நூல்கள் தமிழில் உள்ளன. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பற்றி எழுதும் பொழுதும் இத் தகைய இலக்கிய நூல்களை நாம் அதனுள் சேர்த்துக்கொள்கிறோம்.

இப்படி எம்மால் பட்டியலிடப்படும் நூல்கள் அனைத்தும் எம்மிடம் உள்ளனவா? என யாராவது கேட்டால் "ஆம்" என்று பதில் அளிக்க எம்மால் இயல்வதில்லை. அருமருந் தான திருமுறைகளையே செல்லரிக்கவிட்ட வர்கள்தானே நாம்?

ஏட்டில் எழுதிவைத்தவற்றை பரம் பரை பரம்பரையாகப் பேணிப்பாதுகாப்பதில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்ததால் வந்த வினையே இந்த இலக்கியப் பொக்கி ஷங்களின் இழப்புகள் என்றே கூறவேண்டும்.

பரம்பரை என்னும்போது பிள்ளைச் செல்வங்கள் மூலம் நீளும் பரம்பரையை மட்டுமன்றி, அறிவை வளர்த்து அவர்கள் ஆளாக்கிய மாணவர் பரம்பரையையும் சேர்த்தே குறிப்பிடவேண்டும். அந்தக்கால மாணவர்கள் குரு கற்பித்தவற்றை மனதிற் பதித்து வைத்திருந்தார்கள். காலப்போக்கில் தாளில் பதித்தால் அதாவது எழுதி வைத்துக் கொண்டால் போதும் என்ற நிலை தோன்றிய தாலேதான் இந்த இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு கிடைத்தற்கரியதாகிவிட்ட நூல்களிலே சில எங்காவது கிடைக்குமா எனத்தேடும் முயற்சியிலேயே இக்கட்டுரை உருவாகிறது.

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஒரு முக்கிய இடம்பெற்றுள்ளவர் இருபாலை சேனாதிராய முதலியார். இவர் வேறொரு வகையிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளார். இலங்கையில் தமிழும் சமயமும் நின்று நிலைக்கக் காரண கர்த்தாவான ஆறுமுக நாவலரின் குரு என்ற பெருமையுடன் நாவலரின் வரலாற்றிலும் இடம்பிடித்துக் கொண்டவர் இருபாலை சேனாதிராய முதலி யார்.

சிறந்த தமிழ்ப் புலமையும் ஆழ்ந்த சைவப்பற்றுங்கொண்ட முதலியார் சிறந்த இலக்கியங்கள் பலவற்றை யாத்து அளித் துள்ளார். நல்லை வெண்பாவில் அவரது வெண்பா ஒன்றை சோறு பதம் பார்ப்பதுபோல் சுவைத்துப் பார்ப்போம்.

தாவார் கலியடக்கு மத்தவளந் தாங்குதலா
னாவார் தமிழ்முனிநேர் நல்லூரே- பூவாரும்
வாளங் கெடுத்தார்ப்பில் வந்த தனிமாயா
வாளங் கெடுத்தார் வழி.

இவ்வெண்பாவின் முதலிரு அடிகளும் நல்லூருக்கும் அகத்தியருக்கும் சிலேடையாக அமைந்துள்ளன. தா ஆர் கலி என்பதற்கு துன்பம் நிறைந்த வறுமை என்பது பொருள். அத்தவளம் என்றால் செல்வப் பெருக்கு. வறுமையை அடக்க செல்வ வளத்தைத் தாங்கி நிற்பது நல்லூர். தாவு ஆர் கலி என்னும்போது தாவும் அலை ஆர்ப்பரிக்கும் கடல் என்றும் பொருள் கொள்ளலாம். அத்த வளம் என்பதற்குக் கையின் வலிமை அல்லது திறமை என்பதும் கருத்தாக வரும். அத்தம் என்பது கை, தமிழ்முனிவர் அகத்தியர் உள்ளங்கையில் கடலை அடக்கியவர். எனவே நல்லூர் “தாவார் கலியடக்கு மத்த வளந் தாங்குவதானால்” அகத்தியருக்கு நிகரானது, கூர்மையான வாளை எடுத்து ஆரவாரத்தோடு வந்த மாயைத் தன்மைகொண்ட சக்கரவாளப் பறவையாய் வந்த சூரனை அழித்தவரது இடம் இந்த நல்லூர் என இறுதி இரு அடிகளும் கூறுகின்றன.

இத்தகைய ஆழ்ந்த பொருள் கொண்ட தமிழும் தத்துவமும் சிறந்துநிற்கும் நூறு வெண்பாக்களைக் கொண்ட நல்லை வெண்பா இருபாலை சேனாதிராய முதலியார் இயற்றி எமக்களித்த கொடை, காப்பும் கடையும் சேர்த்து நூற்றிரண்டு செய்யுட்கள் இதில் உள்ளன.

புலோலியூர் வித்துவான் திரு க. முருகேசபிள்ளையின் குறிப்புரையுடன் இந்நூல் 1942இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இன்று தேடித்திரிந்தாலும் கிடைத்தற்கரியதாக உள்ளது. இந்நூலிலுள்ள நூலாசிரியர் வரலாற்றில் பின்வருமாறு முதலியாரின் ஆக்கங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

“சேனாதிராய முதலியார் நல்லூர் சுப்பிரமணியக் கடவுளிடத்து மிக்க பக்தி வாய்ந்தவராதலால் அப்பெருமான்மீது நல்லை வெண்பா, நல்லைத்திரிபந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லைக் கலிவெண்பா, ஊஞ்சற் பதிகம் என்னும் பிரபந்தங்களை இயற்றியமையோடு பல தனிச்செய்யுட்களையும் இயற்றியுள்ளனர். வண்ணை நீராவி விநாயகர் மீது யமகத் தொடை யமைந்த ஒரு கலி வெண்பாவும், மாவைச் சுப்பிரமணியக் கடவுள் மீது ஓர் ஊஞ்சற்பதிகமும் பிறசில ஊஞ்சற் பதிகங்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன.

நீராவியடி விநாயகர்மீது பாடிய கலி வெண்பாவிற்கு அதன் அறங்காவலர் சிரத்தை கொண்டு பண்டிதமணி வித்துவான் ந. சுப்பைய பிள்ளை அவர்களைக் கொண்டு உரை எழுதுவித்து வெளியிட்டுள்ளார்.

திரு குல. சபாநாதன் எழுதிய நல்லூர் கந்தசுவாமி என்னும் நூலில் நல்லைக் கலிவெண்பாவின் ஒரு பகுதியும், ஊஞ்சலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் கண்ணகை அம்மன் கும்பாபிஷேக மலரில் அதன் ஊஞ்சற் பதிகம் பதிவாகியுள்ளது. இவை தவிர்ந்த இவரது ஆக்கங்கள் எங்கேனும் உள்ளனவா?

சேனாதிராய முதலியாரின் ஆக்கங்கள் அனைத்தையும் தொகுத்து நூலாக்கும் எண்ணமொன்றை இறைவன் என் மனத்தில்

பிறரை வெல்வதைவிட தன்னைத்தானே வெல்வது மேலானது.

ஏற்படுத்தியுள்ளான். யாரிடமேனும் மேற் குறித்தவை தவிர்ந்த அவரது ஆக்கங்கள் இருக்குமாயின் தந்துதவுவீர்களெனில் அது தமிழுக்கும் சைவத்திற்கும் செய்யும் ஒரு பணியாக அமையும். நானும் நன்றியுடையவளாக இருப்பேன். நூல்களின் நிழற்பிரதியை எடுத்துக் கொண்டு மீளவும் நூல்களை ஒப்படைப்பேன் என உறுதியளிக்கிறேன். தாங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எனது முகவரி கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்பதாகும். தங்கள் ஆதரவை எதிர் நோக்குகிறேன்.

# ஓய்வு பெற்றவர்கள் கவனத்திற்கு...




வயது முதிர்ந்த நிலையில், வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு வானப்பிரஸ்தன் போல் இருக்க வேண்டும். கலிகாலத்தில் வானப்பிரஸ்த ஆச்சிரமத்திற்கு அதிகாரமில்லை. காரணம் என்னவெனில், தவம் செய்யக்கூடிய சரீர பலமோ, மனோபலமோ நமக்குக் கிடையாது. ஓய்வு பெற்ற பிறகு வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயத்தை தொடங்க வேண்டும். இப்படிச் சம்பாதிக்கலாமா, அப்படிச் சம்பாதிக்கலாமா என்று பேராசைப்படக்கூடாது. இத்தனை நாட்கள் எப்படி எப்படியோ இருந்தாயிற்று. இனியாவது நல்லகதியடைவதற்குப் பயனுள்ள வாழ்க்கை வாழவேண்டும். இதுவரை செய்யாமலிருந்தாலும், இனியாவது நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்யலாம். சந்தியாவந்தனம் அவசியம் செய்யவேண்டும். முடிந்தவரை அர்க்ய ப்ரதானமும், பத்து காயத்திரியுமாவது செய்யவேண்டும். வேறு எந்தக் கர்மாவைச் செய்தாலும், செய்யாது போனாலும், சந்தியாவந்தனம் மட்டுமாவது செய்யவேண்டும்

வீண்பொழுது போக்காமல், வீண் பேச்சுப் பேசாமல், எந்த விவகாரங்களிலும் தலையிடாமல், இதிகாச புராணங்களைப் படித்துக்கொண்டும், ராமநாம ஜபம் செய்துகொண்டும், ராம நாமம் எழுதிக்கொண்டும் பொழுது போக்கலாம். கோவிலுக்குச் செல்வதும் சத்ஸங்கம் சென்று கதாசிரவணம் செய்வதும் மனதுக்கு நிம்மதி தரும். ஏதாவது ஆச்சிரமம் சென்று அடிக்கடி தங்கி வேதாந்த விசாரம் செய்வதும் மோட்ச சாதனமாகும். தீர்த்த யாத்திரை, ஷேத்திராடனம் செய்தும் புண்ணியத்தைச் சம்பாதிக்கலாம். வேலையில் ஓய்வு பெற்ற பிறகு ஜன்மத்தை வீணாக்கக் கூடாது. பாடத் தெரிந்தால் பஜனை செய்யலாம். படிக்கத் தெரிந்தால் ஸ்ரீருத்ரம், புருஷஸூக்தம் முதலிய முக்கியமான வேத பாகத்தையாவது அல்லது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தையாவது குருமூலம் கற்றுத் தினமும் பாராயணம் செய்துவரலாம். ஸ்ரீமத் ராமாயணமோ, சுந்தரகாண்டமோ, ஸ்ரீமத் பாகவதமோ, ஸ்ரீமத் பகவத்கீதையோ கொஞ்சமாவது நித்ய பாராயணம் செய்யவேண்டும். தேவ பூஜை தொடங்காதவர்கள் ஆச்சாரியார் மூலமாக நித்திய பூஜையைத் தொடங்கலாம். "சாஸ்திராய ச ஸுகாய ச" என்றபடி சாஸ்திர முறைப்படி அன்றாட வாழ்க்கையை ஓய்வுபெற்ற பிறகாவது நடத்திக்கொண்டு இகபர சுகத்தை நாடுதல் நல்லதன்றோ.

**வாழ்க்கையில் சம்பாதிக்கக்கூடிய பெரிய விஷயம் பொறுமை.**

உ



# இந்து மதத்தின் சிறப்பியல்பு

திரு சி. நற்குணலிங்கம் B.A அவர்கள்

இந்துமதம் உலகப்பிரசித்தி பெற்ற மதங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. உலகெங்கும் பரந்துவாழும் கல்விமான்களின் சிந்தனைகளை கவரவல்ல சிறப்பியல்பு களைக் கொண்டதாக இம்மதம் விளங்குகின் றது. மேலைத் தேசத்தவர்களும் இந்துமத பண்பாட்டு சிறப்புக்களால் கவரப்பட்டு இந்து மத சிந்தனைகளில் மூழ்கத் தொடங்கினர்.

குறிப்பிட்ட ஒருவரால், குறிப்பிட்ட காலத்தில் இந்துமதம் தோற்றுவிக்கப்படாத தால் இது சனாதனதர்மம் எனப் போற்றப்படு கின்றது. பௌத்தம்- கௌதம புத்தர், கிறிஸ் தவம்- இயேசு, இஸ்லாம்- நபி என்றல்லாமல் இந்துமதம் அனைத்தையும் கடந்த தொன்மை யான மதம் என்பது இதன் சிறப்பியல்பாகும். இத்தகைய தொன்மைக்கும், நிலைபேற்றுக் கும், புதுமைக்கும் அதன் தெய்வீக சக்தியே காரணமாகும்.

வாழ்க்கையில் மனிதனுக்கு ஏற்படும் தேவைகளை வேண்டுதல்கள்மூலம் நிறை வேற்றும் வகையில் இந்துமதம் அமைந்துள் ளமை அதன் சிறப்பியல்பாகும். தேவைகளை வழங்குவது மட்டுமன்றி பயத்தை நீக்குவதும் தெய்வத்தின் இயல்புகளாகும். இந்து ஆலயங் களில் காணப்படும் தெய்வங்கள் “பயப்பட வேண்டாம்” என உணர்த்தி நிற்கும் அபய கரத்தையும் “தேவைகளைத் தருகிறேன்” எனச் சுட்டும் வரத கரத்தையும் காட்டி நிற் கின்றன.

உலக வரலாற்றில் உலகு, ஆன்மா, இறைவன் பற்றிய முதற் சிந்தனையாக இந்துமதம் அமைகின்றது. மேலும் உலகத் தின் முதல் கலாச்சாரத்தின் மூலமாகவும் இந்து நாகரிகம் அமைவது இதன் சிறப்பியல் பாகும்.

இந்துமதம் பல சுதந்திரங்கள் கொண்ட நோக்கையுடைய ஒரு மதமாகும். இந்து மதத்தினர் தாம் கடைப்பிடிக்க விருக்கும் சமய உள் அமைப்புக்களை தாம் விரும்பியபடி கடைப்பிடிக்கக்கூடிய தெரிவு செய்யக்கூடிய, வழிபடக்கூடிய சுதந்திரத் தைக் கொண்டுள்ளமை இதன் சிறப்பியல் பாகும்.

அறிவைப் பெறும் வாயில்களான பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம்.... எனப் பத்துபிரமாணங்களை ஆராய்ந்த பெருமையுடைய சிறப்பியல்பைக் கொண்ட மதம் நமது இந்துமதமே ஆகும்.

**அதிகமாகப் பேசுவதால் மட்டும் ஒருவன் அறிஞன் ஆகமாட்டான்.**

இந்து மதத்திற்கு தனிச்சிறப்பு தருபவை புருடார்த்தங்கள் ஆகும். இந்துமத நெறி நிற்பவன் எவனோ அவன் புருடனே. அர்த்தம் என்பது இலட்சியம் ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு என்பன இலட்சி யங்களாகும். இவை இந்துக்களின் இவ்வுலக வாழ்க்கையை மட்டுமல்லாது மறுவுலக வாழ்க்கையையும் சிறக்கச் செய்யும் சிறப் பியல்பாகும்.

இந்துமத வரலாற்றில் அவைதீகப் பிரிவுகளோடும் பேரரசுகளோடும் நடாத்திய போராட்டத்தினால் நல்லனவற்றைக்கொண்டு அல்லாதனவற்றை விலக்கி, இந்துமதம் காலாகாலமாக தன்னை மெருகூட்டிக் கொண்டே வருவதும் இம்மதத்தின் மற்றொரு சிறப்பியல்பாகும்.

பிரத்தியட்சத்துக்குப் புலனாகும் உடம்பு, உலகு என்பன உண்மையல்ல; இவை அனைத்தையும் இயக்கும் மூலசக் தியே உண்மையானது. இயற்கையின் ஒவ்வொரு காரியத்துக்கும் காரணம் இருத்தல் வேண்டுமென்ற காரண, காரியநோக்கு இயற்கை ஒழுங்கு, வாழ்க்கை ஒழுங்கு, தெய்வநீதி என்ற மூன்றினையும் ஒன்றாகக் காணும் தத்துவார்த்தப் போக்கு இந்துமதத் துக்குரிய இன்னொரு பிரதான சிறப்பாகும்.

பிரச்சாரத்தையே முக்கிய நோக் காகக் கொண்ட சில மதங்கள் உயர்வில் தமக்கு இணையாக வேறு மதமே இல்லை யென்ற அசைக்க முடியா நம்பிக்கை கொண் டுள்ளன. அதுமட்டுமல்லாமல் தம் கொள்கை தான் சிறந்த கொள்கை எனவும் கருதுகின் றன. ஆனால் இந்துமதம் எவ்வித வாதாட்டத் திலும் ஈடுபடாமல் தம் கொள்கைகளையும் இலட்சியங்களையும் மனிதவாழ்க்கை யினூடாக வெளிப்படுத்திவருவதும் இம்மதத் தின் மேன்மையான சிறப்பியல்பாகும்.

இந்துமதம் அன்பையே இறைவ னாகக் கொண்ட மதம். "அன்பே சிவம்" எனக்கண்ட நெறி இந்துமதம். அதுமட்டுமல் லாமல் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே", "காக்கைச் சிறகினிலே" "பார்க்கும் இட மெலாம்" என்ற அடிகள் மூலம் இயற்கை முழுவதையும் இறைவனாகவும் இயற்கைக் குள் இறைவன் அடங்காதவனாகவும் காட்டி எல்லா உயிர்களிலும் இறைவனைக் காணும் போக்கு இந்து மதத்துக்கே உரிய சிறப் பியல்பு என்பதை அறியலாம்.

ஒரு மாணவன் காகத்தைப்போல கவனிக்க வேண்டும், நாயைப்போல செவி கூர்மையுடன் இருக்கவேண்டும் என்பன மாணவப் பருவ பண்புகளாகும். இந்துமதத் தின் அடிப்படையே மாணவர்களிடம்தான் தொடங்குகின்றது. குழந்தைப் பருவத் திலேயே நல்ல தத்துவங்களை உணர்த்து வதற்குரிய நிலை மாணவனின் நிலை இந்து மதம் கூறுவதும் இன்னொரு மேலான சிறப் பியல்பாகும்.

இந்துமதத்தின் சிறப்புக்களை ஒவ்வொரு இந்துவும் அறிந்து கொள்வதுடன், அதனை ஒழுகவும் வேண்டும். மதத்தின் நலிவுக்கும், வேறு மதங்களை தாவுவதற்கும் அடிப்படைக் காரணம் இந்து மதத்தின் சிறப் புக்களை பூரணமாக அறிந்து கொள்ளா மையே ஆகும். எனவே இதன் சிறப்புக்களை அறிந்து, ஒழுகுவதன்மூலம் மேன்மைகொள் சைவநீதி, விளங்குக உலகமெலாம்.

உ




*நீர்வைமணி அவர்கள்*

பழந்தமிழ் இலக்கிய நூல்களிற் பதினெண் கீழ்க்கணக்கும் ஒன்று. இந்தப் பதினெண் கீழ்க்கணக்கில் எமது தமிழ் வைத்தியத்திற்குத் தேவைப்படும் மருந்துச் சரக்குகளை நினைவில் வைத்துக்கொள்ளக் கூடியதான நூல்களாக திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பன காணப்படுகின்றன.

சிறுபஞ்சமூலம் என்பது ஐந்து சிறிய வேர்களையுடையது. மருத்துவத்தில் ஐந்து பெரிய வேர்களைக்கொண்ட பெரும் பஞ்சமூலமும் உண்டு. சிறுபஞ்ச மூலத்தில் சொல்லப்படும் மூலிகைவேர்கள் சிறுவழுதுணைவேர், நெருஞ்சிவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், கண்டங்கத்தரிவேர் என்பனவாகும். இதேபோன்று பெரும்பஞ்சமூலத்தில் வில்வமரவேர், பெருங்குமிழ்வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர் எனும் ஐவகையுமாகும்.

பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் ஐந்து, ஐந்து நீதி வாக்கியங்களைச் சொல்வதனாற்றான் அது அப்பெயரினைப் பெற்றது. இந்த நூலின் ஆசிரியர் காரி ஆசான் என்பவராவார்.

இவர் தரும் பஞ்சமூலத்தில் பஞ்சாமிர்தம் எனச் சிறப்பித்து கூறுவது கீழ்வரும் பாடலிற் சுவையாக அமைந்துள்ளது.

அதாவது,

கற்புடையபெண் அமிர்தம்
        கற்று அடங்கினான் அமிர்து
நற்புடைய நாடு அமிர்து
        நாட்டுக்கு நற்புடைய
மேகமே சேர்கொடி
        வேந்து அமிர்து சேவகனும்
ஆகவே செய்யின் அமிர்து

இப்பாடலிற் கற்புடைய பெண் ஓர் அமிர்தம். நன்றாகக் கற்று அடங்கியவன் ஓர் அமிர்தம். நல்ல விளைவு முதலான நன்மைகளை உடைய காடு ஓர் அமிர்தம். நன்மையுடைய மேகம் மழையைப் பெய்யும்படி ஆட்சி நடாத்தும் அரசன் ஓர் அமிர்தம். நமக்கு நல்லதைச் செய்யும் பணியாள் ஓர் அமிர்தம் என்றவாறாக இலக்கியத்திற் சுவை மிக்கதாகப் பஞ்சாமிர்தம் சிறுபஞ்சமூலத்தில் தரப்பட்டுள்ளது.

**அன்பில்லா உள்ளம் ஒரு பாழ்வீடு.**

மேலும் சிறுபஞ்சமூலம் தரும் பஞ்சசீலங்கள் பற்றிவரும் பாடல்,

பிழைபொறுத்தல்
பெருமை சிறுமை
இழைத்த தீங்கு எண்ணி
இருத்தல், பிழைத்த
பகைகெட வாழ்வதும்
பல்பொருளால் பல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று

அதாவது பிறருடைய குற்றங்களைப் பெருந்தன்மையால் பொறுத்தல் ஒருவர் செய்த தீமைகளை எண்ணிக் கொண்டிருக்கும் சிறுமைக்குணம் விடுதல், பிறர் பழி கூறாமல் வாழ்தல், பிறரிடம் இரவாதிருத்தல், பகைவர் பகைமை கெடும்படி வாழ்தல் என நல்வாழ்விற்கு வேண்டிய ஐம்பெரும் குணங்கள் சிறப்பாகத் தரப்பட்டுள்ளது.

இவ்வாறாகத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் அழகாகவும், சுவையாகவும், எமது வாழ்வின் பட்டறிவுக்கு ஏற்ப நல் ஊட்டமாகவும் பல்வேறுபட்ட நல்ல விடயங்களும் எடுத்துக்கூறப்படுகின்றன.

பழையன, பழையன எனவும், பழையன கழிதல் வேண்டும், புதியன புகுதல் வேண்டும் எனவும் சிந்திப்பவர்கள் பழையனவற்றிலுள்ள எக்காலத்திற்கும் நல்ல பயன்தரக்கூடிய விடயங்களைக் களைந்து எறியாமற் பக்குவப்படுத்திப் பயன்படுத்தி நல்லன கொண்டு நல்வாழ்வு நாடுதல் சிந்தனைக்கு உரியதாகும்.

# சந்நிதியான் கற்பக விருட்சம்

பூவுடன் நீரும் புண்ணியம் சேர்த்திட
பூசனையே ஏற்றிடு கதிர்காமநாதனார்
பூவரசடியே புனிதமா ஞான சொருப
பூங்கழல் திருவடிநிழல் தரு வேலா!

ஆச்சிரம நாதகீதம் சலசலத்திடு அரசே
ஆலயத்து கற்பகதருவாய் மனமுருகிட
ஆறுதல் கொடுத்து ஆன்றோனாக்கிடும்
ஆண்டுகள் பலகடந்தும் ஆச்சிரமவாயிற் பூவரசே!

-க. நித்தியதசீதரன்-

# செய்திச் சிதறல்கள்

- யாழ் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவன் செல்வன் சி. துஷ்யந்தன் அகில இலங்கை ரீதியில் (100M ஓட்டம்) ஒலிம்பிக் தெரிவுப் போட்டியில் முதலிடம் பெற்று 24.06.2011 அன்று கிறிஸ் நாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெறும் விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்ற உள்ளார்.

- திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் அருள்மிகு பெருநலமா முலையம்மை உடனாய மகாலிங்க சுவாமி திருக்கோயில் வைகாசி விசாக திருக்கல்யாணத் திருவிழா 04.06.2011 முதல் 15.06.2011 வரை நடைபெற்றது.

- இருபாலை கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 07.07.2011 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14.07.2011 இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

- யாழ் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகோற்சவம் எதிர்வரும் 28.06.2011 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 05.07.2011 மாலை 06 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 06ஆம் திகதி காலை 08 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 09 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்

- வலி- தெற்கு பிரதேச சபை உள்ளூராட்சி மறுசீரமைப்புச் செயற்றிட்டத்தின்கீழ் "வெள்ளிமலை" 10ஆவது இதழ் வெளியீட்டுவிழா 14.06.2011 செவ்வாய்க்கிழமை மாலை 3மணியளவில் சுன்னாகம் பொது நூலகத்தில் வலி தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக முதுபெரும் புலவர் கலாபூஷணம் வை.க. சிற்றம்பலம் அவர்கள் கலந்து சிறப்பித்த இவ்விழாவில் கவியரங்கமும் நடைபெற்றது.

- அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் 07.06.2011 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 25 நாட்களாக நடைபெறும். 12ஆம் திருவிழாவான உலகப்பெரு மஞ்சத்திருவிழா 18.06.2011 சனிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

உ

# வாழ்க அந்தணர்...



*திரு ஆ. மகேசு அவர்கள்*

கி.பி ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் புயலென நாடுமுழுவதும் சென்று சைவசமயத்திற்குப் புத்துயிர் ஊட்டி தோத்திர நூல்களில் முதலாவதாக மதிக்கப்படும் தேவாரப் பதிகங்களைப் பாடி இறைவனைத் தொழுதுவரும் நாளிலே, சமய வாதங்கள் நாளுக்குநாள் வளர்ந்து வந்தன. இந்தவகையில் சமண சமயத் துறவிகள் ஞானசம்பந்தரைப் புனல்வாதம் செய்ய அழைத்தனர். அப்பொழுது ஆளுடைய பிள்ளையார் "வாழ்க அந்தணர்..." எனத் தொடங்கும் பாசுரத்தைப் பாடி எழுதிய திருவேட்டைத் தம்கையாலே வைகையாற்றிலே விட்டபோது, ஏடானது, வைகையாற்று நீரோட்டத்திற்கு எதிர்த்திசையாக எதிரேறி, திருவேடகம் என்னும் திருத்தலத்தைச் சென்றடைந்தது.

இவ்வாறு புனல்வாதம் செய்யச்சென்றபோது சம்பந்தப் பெருமான் பாடியருளிய பாடல்களுள் முதற்பாடலாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

"வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

இப் பாசுரத்தைப் பார்க்கும்போது, தேவார முதலிகள் பாடியருளிய பாசுரங்களுக்கும் இதற்கும் சிறிய வேறுபாடு இருப்பதை உணரமுடிகின்றது. ஏனைய பாசுரங்களிலெல்லாம் குறிப்பிட்ட ஆலயங்களில் குடிகொண்டிருக்கும் இறைவனையும், ஆலயங்கள் அமைந்துள்ள இயற்கை அழகுகளையும் போற்றிப் புகழ்ந்து பாடியிருப்பதைக் காணமுடிகின்றது.

ஆயினும், இங்கே புனல்வாதம் செய்யச் சென்ற சம்பந்தர், எடுத்த எடுப்பிலேயே "வாழ்க அந்தணர்..." எனப் பாடத் தொடங்கியதிலிருந்து அந்தணர் என்ற வகுப்பினர் அந்நாளிலே ஒரு உன்னதமான நிலையில் வாழ்ந்துள்ளார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது. தொழில் ரீதியாக மக்களிடையே பல வகுப்பினர் அன்று இருந்தபோதிலும், சம்பந்தர் "அந்தணர் வாழ்க" என்று கூறியதிலிருந்து சிந்திக்கவேண்டிய பல விடயங்கள் உண்டு என்பதை மறுதலிக்க முடியாது.

சம்பந்தப் பெருமான் தாமும் ஓர் அந்தண வகுப்பைச் சேர்ந்தவர் என்பதினால் இப்படிக் கூறியிருப்பாரோ எனில், சைவசமய நாயன்மார்கள் அறுபத்து மூவரில் பத்து அடியார்கள் அந்தண வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவ்வாறெனில் சம்பந்தர் ஏன் இப்படி "அந்தணர் வாழ்க" என்று கூறியிருக்கவேண்டும் என்பது எமது சிந்தனைக்குரியது.

தமிழ் ஆகமமான "திருமந்திர"த்தில் மந்திரம் 224 முதல் 237வரை மொத்தம் பதினான்கு பாடல்களில் அந்தணர்களைப் பற்றித் திருமூலர் பாடியிருக்கின்றார். அவற்றில், அந்தணராகிய அறவோர் பிறப்பை அறுக்கும் தொழிலைச் செய்து, எல்லா உயிர்களிடத்தும் அருள் உள்ளங்கொண்டு பற்றற்று வாழ வேண்டுமெனவும், நூலும் சிகையும் பூண்பதோடு, அவற்றின் உண்மையையும் அறிய வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

என வள்ளுவப் பெருந்தகை கூறிய வாக்கும் இங்கு நோக்கற்பாலது. பொதுவாக, அந்தணர்கள் மனம், வாக்கு, காயம் என்பவற்றினால் யாருக்கும் தீங்கு செய்ய நினைக்காத பேருள்ளம் கொண்டவர்கள். எனவே திருஞானசம்பந்தர் தமது பதிகத்திலே "வாழ்க அந்தணர்...." என்று கூறியிருப்பதை நாம் நிராகரிக்க முடியாது.

மேலும் "வானவர், ஆனினம் வாழ்க" என்றார். கடவுளுக்கு அடுத்தபடியாக துதிக்கப்பட வேண்டியவர்கள் வானவர்கள். இவர்கள் சிவபெருமானை நோக்கி, நீண்டகாலம் தவஞ்செய்து பல வரங்களைப் பெற்றுள்ளபடியால் அவர்களை நாம் பூசிப்பதில் தவறேதுமிருக்கமுடியாது. இல்லற வாழ்வில் இருந்துகொண்டு இல்லற செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒருவனை சிறந்த விருந்தினனாக வானவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதை வள்ளுவர் தமது குறளிலே,

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்றார். முறைப்படி இல்லறவியலை மேற்கொள்ளும் மாந்தர்க்கு வானவருலகு வழிவிடும் என்பதைச் சம்பந்தப் பெருமான் "வானவர் வாழ்க" எனப்பாடியதில் நியாயமுள்ளதென்பதை தவிர்க்க முடியாது.

தொடர்ந்து "ஆனினம் வாழ்க" என்றார். உலகில் இறைவனால் எண்ணிறைந்த உயிரினங்கள் படைக்கப்பட்டிருக்கும்போது, சம்பந்தர் "ஆனினம் வாழ்க" என்று ஏன் பாடியிருக்கவேண்டும்? இறைவனுக்கு வேண்டிய பஞ்சகௌவ்வியங்களை வழங்கும் ஜீவராசி பசுவாக இருப்பதாலும், சிவனுடைய வாகனமாக நந்தி இருப்பதினாலும், சம்பந்தர் "ஆனினம் வாழ்க" என்று கூறிப்போந்தார். ஆயினும் இன்று நாட்டிலே பசுவதை நடைபெற்றுக் கொண்டிருப்பதையும், இதனை நிறுத்துமாறு பல அறிஞர்கள் கருத்துரைகள் கூறியிருக்கின்றபோதிலும், இன்றும் பசுக்கொலை நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

"தன்னூன் பெருக்கற்கு தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என வள்ளுவர் கூறியதிலிருந்து, பசுக்கொலை செய்பவர்கள், அதனை உண்பவர்கள் இடத்திலே அருளாட்சி இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா? ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த சம்பந்தர் இதனை எவ்வளவு தீர்க்கதரிசனமாக கூறியிருக்கின்றார் என்பதையிட்டு நாம் வியப்படையாமலிருக்க முடியுமா?

"வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக" என்பது பாசுரத்தின் இரண்டாவது அடியாகும். இதிலே "தண்புனல் வீழ்க" என்றார். இந்த உலகம் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்

என்று சொல்லப்படுகின்ற ஐம்பெரும பூதங்களின் சேர்க்கையாகும். இந்த ஐம்பெரும் பூதங்களின் செயற்பாட்டினாலேயே இந்த உலகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. “அப்பு” என்று சொல்லப்படுகின்ற நீர் இந்த உலகில் இல்லையானால் மக்களுடைய வாழ்க்கைமுறை என்னாகும்? இதனாலேயே வான்புகழ் கொண்ட வள்ளுவர் நீரின் தேவையை மையப்படுத்தி “வான்சிறப்பு” என்ற அதிகாரத்திலே மழையின் (நீர்) சிறப்பை விதந்துரைத்துள்ளார்.

“விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்து
உள் நின்று உடற்றும் பசி”

மழை பெய்யவில்லையானால், பரந்த கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தில் பசி நிலைத்து நின்று உயிர்களை வருத்தும் என்று எவ்வளவு ஆழமான கருத்தினை வள்ளுவர் தந்திருக்கின்றார் என்பதை நாம் ஒருதரம் எண்ணிப் பார்க்கின்றோமா?

“ஆடி உழவு தேடி உழு” என்பார்கள். வயல்களை ஆடி மாதத்திலே உழவு செய்வதற்கு மழை போதுமானதாக இல்லையே என இன்று விவசாயிகள் கவலை அடைவதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

“தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்காது எனின்”

மழை பெய்யாவிட்டால், இப்பரந்த உலகில் தானமும் தவமும் ஆகிய இருவகை அறங்களும் இல்லையாகும் என வள்ளுவர் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

“துப்பார்க்குத் துப்புஆய துப்பு ஆக்கித் துப்பார்க்குத்
துப்பு ஆய தூஉம் மழை”

நாம் உட்கொள்ளும் உணவுப்பொருட்கள் அனைத்தையும் மழையானது விளைவித்துத் தருவதோடு, தானும் ஓர் உணவாக அமைவதும் மழையே! என வள்ளுவர் கூறியிருப்பதிலிருந்து, “வீழ்க தண்புனல்” என சம்பந்தர் பாடியிருப்பது எவ்வளவு நிதர்சனமாகின்றது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

இரண்டாவது அடியிலே “வேந்தனுமோங்குக” என்று பாடியிருப்பதன் தாற்பரியம் என்னவாக இருக்கும்? சம்பந்தர் வாழ்ந்த காலம் முடியாட்சி நிலவிய காலமாகும். அன்று ஆட்சி செய்த மன்னர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டு மக்களுடைய குறை நிறை அறிந்து, அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்து நல்லாட்சி புரிந்தார்கள் என வரலாறு கூறுகின்றது. முல்லைக் கொடிக்குத் தனது தேரை உவந்தளித்தவனும் ஒரு மன்னன். ஒரு புறாவின் உயிருக்காக தனது உடலிலே தன் தசையை வெட்டிக் கொடுத்தவனும் ஒரு மன்னன். தனது ஒரேயொரு மகன் என்றும் பாராமல், மகன் செய்த குற்றத்திற்காக, அவனைத் தேர்க்காலிலே கிடத்தி, தேரினை அவன்மேல் ஏற்றி கொலை செய்வித்தவனும் ஒரு மன்னன். இவ்வாறு அன்றைய மன்னர்கள் நீதிநெறி வழுவாது நாட்டு மக்கள் யாவரும் நலமே வாழவேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு ஆட்சி புரிந்துவந்தார்கள் என சங்க இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன.

“முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்”

என வள்ளுவர் கூறும் குறட்பாவின் கருத்தும், மேற்கூறியவற்றுக்கு உரம் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

ஆயினும், இன்றைய ஆட்சித் தலைவர்கள், குடியாட்சி நிலவுகின்ற அநேகமாக எல்லா நாடுகளிலும் ஆட்சியாளர்களின் ஆட்சிமுறை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை வாசகர்களின் சிந்தனைக்கு விட்டுவிடுகின்றேன். இதனையெல்லாம் தமது ஞானக் கண்ணினால் உணர்ந்த சம்பந்தர், நாட்டு மக்கள் அனைவரும் நல்லபடி வாழவேண்டும் என்ற உயரிய சிந்தனையோடுதான் "வேந்தனுமோங்குக" என்று பாடியிருக்க வேண்டும்.

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்"

என்ற ஔவைப் பாட்டியின் பாடலும், சம்பந்தருடைய பாசுரத்திற்கு அணி செய்வதை நினைவு கூர்வது பொருத்தமானதாக அமையும் என எண்ணுகின்றோம். மேலும்,

"ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந்துயர் தீர்கவே"

என்பது பாசுரத்தின் மூன்றாம் நான்காம் அடிகளாகும். மூன்றாவது அடியிலே "ஆழ்க தீயதெல்லாம்" என்கின்றார். தீய செயல்கள் எல்லாம் அழிந்துபோகட்டும். நல்ல செயற்பாடுகள் நன்றாக வளரட்டும். ஆயினும் இன்று நாட்டிலே எது நடக்கக்கூடாதோ, எது மக்கள் இனத்திற்கு தீங்கு பயக்கின்றதோ, அவ்வாறான செயல்களே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்"

என்ற வள்ளுவரின் கருத்துக்கமைய, தீய செயல்களை செய்வதன்மூலம், தீமையே உண்டாகும். அவை நெருப்பிலும் பார்க்கக் கொடியது, என்ற வள்ளுவரின் கருத்தை அடியொற்றி "தீயவை ஆழ்க" என்று சம்பந்தர் பாடியிருப்பது சிந்தனைக்குரியதொன்றாகவே உளங்கொள்ள வேண்டும்.

மேலும் "அரன் நாமம் இவ்வுலகில் சூழ்க" என்றார். அதாவது சிவபிரானது நாமமே இவ்வுலகை இட்டுச் செல்கின்றது. ஆகவே அவன் பெயரினை இவ்வுலகிலே நிலை நிறுத்துவோமாக.

இவ்வுலகில் பல்கோடி உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன இவ்வுயிர்கள் எல்லாவற்றையும் இறைவன்தான் படைத்தான் ஆயினும், ஒவ்வொரு உயிரும் தாம் தாம் செய்த நல்வினை தீவினை காரணமாக உழன்று கொண்டிருக்கின்றன. ஆயினும், இறைவன் இவ்வுயிர்கள்மீது வைத்துள்ள அன்பின் காரணமாக, இவ்வுயிர்களின் துயரினைப் போக்குவான் என்ற நம்பிக்கையுடன்தான் சம்பந்தர் "துயர் தீர்கவே" என்று பாடியிருக்கின்றார் என நம்ப இடமுண்டு.

ஆகவே பதினைந்து நூற்றாண்டுகள் கழிந்த பின்னருங்கூட திருஞானசம்பந்தரால் அருளப்பட்ட பாசுரங்கள் சிந்தனைக்குரிய ஒன்றாகவே அமைந்துள்ளன என்பதை யாரும் மறுதலிக்கமாட்டார்கள். தமிழ் வேதம் எனப் போற்றப்படும் நாயன்மார்களினால் இயற்றப்பட்ட பஞ்ச புராணங்கள் யாவும் சைவ மக்களுடைய தனிப்பெரும் சொத்துக்கள் என்பதை நாம் உணர்ந்து, அவற்றின் வழி எமது வாழ்க்கையை இட்டுச்சென்று விமோசனம் பெறுவோமாக.

**தேன் உள்ள மலரைக் கண்டுபிடிக்கத் தெரியாத தேனீக்கு பட்டினிதான் பரிசு.**

உ

# சத்தியமே சாயி...

திரு செ. ரவிசாந் அவர்கள்

சத்தியமே சாயி மந்திரம்
சாந்தமே சாயியின்
முகவடிவம்
புட்டபர்த்தி தந்த மகான்
பொங்கும் புதுப்புனலாய்
ஒளிர்ந்த ஒளிவிளக்கு
ஓங்காரத்துள்ளொளியில்
ஒன்றிவிட்ட செய்தி கேட்டு- இந்த
உலகமே கண்ணீர் வடிக்கிறது
மதங்களைக் கடந்த
மகாஞானியாய்;
தவப்பேறில் வல்ல
தத்துவக் கடலாய்;
மக்கள் மனங்களில்
நீங்காத இடம்பிடித்த
உங்கள் அமுதமொழிகள்
காலங்கள் பல சென்றாலும்
எங்கள் கருத்தினிலே
இடம்பிடிக்கும்
இது உறுதி......!
எளிமையான கோலமும்
இயல்பான எழில்ஞானமும்கொண்டு
தூய துறவறம் காத்த
சுடர் ஒளி விளக்கே!
சாயி அறக்கட்டளை மூலம்
தாரணி சிறக்க
நீங்கள் சாற்றிய
மக்கள் நலப்பணிகள்
ஒன்றா! இரண்டா!
சாக்கடையில் நீந்தும்
போலிகள்
வாழும் உலகில்



சற்றும் தளராத வகையில்
தெய்வப் பணியுடன்
சமூகப் பணிகளுமாற்றிய
வித்தகரே!
அருள் சுரக்கும் உங்கள்
அற்புதங்களும்;
அறவழிமிகு
ஆன்மீகச் சிந்தனைகளும்;
நடமாடும் நூலகமாய்
நம்முன்னே உம்மை
நடமாட வைத்ததுவோ!
“மானிட சேவையே
மாதவன்சேவை” என்று
மண்ணில்நல்ல வண்ணம்
மாசில்லாமல் வாழ்ந்து
காட்டிய வள்ளலே!
ஏழைகளின் இதயத் தெய்வமாய்;
நடமாடும் அவதார புருஷராய்;
சொல்லால், அருட்செயலால்;
சமூகத் தொண்டால்;
வெல்லா மனங்களையும்
வென்று காட்டிய
விரிசடை ஏந்தல்
சத்திய சாயி பாபா
கடவுளின் அழைப்பை ஏற்று- இன்று
மகாசோதியில் கலந்தாரோ!
மண்ணைவிட்டு உங்கள்
உடல் மறைந்தாலும்
எங்கள் உணர்வோடு கலந்து
வழிநடாத்த உங்களை அழைக்கிறோம்
மண்ணும் விண்ணும் உள்ள வரை
வாழிய சாயி திருநாமம்!

கடமை என்னுடையது பலன் ஆண்டவனுடையது.

உ




"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் வாக்கு. அதனடிப்படையில் எமது வாழ்வை நாம் அமைத்துக் கொள்வோமானால் வாழ்வு நலம் பெறும். இதனைக் கருத்திற்கொண்டு எமது வாழ்க்கை முறையினைப் பேணி வருதல் ஒவ்வொரு மனிதரும் கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும். இந்நிலையினைக் கடைப்பிடித்து எமது சரீரத்தின் மூலம் பல நற்காரியங்கள் செய்துவருவோமானால் அதனால் உண்டாகும் பயனை நாம் மட்டுமல்ல, நம்மைச் சார்ந்த சமூகமும் பெற்று நன்மையடையும். இவ்வகையான சரீரத்தொண்டு புரிந்த அப்பர் பெருமானின் வாழ்க்கை வரலாறு (திருநாவுக்கரசு நாயனார்) எமக்கு ஒரு படிப்பினையாக விளங்குகின்றது.

இவ்வகை நற்செயல்களைச் செய்யும் போது நாம் முற்பிறப்பில் செய்த ஊழ்வினைப் பயனின் பிரதி பலனாக பலவித துன்பங்களுக்குள் ஆட்பட்டு வருந்துவதை கண்கூடாகக் காண்கிறோம். அப்படி வருந்தும் போது இறைசிந்தனை எமக்கு ஏற்படுமானால் நம்மைப் பீடித்திருக்கும் அத்துன்பத்தினின்றும் சிறிது சிறிதாக விடுபடலாம்.. இக்கருத்தினை வலுப்படுத்தும் முகமாகவே, நாம் இத்தொடரினுள் நுழைகின்றோம்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமானது ஒரு வைத்தியசாலைக்குச் சமமானது. சந்நிதியானைத் தரிசிக்க வரும் அடியார்கள், ஏதோ ஒருவித மனக்குறையுடன் வருவதை நாம் காண்கிறோம். அதிலும் குறிப்பாக தேக ஆரோக்கியம் நலிவுற்றவர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து, ஆற்றில் நீராடி, சந்நிதியானது மருந்தாகப் பயன்படும் பிரசாதங்களை பய பக்தியுடன் வாங்கி, அதனை உட்கொண்டு தமது தேக சுகத்தை வளப்படுத்துகிறார்கள். இவ்வகை தேக ஆரோக்கியம் குறைந்தவர்கள் ஒரு சில வாரங்கள் ஆலயத்தில் தங்கி

இருந்து இந்நடைமுறையினைக் கைக் கொண்டு பூரண சுகத்துடன் வீடு திரும்புவர். ஒரு சிலரது உடற் பிணியின் தாக்கம் நீடித் தாலும், "சந்நிதியான் தீர்த்து வைப்பான்" என்ற நம்பிக்கையுடன் சந்நிதிச் சூழலில் தங்களாலியன்ற சரீரத் தொண்டுகள் புரிந்து கொண்டு இருப்பதையும் நாம் காணக் கூடிய தாக இருக்கின்றது. அவ்வகையான தீவிர நம்பிக்கையுடன் இருப்பவர்கள் காலக்கிரமத் தில் சந்நிதியானது அருளால் பூரண சுகத் துடன் வீடு திரும்புவதை பலரது அனுபவ வாயிலாக நாம் அறிகின்றோம்.

ஆம்! மேலே நாம் விபரித்தபடி "சந்நிதியான் தனது உடற்பிணியை நீக்கு வான்" எனும் தீவிர நம்பிக்கையுடன் சந்நிதி யானிடம் அடைக்கலம் புகுந்தவர்தான் பருத் தித்துறை வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை யில் வசிக்கும் 48 வயதுடைய திரு கோபால சிங்கம் குணபாலன் அவர்கள். அவரது இள மைப் பருவத்தில் சுகதேகியாக வாழ்ந்தாலும் 40 வயதளவில் இருதய நோய் அவரை வாட்ட ஆரம்பித்தது. அதன் பயனாக பாரிச வாதம் ஏற்பட்டு அவரது தேகத்தின் இடப் பாகம் செயலிழந்து, அதன் காரணமாக அவ ரது இடதுகால் முற்றாக செயலிழந்து விட் டது. தனக்கு ஏற்பட்ட நோயின் தாக்கத் தினின்று மீண்டு வரும்பொருட்டு யாழ்ப்பாணம், மந்திகை, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற் றும் சுகம் வராத நிலையில் "வைத்தியனாக இருந்து அருள்பாலிக்கும் ஆற்றங்கரை வேலவனிடம் சென்று முறையிடு" என்று பல முதியோர்கள் கூறியதற்கிணங்க சந்நிதி வேல வனிடம் அடைக்கலம் புகுந்தார்.

2009 ஆவணி சந்நிதிவேலவனது உற்சவ காலத்தையொட்டி பக்கவாதத்தால் பாதித்திருந்த குணபாலன் சந்நிதி ஆல யத்தை நாடி வந்திருந்தார். அக்காலப்பகுதி யில் ஆலயத்தில் உள்ள முதியவர்களோடு ஆச்சிரமத்தை நாடி வந்து உணவு உண்பது அவரின் செயற்பாடாக இருந்தது. உண்மை யில் அவர் ஊன்றுதடியுடன் வருவதைப் பார்ப் பவர்கள் அதிர்ச்சி அடைவார்கள். ஒரு காலை வளைத்து உள்வாங்கி மறுகாலை முன் வைத்து வரும்போது எங்கே விழுந்து விடு வாரோ என்ற பயம் எமக்கு ஏற்படும். அவரது இந்நிலையினைக் கண்ட ஆச்சிரம சுவாமிகள் மதிய நேர உணவுக்கு மட்டும் நேரே வரும் படிக் கூறியதோடு மற்றைய நேரங்களில் ஆச்சிரமத்தால் வழங்கும் உணவு தேனீர் போன்றவற்றை ஒரு சில அன்பர்கள் மூலம் அவரது இருப்பிடத்திற்கு அனுப்பியும் வைப்பார்.

சந்நிதி வேலவன் தனக்கு ஏற்பட்ட நோயினைத் தீர்த்து வைப்பான் என்ற திடநம்பிக்கையுடன் சந்நிதி ஆலயத்தை நாடிவந்த குணபாலன் தினமும் அதிகாலை சந்நிதி ஆலய வீதியினைக் கூட்டித் தண்ணீர் தெளிக்கும் அடியார்களோடு தாமும் ஒரு வராக நின்று தன்னால் இயலக்கூடிய தொண் டினைச் செய்து வரலானார். தினந்தோறும் அதிகாலை செய்யும் அவரது சரீரத் தொண் டானது சந்நிதியானுக்கு உகந்ததாகவே மாறி விட்டது. அதன் பயன் ஆரம்ப காலங்களில் ஊன்று தடியுடன் நடந்தவர் தடி இல்லாமலே நடக்க ஆரம்பித்தார். அதோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. காலை வேளையில் தனது பணியினை முடித்து ஆற்றில் தோய்ந்து காலைப்பூசையின் பின் வழங்கும் சந்நிதியானது மருந்து என்று கூறப்படும் அமு தினை வாங்கி உண்பதோடு வேலவனின் மூலஸ்தானத்தில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் குத்துவிளக்கில் உள்ள எண்ணையை ஆலய பூசகர்களிடம் வாங்கி

அறத்தை விளங்கவைப்பது அன்பு.

பாதிக்கப்பட்ட காலுக்கு பூசி வருவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். அதன் பயன், நாம் எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் அவரது இடதுகாலில் ஏற்பட்டிருந்த தாக்கம் படிப்படியாக நீங்கியது.

சந்நிதி முருகன் தனது குறையை நீக்குவான் என்ற ஒரே சிந்தனையுடன் சந்நிதி ஆலயத்திற்கு வந்திருந்த குணபாலன்மீது சந்நிதி வேலவன் தனது அளவுகடந்த அருட் பிரவாகத்தை செலுத்தி அவரைத் தன் மீளா அடியாராக ஆக்கிக் கொண்டான். இன்று அவர் பெண்களுக்குரிய துவிச்சக்கர வண்டியினைச் செலுத்திக்கொண்டு போவதைப் பார்க்கும் நாம் இவரா கடந்த $1^1/_2$ வருடகாலம் பாரிசவாதத்தால் நடக்க முடியாமல் இருந்தவர் என்று நம்பமுடியாமல் உள்ளது. அவர், தான் முன்பு நிலத்தில் இருந்து கொண்டு செய்த சரீரத் தொண்டினை மற்ற அடியார்கள் போல் ஓடித்திரிந்து செய்வதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இன்றும் அவரை சந்நிதிச் சூழலில் காணலாம். இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணம் சந்நிதியானே. அவனருளாலே அவன் தாள் வணங்குவோம்.

ஓம் முருகா!

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட தினங்கள்

**ஆடி, ஆவணி**

**01.07.2011** — **ஆனி 16 வெள்ளிக்கிழமை**
வேல் அனுப்பும் உற்சவம் மாலை
கதிர்காமக் கொடியேற்றம்

**04.07.2011** — **ஆனி 19 திங்கட்கிழமை**
தீர்த்தமெடுப்பு


**07.07.2011** — **ஆனி 22 வியாழக்கிழமை**
ஆனி உத்தரம்

**11.07.2011** — **ஆனி 26 திங்கட்கிழமை**
ஆனிப்பொங்கல்

**25.07.2011** — **ஆடி 09 திங்கட்கிழமை**
கார்த்திகை விரதம்

**30.07.2011** — **ஆடி 14 சனிக்கிழமை**
ஆடி அமாவாசை விரதம்

**29.08.2011** — **ஆவணி 12 திங்கட்கிழமை**
செல்வச்சந்நிதி கொடியேற்றம் காலை 09மணி)




**சிந்திக்காது எதையும் சொல்லாதே.**

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# கொடுமாடச் செங்குன்றூர் திருச்செங்கோடு

வல்லவையூர் அப்பாண்ணா அவர்கள்



ஆணொரு பாதியும் பெண்ணொரு பாதியுமாக அகிலத்தின் ஆதார உண்மையை வெளிப்படுத்தும் வடிவங்கொண்டு ஆண்டவன் அருளும் இடம் "திருச்செங்கோடு". பாகம்பிரியாளாக உமைப்பிராட்டியும், மாதொரு பாகனாக அப்பனும் காட்சி தரும் இடம் இது. "உயர்ந்த மாடங்கள் கொண்ட செந்நிறமான ஊர்" எனப் பொருள்பட 'கொடுமாடச் செங்குன்றூர்" எனும் பெயரே இதன் ஆதிப்பெயராகும். திருஞானசம்பந்தர் பாடிய செங்குன்றூர்ப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலதும் 3ஆவது வரியின் இறுதியில் "கொடுமாடச் செங்குன்றூர்" எனக் குறிப்பிடுவதை இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். அருணகிரிநாதர் காலத்துக்குச் சற்று முன்பாக இவ்விடம் "திருச்செங்கோடு" என வழங்கப்படுவதை திருப்புகழ்- கந்தரலங்காரம்- கந்தரநுபூதி ஆகியவற்றிலுள்ள சொற்பிரயோகங்களிலிருந்து அறிய முடிகிறது.

இது ஒரு கொங்கு நாட்டுத் தலம். கொங்கு நாடு பல்வேறு காலகட்டங்களில் சேர- சோழ- பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்திருக்கிறது. கடல் மட்டத்திலிருந்து 1900 அடி உயரத்திலுள்ளது இச்செந்நிற மலை. கீழே ஊர்மனையிலிருந்து பார்த்தால் மலை செந்நிறமாகத் தெரிந்ததால் இது "திருச்செங்கோடு" ஆயிற்று. அத்துடன் மலை நாகம் போன்றதொரு அமைப்பினை ஒத்திருப்பதால் நாகசலம், நாககிரி என்றும் பெயர்கள் உள. ஈரோடு மாவட்டத்தில்- ஈரோட்டிலிருந்து 18 கீ.மீ தூரத்திலும், நாமக்கல்லிலிருந்து 32கி.மீ தூரத்திலும் திருச்செங்கோடு உள்ளது. சேலம், ஈரோடு நாமக்கல் முதலான ஊர்களிலிருந்து அடிக்கடி பேருந்து வசதியுண்டு.

**இறைவன்: அர்த்தநாரீஸ்வரர்**

**இறைவி: பாகம்பிரியாள்**

**முருகன்: செங்கோட்டு வேலன்**

**தலமரம்: இலுப்பை**

**காதைப் பிடித்து இழுத்தால் தலை பின் தொடர்ந்து வரும்.**

கீழே ஊருக்குள் பரிமளவல்லி உடனுறையும் கைலாசநாதர் திருக்கோயில் ஒன்றுண்டு. கைலாச நாதருக்கு **'நிலத்தம்பிரான்"** என்றும், மலைமீதுள்ள அர்த்த நாரீஸ்வரருக்கு **'மலைத்தம்பிரான்"** என்றும், திருநாமங்கள் உண்டு. இந்த மலைத்தம்பிரான்" கோயிலில் உள்ள அர்த்த நாரீஸ்வரர், செங்கோட்டு வேலவர், ஆதிகேசவப் பெருமாள் ஆகிய மூன்று பிரதான மூர்த்தங்களுக்கும் தனித் தனிச் சந்நிதிகளும், உற்சவ மூர்த்தங்களும் உள்ளன. அர்த்தநாரீஸ்வரர்- செங்கோட்டு வேலவர் இருவரதும் மூலத் திருவுருவங்கள் வெண்ணிறப் பாஷாணத்தாலானதாகக் கோயிற்குறிப்புக் கூறுகிறது.

மலை அடிவாரத்திலிருந்து கோயில் செல்ல இரு பாதைகள் உண்டு. மொத்தம் 1200 படிகள் கொண்ட கற்பாதை ஒன்று. மற்றது- வாகனப் போக்குவரத்துள்ள ஒடுங்கிய-தார் வீதியுடனான மலைப்பாதை ஒன்று. மலைப்பாதையில் தேவஸ்தானப் பேருந்துகள் இரண்டு கீழே அடிவாரத்துக்கும் மேலே கோயிலுக்கும் இடையே மாறிமாறி ஓடிக்கொண்டிருக்கிறது. வேறு பேருந்துகள் எதுவும் மேலே செல்ல அனுமதி இல்லை. தனியார் கார், வான் முதலியனவும், மோட்டார் சைக்கிளும் மேலே செல்ல அனுமதிக்கிறார்கள். படியேறிச் செல்ல நிரம்பிய விருப்பம் இருந்தபோதும் அடியேனின் உடல்நிலை இடம் தராததால் வாகனப் பாதையிலேயே நாமும் பயணிக்கும்படியாயிற்று. முக்கி- முனகி மேலேறிச் செல்லும் வாகனத்தில் இருந்தபடி நமது இடது கைப்பக்கமாகக் கீழே பார்த்தால் பயம் பற்றிக்கௌ்கிறது. இருதய நோயாளிகள் கீழே எட்டிப் பார்க்காமல் மூச்சைப் பிடித்தபடி இருப்பதே நல்லது. வாகனப் பாதையால் நம்மைச் சுமந்தபடி வந்த வாகனம் மூன்று நிலைகள் கொண்ட மேற்குப் பார்த்தபடியுள்ள கோபுர வாசலை அண்மித்ததும் தன் மூச்சை நிறுத்திக்கொண்டது. மேற்குக் கோபுரம் கோயிலின் பிரதான வாசலாக இல்லாத காரணத்தினால், விறுவிறுவென நடந்து 1200 படிகள் கொண்ட கற்பாதையின் முடிவில் அமைந்துள்ள ஐந்து நிலைகள் கொண்ட வடக்குக் கோபுரத்துக்கு வருகிறோம். மாலைப் பூசையினைக் காண விரும்பிப் படியேறி வரும் சில பக்தர்களைக் காண்கிறோம். நெற்றி நிறைந்த திருநீறு பூசி வேட்டி சால்வையுடன் (தமிழ்நாட்டுக் கோயில்களில் வேட்டி சால்வையுடன் பக்தர்களைக் காண்பதரிது. சுசீந்திரம் இதற்கு விதிவிலக்கு) ஒரு நடுத்தர வயதுக்காரர் மிக்க ஆயாசமாகப் படியேறி வருகிறார். அவரிடம் பேச்சுக் கொடுத்தபோது பயனுள்ள பல தகவல்களையும் தந்தார். ஐந்து நிலைகொண்ட வடக்குக் கோபுரம் நிறைந்த சுதைச் சிற்பங்களோடு அழகாக ஜொலிக்கிறது. இப்போது மீண்டும் மேற்குக் கோபுர வாசலினூடாக உள்நுழைந்து நமது திருக்கோயிற் சுற்றை ஆரம்பிக்கிறோம்.

இருபது படிகள் கீழிறங்கி வந்துதான் சந்நிதிகளுக்கும் பிரகாரங்களுக்கும் செல்ல வேண்டும். இந்த இடத்தில் ஒரு விடயத்தினைக் குறிப்பிட வேண்டும். மற்றைக் கோயில்களைப் போன்றதான சமதளப் பிரகார அமைப்பு இங்கில்லை. மலையுச்சியின் ஒரு பகுதியினை உடைத்துக் கல்லெடுத்துச் சமன் செய்து சிறிய பரப்பளவில் பிரகாரத்தையும் சந்நிதிகளையும் ஆக்கியுள்ளனர். அதனால் சில இடங்களில் இறங்கியும், ஏறியும், ஒடுங்கிய சந்துக்களுடனும், சரிவான நடைபாதையுடனும் சுற்றுப்பிரகார அமைப்புக் காணப்படுகிறது. இருபது படிகளிலும் கீழிறங்கி வர ஒரு பரந்த மண்டபம் வருகிறது. நேராக இருப்பது செங்கோட்டு வேலவர்

**ஆணுக்குப் போர் எப்படியோ, அப்படியே பெண்ணுக்குப் பிரசவம்.**

சந்நிதி. கிழக்குப் பார்த்தபடியான செங்கோட்டு வேலவர் ஒரு பீடத்தின் மேலாக, நின்ற திருவுருவில் அருள் பாலிக்கிறார். வலது கை வேலைத் தாங்கியபடி இடது கை ஒரு சேவலை அணைத்து இடுப்பில் வைத்தபடி சர்வ அலங்காரத்துடன் கூடிய வேலவன் தலையில் ஜடா முடியுடன்- நெற்றியில் நிறைந்த சந்தனப் பொட்டு- வாய் கொள்ளாப் புன்சிரிப்புடன் தரிசனம் தருகிறார் வெள்ளைப் பாஷாணத்தினாலான செங்கோட்டு முருகன். "செங்கோடன் அழகினை அள்ளிப்பருக நாலாயிரம் கண்கள் வேண்டுமே! இரு கண்களுடன் என்னைப் படைத்த பிரம்மனுக்கு இத்தனை ஓர வஞ்சனையா?" என அங்கலாய்க்கிறார் அருணகிரிநாதர்.

**"மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு**
**மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்**
**சேலார் வயற்பொழிற் *செங்கோடனைச்* சென்று கண்டு தொழ**
**நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே!**

-கந்தரலங்காரம். 90ஆவது பாடல்-

அருகிலேயே உள்ள வள்ளி- தெய்வானை சமேத முருகப் பெருமானே உற்சவ மூர்த்தமாவார்.

மண்டபத்தில் மேற்கு நோக்கிய சந்நிதியில் மூலவர் அர்த்தநாரீஸ்வரர் நின்ற திருமேனியுடன் அருள் பாலிக்கிறார். மாதொரு பாகனின் முன்புறம் வாயில் அமைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக மேற்குச் சுவரில் ஒன்பது துவாரங்களுடன் கூடிய கற்பலகணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் துவாரங்களினூடாகவே இறைவனின் தரிசனம் பெறலாம். நமது அதிஷ்டம்! பூசகர் உட்செல்லும் பக்கவாட்டு வாசலினூடாக நம்மை உள்ளே அழைத்து பஞ்சதீபம் காட்டுகிறார். தீப ஒளியில் அர்த்தநாரீஸ்வரரின் அற்புத அமைப்பு தெளிவாகத் தெரிகிறது. வலது செவியில் மகர குண்டலம் அசைய, இடதுபுறம் இரத்தினக் கற்கள் பதித்த தோடு மின்னுகிறது. புலித்தோலாடை வலது பாகத்தையும், சிவப்பு நிற ஜரிகைச் சேலை இடது புறத்தையும் மூடி நிற்கிறது.

ஒருபக்க மார்பில் முப்புரி நூல் தவள்கிறது. இடது புற சேலைக்கு மேலாக அம்பிகையின் ஒற்றை மார்பகம் புடைத்துக் காணப்படுகிறது. பாதங்களை மூடியுள்ள வஸ்திரங்களைச் சற்றே விலக்கித் தீப ஒளியில் பாதங்களைக் காட்டுகிறார் பூசகர். வலது காலில் வீரக் கழலும் இடது காலில் சிலம்பும் விளக்கொளியில் தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு, கழுத்துக்குமேலே அருவமும் உருவமும் கலந்த அருவுருவமாகவும், கழுத்துக்குக் கீழே பாதி அம்பிகையினதும் பாதி அப்பனுடையதுமான அலங்காரமுமாயுள்ள அர்த்தநாரீஸ்வரரின் தோற்றப் பொலிவுகண்டு மெய்மறந்து தியானிக்கிறோம்.

அர்த்தநாரீஸ்வரரின் உற்சவத் திருமேனியும் மிக அற்புதமானது. எவ்வித அலங்காரமுமில்லாத இந்தப் பஞ்ச உலோகத் திருமேனியை மிகக் கிட்டிய தூரத்திலிருந்தே பார்க்க முடிந்தது. ஒரு பாதிப் பிறைச் சந்திரனைத் தாங்கிய ஜடாபாரம்- மறுபாதி அம்பிகைக்குரிய ஜடை அமைப்பு. இரு கண்களிலும்கூட வித்தியாசம் தெளிவாகத் தெரிகிறது. வலது பாகத்தில் தண்டாயுதம் ஏந்திய கை- இடது கை (நிறைந்த வளையல்களுடன்)

**பூனை முட்டாளாக இருந்தால் அதை எலி விரட்டியடித்துவிடும்.**

பெண் பாகத்து இடுப்பில் ஊன்றியபடி. மார்பின் பெண்பாகத்தில் பருத்த கொங்கை. திருவடிகள் ஒன்றில் சிலம்பு- மற்றயதில் கழல்.

நல்ல குண இயல்புள்ள கணவன் கிடைக்க வேண்டும்- கிடைத்த கணவன் நீண்ட ஆயுளுடன் இருக்கவேண்டும் எனப் பெண்கள் கொள்ளும் விரதங்களுள் தலையாயது கேதார கௌரி விரதம். இந்த விரதத்தினை முதன்முதலில் ஆரம்பித்தவரே அம்பிகைதான். பிருங்கி முனிவர் சரிதமும், அம்பிகை காஞ்சி மாவடியின்கீழ் கடுந்தவம் புரிந்து இறைவனிடம் இடப்பாகம் பெற்று பாகம்பிரியாளாக- அர்த்தநாரீஸ்வர மூர்த்தமாக அமர்ந்து கொண்டதும் அனைவரும் அறிந்த கதை. இடப் பெறுமதி கருதி அதனை யான் இங்கு விரிக்கவில்லை. கேதார கௌரி அம்பாளுக்குத் தனிச் சந்நிதியும், உற்சவமூர்த்தமும் இங்குண்டு.

செங்கோட்டு வேலவர் சந்நிதி, மூலவரான அர்த்த நாரீஸ்வரர் சந்நிதி இரண்டுக்கும் முன்பாக உள்ள மண்டபத்தின் தூண்களிலும் மேல் விதானத்திலும் அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடுகளின் அமைப்பையும் அழகையும் ரசித்தபடியே இருக்கலாம். தூண்களில் உள்ள, அர்ச்சுனன் தவம்- வேடன்- குருவிக்காரி போன்ற சிற்பங்கள் அழகே உருவானவை. மேல் விதானத்து மையத்தில் ஒரு சிறிய சதுரக்கல். நான்கு மூலைகளிலும் தொங்கும் சங்கிலிகள். மேலிருந்து புடைத்திருக்கும் தாமரைப் பூ. அதன் இதழ்களில் அமர்ந்திருந்து மகரந்தத்தை ருசிக்கும் எட்டுக் கிளிகள். கிளிகளுக்குக் காவலாக நான்கு பாம்புகள். இத்தனையும் என்ன? வர்ணச் சித்திரமா? இல்லை... வண்ண வண்ண ஓவியமா? இல்லவேயில்லை.... பின் வேறென்ன? தலைகீழான கற்சிற்பங்கள்... நம்ப முடிகிறதா? சங்கிலி, தாமரைப்பூ, கிளிகள், பாம்புகள் இத்தனையும் அந்த சிறிய சதுரக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள விதம்! ஆஹா! எப்படி வர்ணிப்பேன்? வார்த்தைகள் வரவில்லையே!

மண்டபத்தின் பக்கமாக அருள்மிகு நாகேஸ்வரர் (சிவலிங்கத் திருமேனியாக) தனிச் சந்நிதியில் அமர்ந்துள்ளார். சுற்றுப் பிரகாரத்தில் வரிசையாக அறுபத்துமூவர், நிருதி விநாயகர், குன்றீசர், ராமநாத சுவாமி, பஞ்சலிங்கங்கள், காலபைரவர் எனத் தனிச் சந்நிதிகளில் உள்ளனர். மேற்குக் கோபுர வாசலருகே (நாம் உள்ளே வந்த வாகனப் பாதை) நாச்சாரம்மன், ஜேஷ்டாதேவி, செல்வவிநாயகர், மல்லிகார்ச்சுனா, கிழக்குப் பார்த்த சகஸ்ரலிங்கம் தனிச் சந்நிதிகளில் உள்ளனர். சற்றுத்தள்ளி ஸ்தலத்தின் விருட்சமான பெரிய இலுப்பை மரம். அருகில் காசி விசாலாட்சி; தெற்குப் பார்த்தபடியான நடராஜர் சந்நிதி. சனி பகவானுக்கும் தனிச் சந்நிதி உண்டு.

திருஞானசம்பந்தர் மலைமீதமர்ந்துள்ள மங்கை பங்கனை முதற்தடவை தரிசிக்க வந்தபோது பாடியருளிய திருப்பதிகம் “வெந்த வெண்ணீறணிந்து....” எனும் பதிகமாகும். பின்னர், சுற்றுச் சூழவுள்ள கோயில்களைத் தரிசித்து மீண்டும் வந்து திருச்செங்கோட்டினில் சில காலந் தங்கினார். பருவ மாற்றத்தின் காரணமாக அவ்வூர் மக்களிடையே பரவிய குளிர்சுரம், சம்பந்தருடன் கூடவே யாத்திரை செய்து வந்த அடியார் கூட்டத்தினரையும் பற்றிக்கொண்டது. சம்பந்தப் பெருமான் “அவ்வினைக் கிவ்வினை.....” எனும் திருநீலகண்டப் பதிகம் பாடி வணங்கி மக்களையும் சிவனடியார்களையும் பீடித்த குளிர் சுரத்தை நீக்கியருளிய அற்புதம் இங்கேதான் நிகழ்ந்தது.

**தலைசிறந்த மரணத்தைவிட மட்டமான வாழ்க்கையே மேலானது.**

கோயிலின் கிழக்குத் திசையில் இன்னமும் 350அடி உயரத்தில் உள்ள குன்றின் உச்சியில் பாண்டீஸ்வரர் கோயில் தெரிகிறது. கற்பாதை வழியாக ஒருசிலர் ஏறி இறங்குவதையும் பார்க்க முடிகிறது. அங்கிருந்தபடியே பாண்டீஸ்வரர் கோயில் உள்ள திசை நோக்கி கரம் கூப்பி வணங்குகிறோம். செங்கோட்டு வேலவர், அர்த்தநாரீஸ்வரர், ஆதிகேசவப் பெருமாள் மூவரையும் மீண்டும் மனதிற்கொண்டு விடைபெற்றுக் கீழிறங்குகிறோம். வாகனத்தில் மேலேறிய பயணத்தைவிட இறங்கும் பயணம் இன்னும் சிரமமாகவிருந்தபோதும் ஒருவாறு சமாளித்து மலையடிவாரத்தை அடைகிறோம். கற்பாதை படியருகே உள்ள ஆறுமுகசாமி சந்நிதானத்தையும் வணங்கிக்கொண்டு நமது அடுத்த திருக்கோயிற் பயணத்தைத் தொடருகிறோம்.

“அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்”

-சம்பந்தர்-

# பழனியாண்டவப் பெருமானே!



சமணசமயம் பரவிய வேளையில்
சமரச தெய்வமாய் நின்றவன் முருகன்!
சந்நிதியில் சமாதிகொண்ட சித்தர்
கட்கெல்லாம் முத்தியைத் தந்தவன்!
துறவறம் இல்லறம் இரண்டிலுமே
நாடகமாடி ஆண்டியகக் கோலம்கொண்டு
ஆற்றங் கரையிலுறைந்தருள்
பாலிக்கும் பழனியாண்டவப் பெருமானே!

-இராம ஜெயபாலன்-

இன்பமும் துக்பமும் விதியினால் அல்ல; நீயாகத் தேடிக்கொண்டவை.

உ

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

**01.07.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "முருகன் கழல் பெற்று உய்வாய்"

வழங்குபவர் :- சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்

(ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)

---

**08.07.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "பக்தியின் மகத்துவம்"

வழங்குபவர் :- யாழ் சின்மய நிறுவனத்தின் பிரம்மசாரி ஜாக்கிரத் சைதன்யா சுவாமி அவர்கள்

---

**15.07.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

---

**22.07.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

**29.07.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- சைவப்புலவர் திருமதி சசிலேகா அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி கௌரி சுரேசன் அவர்கள்

ஆடி 163ஆவது மலர்

(ஆசிரியர்)

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

